Volume : 7 Issue - 11

# வைகறை வெளிச்சம்

நவம்பர் : 2014 விலை : ரூ.20

ஆசிரியர் மு.குலாம் முஹம்மது முஹர்ரம் : 1436



முஸ்லிம்களின் பார்வையில்

## காவல் துறை முஸ்லிம்களுக்கு எதிரானது

## உழல் மயமானது

## காவல் துறை அதிகாரிகள் அறிக்கை



▲ எஸ்.ஐ. காளிதாஸ்



## எஸ்.பி,பட்டிணம் முஸ்லிம் இளைஞர் கொலை

## நடந்தது என்ன ?





## அல் அக்சா பள்ளிவாசல் ஆக்கிரமிப்பு

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# அன்பகம்

நெ.17, 3-வது குருக்கு தெரு, ஸ்ரீநகர் காலனி, கும்பகோணம்,
தஞ்சை மாவட்டம் - 312 001.

குடும்பத்தோடு இஸ்லாத்தை ஏற்றுக் கொள்பவர்களுக்கு ஓர் கல்வியகம் வேண்டும் என்ற குரல் இஸ்லாத்தை ஏற்றிடும் மக்களிடமிருந்து வந்தது.இந்த ஏக்கம் போக்கிடவே அன்பகம் எனும் கல்வி சாலை. இதற்கு முன் ஆண்களுக்கென ஒரு கல்வியகத்தையும், இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும் பெண்களுக்கென ஒரு கல்வியகத்தையும் மற்றும் பெண்கள் காப்பகத்தையும் உருவாக்கி நடத்தியவரை தலைவராகக் கொண்டு இயங்குகிறது இந்த அன்பகம். அல்ஹம்துலில்லாஹ்.

12-09-2007 முதல் கும்பகோணத்தில் ஓர் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது.
(அல்ஹம்துலில்லாஹ்)
குடும்பத்திலுள்ள ஒரு நபருக்கு ஆகும் செலவு ரூபாய் 3000/-.
மருத்துவ வசதிகள் உட்பட அனைத்தும் இலவசம்.

**அன்பிற்கினிய சமுதாய பெருமக்களே!**

இந்த பணிகளில் உங்களுடைய ஆலோசனைகளையும் உதவிகளையும் தாராளமாக வழங்குங்கள்.
இவை நமது பணி. நாம் அனைவரும் இணைந்து இந்த பணிகளை விரிவாக்குவோம், நிலைநிறுத்துவோம் இன்ஷா அல்லாஹ்.

**செக் / டி.டி. அனுப்புபவர்கள்**

## DARUL ISLAM FOUNDATION TRUST

என்ற பெயருக்கு எடுத்து , பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்.
52/1, மண்ணடி தெரு, 4-வது மாடி, அறை எண்.7, மண்ணடி, சென்னை - 600 001.
☎: 044 - 25224887 , ✆: 81481 29887

Please draw your cheqes/DD in favour of DARUL ISLAM FOUNDATION TRUST
canara bank A/C 1287101017301 Branch : St.Mary's Road, Royapettah, Chennai.
And send to : 52/1, Mannady St, 4rth Floor. Room No.7, Mannady,Cehnnai 600 001.
☎: 044 - 25224887 , ✆: 81481 29887

E-Mail : darultrust@yahoo.com, Website : www.darultrust.in



இறைவனின் அழகியத் திருப்பெயரால்

# இதழுக்குள்ளே........


கவர் ஸ்டோரி
காவல்துறை முஸ்லிம்களுக்கு எதிரானது!ஊழல் மயமானது! மூன்று காவல்துறை அதிகாரிகள் சமர்ப்பித்த ஆய்வுக் கட்டுரை............4



எஸ்.பி. பட்டிணத்தில் நடந்தது என்ன?.........9



என்கவுண்டர் என்ற எதிர்த் தாக்குதலில் காவல்துறை கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகள்................................13



உண்மை விளம்பி சுத்திரதீப் சக்கரவர்த்தி மரணம்!......21

தினத்தந்தியின் விஷமத்தனம்....................................25



முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்தது என்ன?.............27

எது முதலில்?...................................30



சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாதி நாதுராம் கோட்சே..............32

நான் ஏன் முஸ்லிம் ஆனேன்?...........42

அல் அக்ஸா பள்ளி வாசல் ஆக்கிரமிப்பு இரண்டாக்க திட்டம்.................................................48



மோடியின் அமெரிக்கப் பயணம் அற்புதமா? அவமானமா?....................57

பெருமானார் (ஸல்) அவர்கள் நமது காலத்திற்கு அனுப்பப்பட்ட நபி..............60


(நபியே!) நீர் சொல்வீராக! "இதுவே என்னுடைய (நேரிய) வழியாகும், நான் அல்லாஹ்வின் பால் (உங்களை) அழைக்கின்றேன், நானும் என்னைப் பின்பற்றியவர்களும் தெளிவான ஞானத்தின் மீதே இருக்கின்றோம், அல்லாஹ் மிகத் தூய்மையானவன், ஆகவே அவனுக்கு இணைவைப் போரில் நானும் ஒருவனல்லன்.

அல்குர்ஆன் : 12 : 108.

---


# வைகறை
## வெளிச்சம்

நவம்பர் - 2014

முஹர்ரம் - 1436

தனி இதழ் : ரூ.20/-

ஆண்டுச் சந்தா
உள் நாடு : ரூ.240/-
வெளி நாடு : ரூ.1500/-

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர் DARUL ISLAM FOUNDATION TRUST என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம். இன்ஷா அல்லாஹ்.



ஆசிரியர்
மு.குலாம் முஹம்மது.
(Journalism & Mass Communication)

துணை ஆசிரியர்
கே.எம். இலியாஸ் ரியாஜி.M.A

52/1, Mannady St, 4th Floor,
Room No.7, Mannady,
Chennai 600 001.
Tel : 044 25224887
Mob: 81481 29887
E-Mail : darultrust@yahoo.com
Web : www.darultrust.in



All disputes arising out of any publication in this monthly will come under the jurisdicaion of Chennai courts. Privet circulation to promote the original issue.


http:/www.facebook.com/vaigaraivelicham

தலையங்கம்

# நினைவுகளும்! சின்னங்களும்!

நேருவைத்தான் கொன்றிருக்க வேண்டும்! காந்தியைக் கொன்றதற்கு பதிலாக என்றொரு கூப்பாடு கொலைகார பாசிச பரிவாரத்திடமிருந்து வந்தது நாட்டில் பரபரப்பை ஏற்படுத்தியது.
[ ஆர்.எஸ்.எஸ் இன் ' கேசரி '. பி. கோபால கிருஷ்ணன் கட்டுரை ]

அடுத்து காந்திஜியின் பிறந்த நாளான அக்டோபர் 2ஆம் நாளைப் பின்னுக்குத் தள்ளி வல்லபாய் பட்டேலை உயர்த்திப்பிடிக்கும் பேதமைக்கு வெண்சாமரம் வீசப்படுகிறது.காந்தியை கொண்டாடுவதில் மோடி வகையராக்களுக்கு சில சங்கடங்கள் உண்டு. காரணம் காந்தியைக் கொன்றது இந்த பாசிச பரிவாரம்தான். இதனை கோட்சேயின் சகோதரர் கோபால் கோட்சே பெருமையோடு ஏற்றுக் கொள்கிறார்.நேரு நாள் தொட்டே காந்திஜி பிறந்த நாளுக்கு தரப்படும் விடுமுறைகளும் விழாக்களும் காந்தியின் உயிர் பறிக்கப்பட்ட ஜனவரி 30 க்குத் தரப்படவில்லை. மெல்ல மெல்ல காந்திஜியைக் கொலை செய்த நாதுராம் கோட்சேக்கு இந்திய நாட்டின் உயரிய விருதாக கருதப்படும் ' பாரத ரத்னா ' விருதை வழங்கும் காலம் வரலாம். இதை நாடாளுமன்றத்தில் எம்.ஐ.எம் கட்சியைச் சார்ந்த அக்பருதீன் உவைசி கூறினார்.

ஜன நாயகத்தின் பலவீனங்கள் அனைத்தையும் ஒட்டுமொத்தமாக பயன்படுத்தி ஏற்பட்ட விபத்தில் பிரதமர் இருக்கையில் இருக்கும் மோடிக்கோ அந்த பாசிச வகையறாவுக்கோ ஆங்கிலேயர்களுக்கு எதிராக நடந்த விடுதலைப் போரில் எள் மூக்கின் முனை அளவு கூட பங்கில்லை.அதே நேரத்தில் இவர்களுக்கு நேர் எதிரான ஒரு வரலாறு உண்டு. இந்திய சுதந்திர விடுதலைப் போரில் தங்களைத் தந்த மழவர்களைக் காட்டிக் கொடுத்த வரலாறுதான் அது. - இதில் 1941 இவர்களின் முன்னோடியின் வாஜ்பாய்க்கே ஒரு வரலாறு உண்டு. [ இதனை நாம் நமது எழுத்துக்களில் பெருமளவில் சுட்டிக்காட்டி இருக் கின்றோம்.]

அதே போல இவர்களுக்கு பிரிதொரு வரலாறும் உண்டு. அது ஆங்கிலேயர்களிடம் அடிக்கடி மன்னிப்புக் கேட்ட வரலாறு. இவர்களின் குரு. சாவர்கர் ஆங்கிலேயர்களுக்கு எழுதிய கடிதங்களே இதற்கு சாட்சி! அந்தமான் சிறையிலிருந்து அவர் ஆங்கிலேயர்களுக்கு எழுதிய கருணை மனுவில் ஆங்கிலேயர்களை இப்படி விழித்திருந்தார், ' The Mighty And Merciful ' [ பலமும் கருணையும் பொருந்திய ஆங்கிலேயர்களாம் ] சில மதங்களின் பக்தர்கள் தங்களின் இறைவனைத்தான் இப்படி விளித்து மன்றாடுவார்கல். ஆதாரம் சாவர்கரின் கருணை கோரும் மனு நவம்பர் 24, 1913.

இந்த சாவர்கரைப் பற்றி சுப்ராஜ் சன் தாஸ் குப்தா என்பவர் இப்படி பதிவு செய்கின்றார் : ' Veer Savarkar did. And by addressing the Colonial Oppressor as mighty and merciful, he initiated the RSS tradition of abject co - operation with the British ' அதாவது [ ஏனைய கைதிகள் செய்யாதவற்றை சாவர்கர் செய்தார். காலணியாதிக்க அடக்குமுறையாளர்களை பலமும், கருணையும் மிக்கவர்கள் என அழைத்து ஆங்கிலேயர்களுடன் கண்ணை மூடிக்கொண்டு ஒத்துழைக்கும் ஒரு பாரம்பரியத்தை தொடங்கி வைத்தார். ]
{ Source : Andaman and The Origins Of Hindutuva (as Quoted in Savarkar And Hindutuva by A.G.Noorani. Pages : 48,49 }

## இதற்கு நேர் எதிரான ஒரு வரலாறு.

இந்திய விடுதலைப் போரில் கலந்துக் கொண்டதற்காக இஸ்லாமிய மார்க்க அறிஞர் மௌலானா யஹ்யா அலீ, முஹம்மது ஷாஃபர் தானிசாரி, முஹம்மது ஜாஃபிகூரி, ஆகியோர் கைது செய்யப்பட்டு மரண தண்டனை தரப்பட்டார்கள். மரண தண்டனையை வழங்கிய நீதிபதி அவர்கள் இப்படிக் குறிப்பிட்டார்கள் :'You all will be hanged till death. Your Properties will be confiscated and your corpses will not be handed over to your relatives, instead you will be buried contemptuously in the jail compound ' [ நீங்கள் அனைவரும் சாகும் வரை தூக்கிலிடப்படுவீர்கள். உங்களுடைய சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும். உங்களுடைய உடல்கள் உங்களுடைய குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்படமாட்டாது. மாறாக உங்களுடைய உடல்கள் கண்டனங்களுடன் சிறையின் வளாகத்தில் புதைக்கப்படும். ] இத்தனையையும் செவிமடுத்த அந்த ஆலிம்கள் கண்ணீர் சிந்தவில்லை. கருணை கடாட்சம் வேண்டி கடிதம் எழுதவில்லை. மாறாக ஆனந்தமடைந்தார்கள். சந்தோஷப்பட்டார்கள். தங்களுக்கு கிடைக்கும் மரண தண்டனை மரணத்திற்கு பின் வரும் வாழ்க்கையில் சொர்கத்தை பெற்றுத்தரும் என்பதால். மரண தண்டனையை அவர்கள் கொண்டாடத் தலைப்பட்டுவிட்டார்கள். ஏனெனில் சொர்கத்தின் நேரடி நுழைவுச் சீட்டு அவர்களின் கையில் கிடைத்து விட்டது. இதனை அறிந்துதான் ஆங்கில நீதிபதி தனது தீர்ப்பை இப்படி எழுதினான் :

' You rejoice over the sentence of death and you look upon it as martyrdom. The government therefore have decided not to award you the punishment you like so much. The death sentence passed against you has been changed to that of transportation for life ' [ நீங்கள் மரண தண்டனை பெற்றதால் மகிழ்ச்சி அடைகின்றீர்கள். நீங்கள் அதனை வீர மரணம் என எடுத்துக் கொள்கிறீர்கள். அதனால் நீங்கள் அதிகமாக மகிழும் இந்த மரண தண்டனையை உங்களுக்கு வழங்குவதில்லை என முடிவு செய்து உங்களது தண்டனை ஆயுள் தண்டனையாக மாற்றப்படுகின்றது. ]
{Source : Role Of Muslims In The Struggle For Freedom (Muslims In India. Pages : 112,113.) }

பின்னர் இவர்களும் இவர்களுடன் விடுதலைப் போரில் கலந்துக் கொண்ட ஏராளமான முஸ்லிம்களும் அந்தமான் சிறைக்கு அனுப்பப்பட்டார்கள். அவர்களின் மரணமும் அங்கேயேதான் நிகழ்ந்தது. இதுபோன்ற எண்ணற்ற முஸ்லிம்கள் எந்த நினைவுச் சின்னங்களையும், சிலைகளையும், பாராட்டுக்களையும் எதிர்பார்க்கவில்லை. அவர்கள் தங்கள் இறைவனிடம் கிடைக்கும் நற்கூலிகளையே நாடி நின்றார்கள். எந்த ஒரு எதிர்ப்பார்ப்பும் இல்லாமல் தங்களை விடுதலைக்காகத் தந்தார்கள்.ஆனால் இது காட்டிக் கொடுத்த கலகக்காரர்களின் காலமாய்ப் போனது. இந்த நிலை மாற்றப்படவேண்டும்.இன்னொரு வரலாறும் இங்கே உண்டு அது இந்திய மக்களை மதமாச்சர்யம், மனமாச்சர்யம் ஆகியவற்றிற்கு அப்பால் நின்று ஒன்றிணைத்து ஒருமுகப்படுத்திய பெருமை பகதூர் ஷா ஜாஃபர் அவர்களுக்கு உண்டு. அவர்கள்தாம் 1857 இல் எல்லா இந்திய குடிமக்களையும் ஒன்று திரட்டி முதல் விடுதலைப் போரை நடத்திக் காட்டினார்கள்.அந்த தலைமை இங்கே வந்தால்தான் நிலைமை மாறும். எல்லா மக்களும் தங்களின் மத மாச்சர்யங்களுக்கு அப்பால் நின்று வாழ்வார்கள் - வாழவைப்பார்கள்.இன்ஷா அல்லாஹ் இவர்களை வழி நடத்திய இஸ்லாம் இங்கு நிலை நாட்டப்படும் வரை நமது கொள்கை பயணங்கள் தொடரும்.....

**[ அல்குர்ஆன் : 42 : 13 ]**

**நூஹுுக்கு எதனை அவன் உபதேசித்தானோ அதனையே உங்களுக்கும் அவன் மார்க்கமாக்கியிருக்கின்றான், ஆகவே (நபியே!) நாம் உமக்கு வஹீ மூலம் அறிவிப்பதும் இப்ராஹீமுக்கும் மூஸாவுக்கும் ஈஸாவுக்கும் நாம் உபதேசித்ததும் என்னவென்றால்: " நீங்கள் (அனைவரும்) சன்மார்க்கத்தை நிலை நிறுத்துங்கள் நீங்கள் அதில் பிரிந்து விடாதீர்கள் " என்பதே! இணை வைப்போரை நீங்கள் எதன் பக்கம் அழைக்கின்றீர்களோ அது அவர்களுக்குப் பெரும் சுமையாகத் தெரிகிறது தான் நாடியவர்களை அல்லாஹ் தன் பால் தேர்ந்தெடுத்துக் கொள்கிறான் (அவனை) முன்னோக்குபவரை அவன் தன் பால் நேர்வழி காட்டுகிறான்.**

முஸ்லிம்களின் பார்வையில்

கவர் ஸ்டோரி

# காவல்துறை முஸ்லிம்களுக்கு எதிரானது! ஊழல் மயமானது!

## மூன்று காவல்துறை அதிகாரிகள் சமர்ப்பித்த ஆய்வறிக்கை.

மூன்று காவல் துறை இயக்குனர்கள் இணைந்து ஓர் அறிக்கையை சமர்ப்பிக்கின்றார்கள்.

அந்த அறிக்கையை இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழின் மும்பை நிருபர் சுமிதா நாயர் இப்படி தலைப்பிட்டு எழுதினார் :

" முஸ்லிம்களின் பார்வையில் நாம் ( காவல் துறையினர் ) முஸ்லிம்களுக்கு எதிரான மாச்சர்யம் கொண்டவர்கள், வகுப்புவாதிகள், ஊழல்மயமானவர்கள் "

முஸ்லிம்கள் காவல்துறையை எப்படி பார்க்கின்றனர். அல்லது காவல் துறை முஸ்லிம்களை எப்படி பார்க்கின்றது என்பது குறித்த அறிக்கையை தயாரித்தவர்கள் மூன்று மாநிலங்களில் காவல்துறையை இயக்குபவர்கள். DGP Director General of Police. அவர்களில் ஒருவர் நமது தமிழகத்தின் காவல்துறை இயக்குநரான K. இராமானுஜம் ஆவார். காவல்துறையினர் முஸ்லிம்களை எப்படி நடத்துகின்றார்கள் என்பதை ஒன்றாக உணர்ந்த காவல்துறை இயக்குநர்களில் நமது இயக்குநரும் இருக்கின்றார் என்பது தமிழ் நாட்டை சார்ந்த நமக்குப் பெருமை சேர்க்கின்றது என்றாலும் கீழ்கடையில் என்ன நடக்கின்றது என்பது நம்மை நெகிழச் செய்கின்றது.

நமது காவல்துறை இயக்குநர் கே. இராமனுஜம் அவர்களுடன் இந்த அறிக்கையை அதாவது முஸ்லிம்கள் காவல் துறையை எப்படி பார்க்கின்றார்கள் என்ற அறிக்கையை - தயாரித்த இன்னும் இரண்டு காவல் துறை இயக்குநர்கள்:

1. திரு. சஞ்சீவ் தயால் இவர் மராட்டிய காவல்துறை இயக்குநராக இருந்தவர்.

2. திரு. தியோராஜ் நாகர் இவர் உத்திரபிரதேச காவல் துறையின் இயக்குநராக இருந்தவர்.

நடுவு நிலையான இந்த மூன்று உள்ளங்கைகளோடு ஒரு உளவுத்துறை அதிகாரியும் உண்டு. இவர்கள் 2013 ஆம் ஆண்டு இந்த அறிக்கை அவ்வாண்டு நடந்த அகில இந்திய இயக்குநர்களின் மாநாட்டில் சமர்ப்பித்தார்கள்.

முஸ்லிம்கள் காவல் துறையை எப்படி பார்க்கின்றார்கள் என்ற ஆய்வு சிறுபான்மையினர் விவகாரங்களில் காவல் துறையினரை அக்கறையுடன் நடந்துக் கொள்ள செய்திட ஒரு வியூகம்.

பல நல்ல பரிந்துரைகளை உள்ளடக்கிய இந்த அறிக்கையை இரவு நேர பாரதீய கட்சியாகிய காங்கிரஸ் அரசு, தன்னுடைய கல்லாப்பெட்டிக்குள் வைத்து இறுக்கப் பூட்டிப் போட்டு விட்டது. முஸ்லிம்களும், சிறுபான்மையினரும் மிகவும் குறைவாகவே காவல் துறையில், அங்கம் வகிக்கின்றார்கள். இதனால், அவர்களுக்கு காவல்துறை மீதுள்ள அவநம்பிக்கை அதிகரித்து வருகின்றது. அவர்களின் அவ நம்பிக்கையை உறுதிபடுத்தும் அளவில்தான் பல்வேறு வகுப்புக் கலவரங்களின் போதும் காவல்துறையினர் நடந்துக்கொண்டார்கள்.

முஸ்லிம்கள் மிகவும் முக்கியமானவர்கள் காரணம் அவர்கள் மிகப்பெரிய



தமிழ் நாடு காவல்துறை இயக்குனர் இராமானுஜம்.

சிறுபான்மையினர். இதன் மூலம் மக்கள் தொகையில் ஒரு பெரும் பகுதியினர். பெரும்பாலான மாநிலங்களில் இதுவே நிலை. இதனால் காவல்துறையினரின் மனநிலையிலும் போக்கிலும், மாற்றங்களை விரைந்து நிறைவேற்றிட வேண்டிய ஒன்று. அதன் மூலம் காவல்துறையின் மீது அவர்கள் இழந்துள்ள நம்பிக்கையை மீண்டும் பெறவேண்டும்.

இந்த வகையில் முதன் முதலாக காவல்துறையின் அனைத்து மட்டங்களிலும், மனநிலையில் மாற்றங்களைக் கொண்டுவந்திட வேண்டும். இதன் மூலம் முஸ்லிம்களுக்கெதிராக நிலவும் மாச்சார்யத்தை உடைத்திட வேண்டும். இந்த தீர்வின் முதல் படி - முதல் நடவடிக்கை காவல் துறையில் முஸ்லிம்களுக்கு எதிராக ஒரு மாச்சர்யம் நிலவுகிறது என்பதை ஒத்துக் கொள்ள வேண்டும். அதேபோல காவல் துறையில் உள்மாற்றங்கள் வேண்டும் என்பதையும் ஒத்துக்கொள்ளவேண்டும்.

இந்த நிலையை மாற்றுவதில் நாம் காலம் தாழ்த்திட இயலாது. காரணம் இந்த மனநிலை காவல் காப்பதன் பல முக்கிய பகுதிகளைப் பாதிக்கின்றது. இதில் தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளும் அடங்கும். இதனால் நாட்டின் உள்நாட்டுப்பாதுகாப்பும் அடங்கும்.சிறுபான்மையினருக்கு எதிரான மனநிலையிலிருந்து விடுபட்டிடும் அளவில் காவல்துறையினருக்கு பயிற்சிகள் வழங்கப்படவேண்டும்.

அத்தோடு மாநிலங்கள் அனைத்திலும் இரண்டு சிறப்புப் பிரிவுகள் உருவாக்கப்பட வேண்டும். சைபர் பிரிவு என்ற இணையதளங்களைக் கண்காணிக்கும் பிரிவு ஒன்று அமைக்கப்பட வேண்டும். இதன் மூலம் சிறுமான்மையினருக்கு எதிரான வதந்திகள் பரப்பப்படுவதைத் தடுத்திடலாம். அத்தோடு சமூக தளங்களை மற்றும் சோசியல் மீடியாவையும் கண்காணித்திடலாம். இதன் வழி வகுப்பு வெறிகள் தூண்டப் படுவதைத் தடுத்திடலாம். இந்தப் பிரிவு மாநில அரசின் இணையதள பாதுகாப்புப் பிரிவு ( CERT ) இன் கீழ் இருந்திட வேண்டும். பிரிதொரு பிரிவு மக்கள் தொடர்பு பிரிவாக இருந்திட வேண்டும். இந்த பிரிவு உணர்வுகளைத் தூண்டிடக் கூடிய செய்திகள் குறிப்பாக சட்டம் ஒழுங்கு பற்றிய செய்திகள் பரப்பப்படுவதைத் தடுக்க உதவும்.

பல்வேறு நிகழ்வுகளை மேற்கோள் காட்டி இந்த அறிக்கை இன்னொரு செய்தியைப் பதிவு செய்கின்றது. அது வகுப்புவாத கலவரங்களை உருவாக்கும் சூழ்நிலைகளை முன் கூட்டியே அறியத் தரும் முறை ஒன்றை நிறுவிட வேண்டும், இது வகுப்புக் கலவரங்களை உருவாகும் சூழலை தடுக்கவும் வகுப்பு கலவரங்களை உருவாக்குபவர்களை கைது செய்யவும் உதவும்.

வகுப்புவாத சக்திகள் மிகைத்த பகுதிகளில் அந்த சமுதாயத்தை நன்றாக அறிந்த, அதிகாரிகளையே அந்தப் பகுதியில் வேலையில் அமர்த்திட வேண்டும். ஆனால் அனைத்திற்கும் முன்னதாக காவல் துறையின் உள்ளே குடியிருக்கும் மாச்சர்யங்களை அகற்றிட வேண்டும்.

அத்தோடு சமுதாயக் கண்காணிப்புகளை அதிகப்படுத்திட வேண்டும். வகுப்புக் கலவரங்கள் உருவாகிடும் முன்னே தகவல்களைத் தெரிந்திடும் வண்ணம் உளவுத்துறையை முடக்கிவிட வேண்டும். கலவரங்களை உருவாக்கிடும் அளவில் பேசுபவர்கள் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்பவர்கள் போன்றவர்களை நாம் கண்காணித்து அவர்களின் பேச்சுக்களையும்,

நிகழ்ச்சிகளையும் பதிவு செய்திட வேண்டும். சட்டத்திற்கு புறம்பாக மக்கள் கூடுவதை தடுத்திட இப்போது இருக்கின்ற சட்டங்கள் போதாது. இன்னும் கூர்மையான சட்டங்கள் வேண்டும். ஆனால் தமிழகத்தில் சீருடை அணிந்து அல்லது அணியாமல் அமைப்புகள் அணிவகுப்பை நடத்திடும் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இத்தோடு வகுப்புவாத அமைப்புகளுக்குப் பணம் வந்திடும் பாதைகளைக் கண்காணிக்கும் தனி நீதிமன்றங்களை அமைத்திடவும் வழி கண்டிட வேண்டும்.

இப்படி காவல்துறையின் மன நிலையை குறிப்பாக முஸ்லிம்களுக்கும் ஏனைய சிறுபான்மையினருக்கும் எதிரான மனநிலையை மாற்றிடவும் வகுப்பு கலவரங்களைத் தடுத்திடும் வகையிலும் தயாரிக்கப்பட்ட அறிக்கை குப்பைத் தொட்டிக்கு அனுப்பப்பட்டு விட்டது. இந்த அறிக்கையில் குறிப்பிட்ட பல ஆலோசனைகள் செயலில் கொண்டு வந்திட இயலாதவை.

இப்படியொரு அறிக்கை சமர்ப்பிக்கப் படுவதிலும் அதில் காவல் துறையினர் ஒரு தலைபட்சமாக நடந்துக் கொள்கிறார்கள் என்பது 2013 - இல் தான் நடந்தது என்றில்லை. மாறாக காவல்துறையின் வரலாறு முழுவதும் இப்படியே பதிவாகி இருக்கின்றது.

ஆனால் இந்த செய்தியை வெளியிட்ட இந்தியன் எக்ஸ்பிரஸ் அதில் கட்டுரையை எழுதிய சுமிதா நாயர் ஆகியோர் முதல் வரியில் முதன்முதலாகக் காவல்துறை ஊழல் மயமானது, சிறுபான்மையினருக்கு எதிரான மாச்சர்யங்கள் உள்ளது என்பது ஒத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றது என எழுதுகிறார்கள்.

நமது இராமானுஜம் அவர்களைப் போல் எத்தனையோ காவல்துறை உயர் அதிகாரிகள் இதற்கு முன்னால் இதுபோன்ற இன்னும் சொன்னால் இதைவிட அழுத்தமான அறிக்கைகளைத் தாக்கல் செய்துவிட்டனர். அவை யெல்லாம் இந்த அறிக்கையைப் போல் குப்பைத் தொட்டிக்குத்தான் சென்றன.

ஜி.ஜி.கோஷ்

என்ற காவல்துறை அதிகாரி 17 வகுப்புக் கலவரங்களில் காவல்துறை அதிகாரிகள் எந்த அளவுக்கு இந்துத்துவ வெறியர்களைப் போல் முஸ்லிம்களைக் கொலை செய்யவும், அவர்களின் உடைமைகளைக் கொள்ளையடிக்கவும் செய்தார்கள் என்பதைத் தெளிவுப்படுத்தி யிருந்தார்கள்.

தனது அறிக்கையை அரசாங்கம் கண்டுக்கொள்ளாததால் அவர் அதனை மக்கள் மன்றத்தில் வைத்தார். அதற்கு உணர்வுப் பூர்வமான தலைப்பு ஒன்றையும் தந்தார். அந்த தலைப்பு ( Communalism - Let Us Combat )வகுப்பு வாதம் அதை நாம் எதிர்த்து போர் செய்வோம். ஆனால் நிலைமை நாளுக்கு நாள் மோசமானதே தவிர நிலைமை சீரடையவில்லை.

இந்த ஆய்வு தொடர்ந்து இன்னும் பல ஆய்வுகளும் அறிக்கைகளும், அரசாங்கத்திற்குப் பரிந்துரைகளும் வந்தாலும் அவற்றிற்கெல்லாம் மகுடம் கட்டியதைப் போல் வந்தது விபூதி நாராயண ராய் அவர்களின் ஆய்வறிக்கை.

வெறும் ஆய்வறிக்கையாக மட்டுமில்லாமல் அவருடைய முனைவர் பட்டத்திற்கும் வழிவகுத்தது. இதில் எப்படி வகுப்பு கலவரங்களின் போது மொத்த நிர்வாகமும் முஸ்லிம்களுக்கெதிராக சுழலுகின்றன. என்பதை தெளிவுப் படுத்தியிருந்தார்.

இவருடைய அறிக்கை ஆதங்கங்கள் இவற்றையும் நமது அரசுகள் கண்டு கொள்ளவில்லை. ஆதலால் அவரது ஆய்வை செயலில் கொண்டுவந்திட அவருக்கும் வேறு வழி இருக்கவில்லை. ஆதலால் அவரும் தனது ஆய்வை மக்கள் மன்றத்தில்தான் வைத்தார்கள்.

பல்வேறு ஆய்வுகள், விசார ணைகள், இவற்றில் மேற்கோள் காட்டிடும் ஓர் ஆய்வாகத்தான் அது அமைந்தது. ஆனால் அரசு அவருடைய ஆய்வை பரிந்துரை செய்வதில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. விரக்தி வயப்பட்ட விபூதி நாராயண ராய் அவர்கள் தன்னுடைய ஆய்வு முடிவுகளை இன்னும் சுணரஞ்ச கப்படுத்திட விரும்பினார்கள்.

தன்னுடைய ஆய்வை அடிப்படையாக கொண்டு புதினம் ஒன்றை எழுதினார்கள். அதன் பெயர் " ஊரடங்கு உத்தரவு " இதனை நாம் தமிழிலும் வெளியிட்டோம். ( இந்த நூல் தற்போது அச்சில் உள்ளது இன்ஷா அல்லாஹ் மிக விரைவில் வேர்கள் வெளியீட்டகம் வழி வரும் ).

ஆனால் இவற்றின் வழி மக்கள் விளக்கங்களையும் விபரங்களையும் பெற்றார்களே அல்லாமல் அரசு தரப்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை. சங்கப்பரிவாரத்தின் பாசிச போக்கிற்கே எல்லா அரசுகளும் துணை நின்றன. நிலைமை இன்னும் மோசமானது.

பாகல்பூர் படுகொலைகளை நடத்தின. இதில் காவல்துறையினர் முற்றாகக் களமிறங்கி படுகொலைகளைச் செய்துக்கொண்டிருந்தனர். இந்த செயலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த காவல்துறையில் ஒரு முஸ்லிம் இன்ஸ்பெக்டர் இவர் காவல்துறையினர் அப்பாவி முஸ்லிம்களைக் கொலை செய்வதைப் பொருத்துக்கொள்ள இயலாமல் காவல்துறையினரை தடுத்தார். தடுக்க முயன்ற அடுத்த நிமிடமே பிணமாக சாய்ந்தார். அவருடைய உடலைப் பிளந்து சென்ற துப்பாக்கிக் குண்டு அவருக்குக் கீழ் பணியாற்றிக் கொண்டிருந்த சப் இன்ஸ்பெக்டருடைய துப்பாக்கியிலிருந்து பாய்ந்தது.

விசாரணைகள் ஆய்வறிக்கைகள் எல்லாம் வந்தன. ஆனால் அந்த சப் இன்ஸ்பெக்டரை இடமாற்றம் கூட செய்திட இயலவில்லை. முஸ்லிம்களும் முஸ்லிம் அமைப்புகளும் பிரதம அமைச்சர் வரை சென்று சந்தித்து மனுக்கொடுத்தார்கள்.இதே பாகல்பூரில் காவல்துறையில் அடைக்கலம் புகுந்த பல முஸ்லிம்கள் மறுநாள் பிணமாக கிடந்தார்கள்.

இதுவேதான் காசிம்புராவில் நடந்தது. காசிம்புராவில் கலவரம் நடந்துக் கொண்டிருக்கின்றன. சங்கப் பரிவாரத்தினர் முஸ்லிம்களைக் கொன்று குவித்துக் கொண்டிருக்கின்றனர். முஸ்லிம்கள் தங்கள் வீடுகளிலிருந்து தெறித்து ஓடுகின்றார்கள். ஒரு பணக்கார முஸ்லிமின் பங்களாவில் அடைக்கலம் தேடுகிறார்கள். பங்களாவுக்கு சொந்தக் காரர் தொடர்ந்து காவல்துறைக்கு



தொலைபேசியில் பேசுகின்றார். நீண்ட நேர முயற்சிக்குப்பின் காவல்துறையின் வாகனம் ஒன்று அங்கு வருகின்றது. " ஆபத்துப்பந்தன் " வந்துவிட்டான் என அந்த முஸ்லிம்கள் சற்றே நிம்மதியடைகிறார்கள். அந்த முஸ்லிம்களை காவல் துறை வாகனத்தில் ஏற்றுகின்றார்கள். பின்பு அடுத்த ஒரு ஏரியில் அவர்கள் பிணமாகக் கிடக்கின்றார்கள். அதற்கான விசாரணை இன்றளவும் நடந்துக் கொண்டிருக்கின்றது.

இந்த படுகொலைகளை செய்த பல காவல்துறை அதிகாரிகள் ஓய்வு பெற்றுவிட்டனர். அவர்கள் பெற்றிட வேண்டிய பதவி உயர்வுகள், ஓய்வூதியம், ஓய்வு பெறும்போது பெற்றிட வேண்டிய மொத்த பணம் இவை அனைத்தையும் பெற்றுவிட்டார்கள். இதற்கான வழக்குகள் இன்னும் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால் இந்த விசாரணை, இதற்கான தீர்ப்பு இவற்றால் விளையப்போவது எதுவுமில்லை. அவர்கள் பெறவேண்டியவற்றை யெல்லாம் பெற்றுவிட்டார்கள்.

பாபரி மஸ்ஜித் இடிப்பிற்கு பின் நிலைமை இன்னும் மோசமானது. அங்கே கரசேவகர்கள் இடித்தது போக மீதியை இடித்தவர்கள் மத்திய அரசின் முகவர்கள். பாபரி மஸ்ஜித் - ஐ இடித்ததில் பெருமைப்படுகின்றோம். என்று சொன்ன பால்த்தாக்கரே சகல அவகாசத்தோடும் மும்பை படுகொலைகளை நடத்தினார். கையில் முஸ்லிம்களின் பெயர் பட்டியல்களை வைத்துக் கொண்டு நடத்திய பட்டப்பகல் படுகொலைகள் அவை.

அந்த படுகொலைகளை ஆய்வு



செய்யவும். ஸ்ரீ. கிருஸ்ணா கமிஷன் என்றொரு கமிஷனை நியமித்தார்கள். இந்த ஸ்ரீ. கிருஸ்ணா கமிஷனிடம் சில குறிப்பான விடயங்கள் குறித்தும் ஆய்வுகள் நடத்தி அறிக்கை தந்திட வேண்டும் என அரசு கேட்டுக் கொண்டது. அதில் மும்பை கலவரங்களுக்கு யார் குற்றவாளிகள் என்பதை தெளிவாகக் குறிப்பிட வேண்டும். அவர்கள் மீது எடுக்க வேண்டிய நடவடிக்கைகளையும் பரிந்துரைக்க வேண்டும் என்றெல்லாம் கேட்டுக்கொண்டார்கள்.

நீதிபதி ஸ்ரீ. கிருஸ்ணா அவர்கள் காடு மேடுகளையெல்லாம் கடந்து சென்று நீதிபதியின் சிகரமாய் ஓர் அறிக்கையை தாக்கல் செய்தார்கள். இந்த அறிக்கையில் *2000* அப்பாவி முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்டதற்கு, பால்தாக்கரே தான் காரணம். அவர் தொலைபேசியில் இங்கே சென்று கொல்லுங்கள் அங்கே சென்று கொல்லுங்கள் என உத்தரவுகளை பிறப் பித்துக் கொண்டிருந்தார் என்பதை யெல்லாம் தக்க ஆதாரங்களுடன் சமர்பித்தார்.

*1992 - 1993* மும்பை படுகொலைகள் நடந்து முடிந்து நீதிபதி ஸ்ரீ. கிருஸ்ணா அவர்கள் தங்கள் அறிக்கையை சமர்பித்தபோது, கொலைகளைச் செய்த பாசிச பரிவார கும்பலே ஆட்சிக்கு வந்துவிட்டது. இந்த கும்பல் ஸ்ரீ. கிருஸ்ணா அறிக்கையை சட்ட சபையில் சமர்பிக்கமாட்டோம் எனக் கூறிவிட்டது. அதன் பின் நீண்ட போராட்டத்திற்கு பிறகு அறிக்கை வெளிவந்தது. ஆனால் அதில் பிரதான குற்றவாளி இனப்படுகொலைகளை தொடங்கி நடத்தியவர் என குற்றம் சாட்டப்பட்ட, பால்தாக்கரேயை கைது செய்திடவில்லை.

இதற்காகவும் தொடர் போராட்டங்கள் நடத்தப்பட்டன.. பின்னர்



கைது என்ற பெயரில் ஐந்து நிமிடங்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். ஆனால் சிறைக்கு அனுப்பப்படவில்லை. அவர் மீது தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிக்கை மீது எந்த நடவடிக்கை யும் எடுக்கப்படவில்லை. இந்நிலையில் கொலை குற்றம் சாட்டப்பெற்ற பால்தாக்கரே இறந்தார். அவரின் உடலின் மீது தேசியக் கொடியைப் போர்த்தினார்கள். அதாவது சங்கப் பரிவார பாசிசம் தேசிய அங்கீகாரம் பெற்றது. இதற்கு பின்னும் நமது இந்தியாவில் நீதியும் நேர்மையும் நிலை நாட்டப்படும் என்று எந்த முட்டாளும் நம்பமாட்டான்.

அன்றிலிருந்து காவல் துறையினர் முஸ்லிம்களை எதிர்தாக்குதல் என்ற பெயரில் கொலை செய்வது பெருகி வருகின்றது. இந்த எதிர்தாக்குதல்களை எத்தனை இலாவகமாக செய்திட இயலுமோ அத்தனை இலாவகமாகச் செய்தார்கள்.எடுத்துக்காட்டாக மும்பை யில் டயாநாயக் என்றொரு காவல்துறை துணை ஆய்வாளர் என்ற சப் - இன்ஸ்பெக்டர். இவர் ஏராளமான முஸ்லிம் இளைஞர்களை பிடித்து வைத்துக் கொள்வார். குஜராத் மற்றும் ஆந்திராவிலுள்ள காவல்துறையினரிடம் என்கவுண்டர் செய்திட முஸ்லிம் இளைஞர்கள் வேண்டுமா? குண்டு

வெடிப்புகளில் இணைத்திட முஸ்லிம் இளைஞர்கள் வேண்டுமா? எனக்கேட்பாராம்! இவர் குறுகிய காலத்திலேயே பலகோடிகளுக்கு அதிபதியாகிவிட்டார். ஆனால் இவரைச் சட்டம் சீண்டிப் பார்த்திடவில்லை.

இப்படி முஸ்லிம் இளைஞர்களை எதிர்த்தாக்குதலில் பயன்படுத்திடும் பொருள்களாகப் பயன்படுத்தி இருக்கின்றார்கள். இன்றளவும் அதனை தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். அதில் ஒன்றுதான் - அந்த ஏளனமான மன நிலையின் வெளிப்பாடுதான் S.P. பட்டிணத்தில் நடந்தது. அதனை நமது நிருபர்கள் தந்தப்படி இங்கே பதிவு செய்கின்றோம்.

# S.P. பட்டிணத்தில் நடந்தது என்ன?



தமிழகத்தின் கடலோர மாவட்டம் இராமநாதபுரம். அதில் கடற்கரை பகுதி எஸ்.பி.பட்டிணம். இங்கு செய்யித் முஹம்மது என்றொரு முஸ்லிம் இளைஞன். தந்தை இல்லை. கூலி வேலை செய்து தன் தாயாரை காப்பாற்றி வருபவன்.

இங்கு பைக் முதலியனவற்றை பழுது பார்ப்பவர் அருள்தாஸ். அவரிடம் செய்யித் முஹம்மதின் நண்பன் பைக்கை பழுதுப்பார்க்க கொடுத்திருக்கிறார். அதை வாங்கி வர தன் நண்பனின் கோரிக்கையின் கீழ் சென்றிருந்தான் செய்யத் முஹம்மது. ஆனால் அவன் செல்லும் போது பைக் தயாராகவில்லை.
இதனால் காலம் கடந்த அருள்தாஸ் பைக் - ஐ கொடுத்த செய்யத் முஹம்மதுவின் நண்பனிடம் போனில் தொடர்பு கொண்டு பைக்கை செய்யதிடம் தரலாமா? என கேட்டிருக்கிறான். அவனும் கொடுக்கலாம் என கூறியிருக்கிறார். ஆனால் அருள்தாஸ் பைக் தயாராக இல்லை. சிறிது நேரம் கழித்து வந்து வாங்கிக் கொள்ளலாம் என வாய்தா போட்டார்.

வாய்தா காலம் முடிந்து வந்தார் செய்யத் முஹம்மது. வண்டியை கேட்டார். ஆனால் அருள்தாஸ் அப்போதும் தன் வேலையைக் காட்டவே வாய்ச்சண்டை நடந்திருக்கிறது. சற்று சூடு அதிகமாகவே வாய்ச்சண்டை கைகலப்பாக மாறி இருக்கின்றது. ஊர் நாட்டில் நடப்பது போல் அக்கம் பக்கத்தினர் வந்து விலக்கி விட்டிருக்கின்றனர்.

ஆனால் மெக்கானிக் அருள்தாஸ் தனக்கு எல்லாவகையிலும் உதவி வரும் பக்கத்திலுள்ள காவல் நிலையத்தில் சென்று கூறியுள்ளார். ஆனால் புகார் எதுவும் எழுதித்தரவில்லை. அதன் பின் காவல்துறையினர் செய்யத் முஹம்மதுவை அடித்து இழுத்து சென்றுள்ளனர். மேலும் காவல் நிலையத்தில் வைத்து நையப்புடைந்துள்ளார்கள்.

அடி தாங்க முடியாமல் செய்யத் முஹம்மது அலறி இருக்கின்றான். அலறல் சப்தம் கேட்டு சிலர் காவல் நிலையம் சென்று பார்த்துள்ளனர். ஆனால் அவர்கள் உள்ளே அனுமதிக்கப்படவில்லை. காவல்துறையினரின் தொடர் கொடூரங்களால் மூர்ச்சையானான் செய்யத் முஹம்மது. இவையெல்லாம் மதியம் 2 மணிக்கே முடிந்துவிட்டது.

இந்த காவல் நிலையத்தில் காளிதாஸ் என்பவர்தான் துணை ஆய்வாளர். இவர் மதியம் 3 மணிக்கு தன் கடமைகளைச்

செய்திட காவல் நிலையம் வந்திருக்கின்றார். பின் எஸ்.ஐ. காளிதாஸ் தன் பங்கிற்கு செய்யத் முஹம்மதுவை கடுமையாகத் தாக்கியிருக்கிறார். இவரின் தாக்குதல் உச்சக்கட்டத்தை எட்டவே செய்யத் முஹம்மது இறந்து போனான்.

சையது முகம்மது கத்தும் சத்தம் பின்னர் கேட்கவில்லை. மருந்து கடை இரமேஷ் இறப்பை உறுதி செய்துள்ளார். ஆயுர்வேதிக் படித்து பார்மசிஸ்ட்டாக உள்ள இரமேஷ் சுமார் ஐந்து மணியளவில் ஒரு காவலரால் காவல் நிலையம் அழைத்து வரப்பட்டு, அந்த காளிதாஸிற்கு ஏற்பட்ட இடது கை, இடதுபக்க வயிற்றுக் கீறல்களை காண்பித்து நரம்பு தேசம் அறுந்து விட்டதா என்று கேட்டுள்ளார். அதன் பின் அதற்கு பஞ்சு வைத்து கட்டிவிடவேண்டும் என்றும் கேட்டுள்ளார். ஆனால் இரமேஷோ இதற்கு நான் மருத்துவம் பார்க்கக் கூடாது என்று திரும்பி வந்து விடுகிறார்.

அப்போது இரமேஷ் ஒரு அறையில் ஒருவர் சாய்ந்து படுத்து இருப்பதை பார்த்துள்ளார். அவர் வெள்ளை நிற அங்கி அணிந்திருந்தார். அவருடைய உடம்பிலோஒரு சொட்டு இரத்தம் கூட இல்லையென்று தெரிவித்தார்.

### ஆம்புலன்ஸ் ஓட்டுனர் ஆசாத்

ஆசாத் நம்மிடம் கூறும்போது தாம் டி.என்.டி.ஜெ விற்கு ஆம்புலன்ஸ் ஓட்டுனராக இருப்பதாகவும், சம்பவம் நடந்த அன்று மாலை சுமார் 4.30 முதல் 4.45 மணிக்குள் தன்னை அழைத்ததாகவும், தாம் தொண்டியிலிருந்து 10 நிமிடத்தில் காவல் நிலையத்திற்கு வந்து விட்டதாகவும் தெரிவித்தார்.

அவரை காவல்துறையினர் கேட்டுக்கு வெளியே இருக்கும் படி சொல்லியுள்ளனர். இவர் கூற்றுப்படி பார்த்தால் சையது முகம்மது 4.30 மணிக்கு முன்பாகவே இறந்துவிட்டார். இவர் மருந்து கடை இரமேஷ் உள்ளிருந்து வெளியே வந்ததை பார்த்துள்ளார். சிறிது நேரத்தில் எஸ்.ஐ. காளிதாஸ் காவல் நிலையத்தில் இருந்த ஒரு சிவப்பு காரில் ஏறி சென்றுவிட்டதாக தெரிவித்தார். சுமார் ஒரு மணி நேரம் தான்



வெளியில் நின்றதாகவும் ஆசாத் தெரிவித்தார்.

பின்னர் தன்னை காவலர்கள் உள்ளே வரும்படி அழைத்ததாகவும் தன்னிடம் உள்ள செல்போனை வாங்கிக் கொண்டதாக கூறினார். தான் வண்டியில் ஏறி உட்கார்ந்து பின்னால் உள்ள ஜன்னல் வழியாக பார்க்கும்போது, இரண்டு காவலர்கள் சையதுவின் உடலைக்கொண்டு வந்து போட்டதாகவும், பின்னர் தான் " என்ன சார் யாரோ காயம் அடைந் துள்ளார் என்று கூறினீர்கள் இப்போது உடலைக் கொண்டு வந்து போடுகிறீர்கள்? " எனக் கேட்டபோது இதனை யாரிடமும் வெளியே சொல்லவேண்டாம் என காவல்துறையினர் கேட்டுக் கொண்டதாகவும். டி.எஸ்.பி.சேகர் வந்து எஸ்.ஐ. (இவர் வேறோரு எஸ்.ஐ) சொல்லும்படி வண்டியை ஓட்டும் படியும் வழியில் யார் நிருத்த சொன்னா லும் நிறுத்த வேண்டாம் என கேட்டுக் கொண்டதாகவும் கூறினார்.

இந்நிலையில் வண்டியை திருபாலகுடி காவல் நிலையத்திற்கு கொண்டு சென்றதாகவும் அங்கு எஸ்.பி. மயில் வாகனன் வந்து ஆம்புலன்ஸில் இருந்த உடலை புகைப்படம் மற்றும் வீடியோ எடுத்துக் கொண்டதாக தெரிவித்தார். இங்கு ஆம்புலன்ஸ் சுமார் அரை மணி நேரம் நின்றதாகவும் பின்னர் சுமார் 7.10 மணிக்கு இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்றதாகவும் தெரிவித்தார். தான் இதனையே மாஜிஸ்ரேட்டிடம் தெரிவித்ததாக நம்மிடம் சொன்னார்.




**சையது அலி ஃபாத்திமா**

**சையது அகமது தாயார்**

இவர் இரண்டு முறை இருதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டவர், இன்னும் இவர் கணவர் காட்டுபாவா அவர்கள் இறந்து 10 வருடத்திற்கு மேல் ஆகிவிட்டது. 2 மாதத்திற்கு முன்புவரை இவரது மகன் சையது சென்னையில் கார் டிரைவராக இருந்துள்ளார். கடந்த இரண்டு மாத காலமாக இறால் பண்ணையில் மாதம் 15,000 ரூபாய் சம்பளத்திற்கு வேலை செய்வதாக தெரிவித்தார். இன்றும் உடல் நிலை பாதிக்கப்பட்டு இவர் அழுதுக் கொண்டே இருந்ததால் இந்த தகவலை இவரின் சகோதரி அவர்கள் நம்மிடம் தெரிவித்தார்.



தன்னுடைய மகனை காவல் நிலையத்திற்கு அழைத்து சென்ற விவரத்தை தம்மிடம் கூறாமல் மறைத்து விட்டதாகவும், இன்னும் தன்னுடைய மகன் இறந்த விடயமே தனக்கு தொலைக்காட்சியை பார்த்த பின்புதான் தெரிந்ததாக கூறினார். மறுநாள் 15.10.14 அன்று ஆய்வாளர் துரை பாண்டி தவறு நடந்து விட்டது என்று சொல்லி திருவாடணை டி.எஸ்.பி சேகர் கொடுத்த கடிதத்தை காண்பித்து அதில் கையெழுத்து போடுமாறு கேட்டுள்ளார். அதில்

" இன்று 14.10.2014 மாலை 3.மணிக்கு எஸ்.பி. பட்டிண காவல் நிலைய கு.எண் : 90/2014 வழக்கில் விசாரணைக்காக அழைத்து செல்லப் பட்ட தங்களது மகன் சையது முகமது காயம் பட்டு அதன் தொடர்பாக இராம நாதபுரம் அரசு தலைமை மருத்துவ மனைக்கு சிகிச்சைக்கு செல்லும் வழியில் இறந்துவிட்டார் என்பதனையும் இது தொடர்பாக எஸ்.பி. பட்டிணம் காவல் நிலையம் கு.எண் : 91/2014 பிரிவு 176(4) கீழ் சி.ஆர்.பி.சி வழக்கு பதிவு செய்யப்பட்டு நீதிமன்ற விசாரணைக்கு அனுப்பப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன் " என்று இருந்தது. ஆனால் அந்த கடிதத்தில் கையெழுத்து போட குடும்பத்தார்கள் மறுப்பு தெரிவித்து அனுப்பி வைத்ததாக

கூறினார்கள். இதில் ஒரு கொலையை மறைக்க ஆய்வாளர் துரை பாண்டி மற்றும் டி.எஸ்.பி சேகர் மற்றும் எஸ்.பி மயில் வாகனன் போன்றோர் முயற்சி செய்தது தெரிகின்றது.

இந்நிலையில் இந்த செய்தியை கேள்விப்பட்டு சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் காவல் நிலையத்திற்கு முன் கூடிவிட்டனர். அங்கிருந்த கடைகள் அடைக்கப்பட்டன. உடனே சம்பவ இடத்திற்கு எஸ்.பி, ஐ,ஜி, டி.ஐ.ஜி போன்றவர்கள் வந்து உரிய நடவடிக்கை எடுப்பதாக கூறியுள்ளார்கள். இன்னும் கிட்டதட்ட முன்னூறுக்கும் மேற்பட்ட போலிஸார் அங்கு குவிக்கப்பட்டார்கள். மக்கள் மறியலில் இருந்த போது தைக்கால் பள்ளிவாசலில் ஜமாத் தலைவர் மைக் மூலம் காவல்துறை அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுப்பதாக கூறியுள்ளனர். எனவே கலைந்து செல்லுங்கள் என்று கூறியவுடன் மக்கள் கலைந்து சென்றுள்ளனர். மாலை 5.30 மணிக்கு பிறகு ஆம்புலன்ஸ் சென்றவுடன் வெள்ளதுறை ஏ.டி.எஸ்.பி காவல் நிலையத்திற்கு வந்துள்ளார். இவர் இரவு முழுவதும் அங்கிருந்து மக்களை அடக்கும் திட்டத்தை நிறைவேற்ற முகாமிட்டிருந்த தாக மக்கள் நம்மிடம் தெரிவித்தனர்.

மறுநாள் 15.10.2014 உச்ச நீதிமன்ற வழிகாட்டுதல் படி நீதிபதி என். வேலுச்சாமி மேற்பார்வையில் விசாரணைக்கு உத்தரவு பிறப்பிக்கப் பட்டது. அவர் மாலை நடைபெற்ற உடல் பரிசோதனையின் போது உடன் இருந்தவர். மேலும் தலைமை மருத்துவர் தலைமையில் சுமார் 5 மருத்துவர்கள் உடல் பரிசோதனை மேற்கொண்டார் கள். இதனை வீடியோ படம் எடுக்கப்பட்டது. இரண்டு வழக்கறிஞர் கள் உடன் இருந்துள்ளனர்.ஊர் மக்கள் 302 கொலை வழக்கு பதிவு செய்தால்தான் உடலை வாங்குவோம் என்று கூறியுள்ளனர். மறுநாள் 16.10.2014 அன்று மதுரை உயர் நீதி மன்றத்தில் இந்த வழக்கு சம்பந்தமாக மனுதாக்கல் செய்யப் பட்டது. அதில் இரண்டாவது முறையாக உடல்பரிசோதனை செய்ய கோரிக்கை வைக்கப்பட்டது. ஆனால் எல்லாம் உச்ச நீதிமன்ற வழகாட்டுதல்படி நடந்துள்ளது என் அரசு தரப்பு வழக்கறிஞர் சொன்னதால் வழக்கில் இரண்டாவது உடற்பரிசோதனை தேவையில்லை என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.இந்நிலையில்



அன்று மாலை 6.00 மணிக்கு மேல் முஸ்லிம் சட்டமன்ற உறுப்பினர் இருந்த இடத்தில் உள்ளூர் மக்கள், மற்றும் சில இயக்க உறுப்பினர்கள் கூடி பேசினார்கள். இதில் அவர் உச்ச நீதி மன்றம் சொன்ன 13 விதிகளும் பின்பற்றப்பட்டதால் உடலை வாங்கிக்கொள்ளலாம் என்று கூறினார். இதனை சிலர் 302 கொலை வழக்கு போடுவது பற்றி கேட்டுள்ளனர். இறுதியில் அவரின் நிர்பந்தத்தால் உடலை பெறுவது என மக்கள் முடிவு செய்துள்ளனர். மறுநாள் மஃரிப் தொழுகையில் உடல் அடக்கம் செய்யப்பட்டது.

வைகறை நிருபர் மாஜிஸ்ரேட் விசாரணையின் போது காவல் நிலையத்தில் இருந்தார், மாஜிஸ்ரேட் சம்பவம் நடந்த எஸ்.ஐ.காளிதாஸ் அறையை பார்வையிட்ட போது அவரும் பார்த்தார் அப்போது அந்த அறையில் எந்த ஒரு சிறு சேதாரமோ,சிதறலோ, இரத்தக்கறையோ இல்லாமல் இருந்ததை பார்த்தார். இங்கு காவல்துறையினரால் தடயம் அழிக்கப்பட்டது தெளிவாகிறது. இன்னும் சையது ஒரு ரவுடி என்று காவல் துறை சொன்னதை பற்றி மக்களிடம் கேட்டபோது அதனை மக்கள் மறுத்தனர், இன்னும் சையது ஜெயலலிதா கைதை தொடர்ந்து எஸ்.பி பட்டிணத்தில் பஸ் எரிக்கப்பட்டபோது இவர் சென்று பலரை காப்பாற்றியுள்ளார்.

**நமது நிருபர்கள்**
**இக்பால் மற்றும் ரிஸ்வான்.**

# என்கவுண்டர் என்ற எதிர் தாக்குதலில் காவல்துறை கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகள்.



காவல்துறையினர் அப்பாவிகளை அழைத்து வந்து கொலை செய்வது பின்னர் எதிர் தாக்குதல் எனப்பட்டம் கட்டுவது. பொய்களையும் புனைந்துரைகளையும் பக்கம் பக்கமாக எழுதி அந்தக் கொலையை நியாயப்படுத்துவது. இது காவல் துறைக்கு கைவந்த கலை.

இவர்களின் இந்த கொலைகளுக்கு பாராட்டுக்கள் பதக்கங்கள். அதுவும் விழாக்களில். அதாவது காவல்துறையினர் நடத்தும் கொலைகளுக்கு அரசியல் நடத்துவோர் அங்கீகாரம் தருகின்றனர்.

பின்னர் விவகாரம் நீதிமன்றம் செல்கிறது. நீதிபதிகள் காவல்துறையின் ' ஏட்டைய்யா ' போல நடந்துக்கொண்டு மொத்த நீதியையும் குழிதோண்டிப் புதைத்து விடுகிறார்கள். இதில் பெரும்பாலும் அநாதைகளும் அடித் தட்டுக்கு அல்லாடும் அன்றாடம் காய்ச்சிகளும்தான் பாதிக்கப்படுகிறார்கள். அதனால் அவர்களால் துப்பாக்கிகளைத் ' துஷ்பிரயோகம் ' செய்யும் இந்த அடங்காத காவல் துறையின் முன்னால் நின்றிட முடிய வில்லை.

இப்படி இந்தியக் குடிமக்களை - இந்திய குடிமக்களின் வரிப்பணத்தில் தங்கள் தொப்பைகளை நிரப்பிக் கொண்டும் கொலை செய்யும் பெரும் பாதகம் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

கீழ் நிலையில் உள்ளவர்கள் செய்யும் கொலைகளுக்கு மேல் ' மட்டத்தில் ' உள்ள காவல்துறை அதிகாரிகள் தரும் ஆதரவுக்கு அளவே இல்லை. இறந்தவர்களின் உடல் அடக்கப் படுவதற்கு முன்னரே அவர்களுக்குப் பதக்கங்களைத் தர காத்துக் கிடக்கும் ஆட்சியாளர்கள். இப்படி கொலை செய்யப்பட்டவர்கள் முஸ்லிம்களாக இருக்கும் பட்சத்தில் இந்த பதவி உயர்வுகளும் பதக்கங்களும் மின்னல் வேகத்தில் வழங்கப்படுவதுண்டு.

அரசியல் வாதிகளின் - அரசுகளின் இஸ்லாத்திற்கு எதிரான மனநிலையைப் பயன்படுத்திக் கொண்டு அதிகாரிகள், மாநில முதல்வர்களையும் ஏன் குடியரசு தலைவர்களையும் ஏமாற்றிய வரலாறுகள் ஏராளம்! தாராளம்! இவற்றை நாம் வைகறை வெளிச்சம் இதழில் நிரம்பவே சுட்டிக்காட்டியுள்ளோம். [இன்ஷா அல்லாஹ்] இன்னும் அதிகமாக வெளிக்கொணர்வோம்.

இந்த அநியாயங்களையெல்லாம் ஒரு முடிவுக்கு கொண்டுவந்திட உச்ச நீதிமன்றத்திடம் முறையிட்டார்கள் மனித உரிமை ஆர்வலர்கள். குறிப்பாக PUCL - என்ற மனித உரிமை அமைப்பு [ People`s Union For Civil Liberties ] உச்ச நீதிமன்றத்தில் தொடுத்த பொதுநல வழக்கில் உச்ச நீதிமன்றம் ' 13 கட்டளைகளை ' பிரஸ்தாபித்துள்ளது. அவற்றை தொகுத்து தருகிறோம்.

**கட்டளை - 1** குரூரமான குற்றங்கள் நடக்கும் என்ற தகவல் அல்லது உளவு காவல்துறையை எட்டினால் காவல்துறை உடனேயே அதற்கு எழுத்து வடிவம் தந்து ஏதாவது வடிவில் பதிவு செய்ய வேண்டும். இதனை காவல் நிலைய டைரியில் - நிலைய நாட்குறிப்பில் பதிவு செய்திட வேண்டும்.[ Preferably in The Case Diary Or Some Electronic Form]

அதாவது கம்யூட்டர் போன்றவற்றில் பதிவு செய்து வைத்திட வேண்டும். இதனை ஏட்டைய்யா செய்கிறார். கொலை நடந்தப்பின்.

**கட்டளை - 2** [ என்கவுண்டர் ] என்ற எதிர்த்தாக்குதல் நடந்தால் அதில் துப்பாக்கி போன்ற ஆயுதங்கள் பயன் படுத்தப்பட்டால் அதன் விளைவாக மரணம் நிகழ்ந்தால் உடனேயே F.I.R என்ற முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவேண்டும். அதனை உடனேயே 157. CRPC இன் கீழ்

நீதிமன்றத்திற்கு அனுப்பிட வேண்டும். இதில் தாமதம் ஏதும் கூடாது.

**கட்டளை - 3** எதிர்த்தாக்குதல் அல்லது நிகழ்வு நடந்த காவல் நிலையம் அல்லாத இன்னொரு காவல் நிலையம் வழி, ஒரு காவலர் குழுமம் [ Police Team ] அல்லது உளவுத்துறை CID ஒரு விசாரனையை நடத்திட வேண்டும். இதனை உயர்மட்ட காவல்துறை அதிகாரி ஒருவர் கண்காணித்திட வேண்டும்.

காவல்துறையினர் செய்யும் எதிர்த்தாக்குதல் என்ற படுகொலையை காவல்துறையே விசாரிக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் கூறியிருப்பது அத்தனை அநீதிக்கும் வழிவகுக்கும். ஒரு பேட்டை ரவுடி செய்யும் கொலையை இன்னொரு பேட்டை ரவுடி தனது தாதாவின் மேற்பார்வையின் கீழ் விசாரித்து உடனயே அறிக்கையை தரவேண்டும் என இனி நமது நீதிபதிகள் நீதியை ஜனரஞ்ச படுத்தினால் ஆச்சர்யபடுவதிற்கில்லை.

**கட்டளை - 4** ஒரு மாஜிஸ்டிரேட் என்ற நடுவரைக் கொண்டு ஒரு விசாரணையை நடத்திட வேண்டும். இது CRPC - *176* ஆம் பிரிவின் கீழ் நடந்திட வேண்டும். இது எதிர்தாக்குதலில் துப்பாக்கி சூடு வழியாக மரணம் நிகழும் போதெல்லாம் நடத்தப்பட வேண்டும்.

**கட்டளை - 5** எதிர் தாக்குதலில் காயம்பட்டு அவர் மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லப்பட்டால் அவரிடம் ஒரு வாக்கு மூலம் வாங்கிட வேண்டும். அந்த வாக்கு மூலம் ஒரு நடுவரால் - மாஜிஸ்டிரேட்டால் வாங்கப்பட வேண்டும். அல்லது அவருக்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவ அதிகாரியால் வாங்கப்பட வேண்டும்.

**கட்டளை - 6** முதல் தகவல் அறிக்கை F.I.R நிலைய வழக்கு பதிவேடு [ Case Diary ] ஆகியவற்றை நீதிமன்றத்திற்கு அனுப்புவதில் தாமதம் ஏதும் இருக்கக்கூடாது.

நம்ம ஊரில் இதெல்லாம் நடப்பதில்லை. கொலையை செய்யும் காவல்துறை அதிகாரிகள் கொலைச் செய்யப்பட்ட வர்களின் இல்லங்களில் என் மகன் தானாகவேதான் இறந்தான் என அறிக்கைகள் தயார் செய்து தந்து விடுவது மிகவும் எளிதாக நடக்கிறது. இதில் காவல்துறை அதிகாரிகள், (S.P. முதல்) தலைமைக் காவல்துறை அதிகாரி முதல் கடைசி காவல்துறை ஏவலர் வரை ஒரே அணியில் செயல்படுகின்றார்கள். தங்களின் முரட்டு அதிகாரத்தைத் தாராளமாகப் பயன்படுத்துகின்றார்கள். ஏழை எளிய மக்களால் இவர்களின் கெடுபிடிகள், கொடூரங்கள் இவற்றைத் தாங்கிட இயலுவதில்லை. ஒரு பையனோடு போகட்டும் என விட்டுவிடு கின்றார்கள். மேலும் காவல் துறையின் கெடுபிடிகள் தாங்கிட முடியாமல் அவர்கள் காட்டும் இடத்தில் கையொப்பம் போட்டுக் கொடுக் கின்றார்கள் மகனைப் பறிகொடுத்த பெற்றோர்கள். இந்த வழி காட்டுதல்கள் வெரும் ஏட்டுச்சுரைக் காயாகத்தான் நாட்டில் நடந்து கொண்டி ருக்கின்றது. இனியும் அப்படியேத்தான் இருக்கும்.

**கட்டளை எண் - 7** புலன்விசாரணை முடிந்தவுடன் நீதிமன்றத்தில் அறிக்கையை விரைந்து தந்திட வேண்டும். இது CRPC - *173* இன் கீழ் நடக்க வேண்டும். குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்படுமேயானல் விரைந்து விசாரணையை நடத்திட வேண்டும்.

உச்ச நீதிமன்றம் இதில் புதிதாக ஒன்றையும் பிரஸ்தாபித்து விடவில்லை. ஏற்கனவே நடப்பில் உள்ளவற்றைத்தான் உச்ச நீதிமன்றம் பீற்றித்திடிகின்றது. உச்சநீதி மன்றம் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் இதுவெல்லாம் இங்கே நடப்பதில்லை.

**கட்டளை - 8** எதிர்தாக்குதலில் மரணம் நிகழ்ந்து விட்டால் இறந்தவரின் நெருங்கிய உறவினர்களுக்கு உடனேயே தகவல் சொல்லிட வேண்டும்.

**கட்டளை - 9** புலனாய்வுக்குப்பின் தாக்கல் செய்யப்படும் அறிக்கையில் சம்பந்தப்பட்ட காவலர் துப்பாக்கியைப் பயன்படுத்தி யிருக்கின்றார், அவர் குற்றம் புரிந்திருக்கின்றார், என்பன போன்ற தகவல்கள் கிடைத்தால் அவர் மீது உடனேயே வழக்குப் பதிவு செய்திட வேண்டும். அந்த வழக்கை விரைந்து நடத்திட வேண்டும்.

**கட்டளை - 10** பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குதல் பொருத்தவரை CRPC *357* ஐ உடனேயே பின்பற்றிட வேண்டும்.

இந்த சுண்டக்காய் இழப்பீட்டை கொலை செய்யும் காவல்துறையின் ' தாதா ' தலைமை காவல்துறை கண்காணிப்பாளர் (SP) யே முடிவு செய்து கிடைப்பதை வாங்கிக்கொள் அல்லாமல் நீங்கள் ஒன்றும் செய்திட இயலாது என்கிறார். இதை

இழப்பீட்டை பெற்றுக் கொள்ள அவர்கள் போடும் தாளங்கள் அனைத்திற்கும் ஆடிட வேண்டியதிருக்கின்றது. இந்த அநீதியை களைந்திட உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதல் எள்ளளவும் உதவிடவில்லை.

**கட்டளை - 11** சம்பந்தப்பட்ட காவல்துறை அதிகாரி, தன்னுடைய ஆயுதத்தையும், அதோடு தொடர் புடைய இதர கருவிகளையும் புலனாய்வு செய்யும் குழுக்களிடம் உடனேயே ஒப்படைக்க வேண்டும். இது அரசியல் நிர்ணயச் சட்டம் பிரிவு 20 - இன் கீழ் நடந்திட வேண்டும்.

உச்ச நீதிமன்றத்தின் இந்த வழிகாட்டு தலும் வெள்ளறிக் காயில் வெண்ணை தடவியது போல் தான் இருக்கின்றது.

**கட்டளை - 12** எதிர்தாக்குதலில் ஈடுபட்டவர்களுக்கு உடனேயே சாகச விருதுகள் அதிரடி பதவி உயர்வுகள் போன்றவற்றை வழங்கிடக் கூடாது. அவர்களின் ' சாகசம் ' சந்தேகங்களுக்கு அப்பால் நிருபிக்கப்படும் வரை இவற்றில் எதையும் வழங்கிடக் கூடாது.

உச்ச நீதிமன்றத்தின் இந்தக் அக்கட்டளை முன்னரே செயலுக்கு வந்திருந்தால் ஆயிரக்கணக்கான போலி என்கவுண்டர்கள் தவிர்க்கப் பட்டிருக்கும். பல்லாயிரக் கணக்கான அப்பாவி உயிர்கள் காப்பாற்றப் பட்டிருக்கும். காரணம் அண்மை காலங்களில் நடக்கும் அத்தனை என்கவுண்டர்களும், பணம், பதவி உயர்வு, பதக்கம், ஆகியவற்றிற்காகவே நடத்தப்பட்டன. முதலமைச்சர்கள் முதல் ஜனாதிபதி என்ற குடியரசு தலைவர் வரை ஏமாற்றப்பட்டு வருகின்றார்கள். இந்த விவகாரத்தில் இனி இப்படி சன்மானங்கள் வழங்கப்பட்டால் உச்ச நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பைக் காட்டி நாம் அவற்றை நிறுத்தலாம். இதனை செய்திட மக்கள் முன்வர வேண்டும்.

**கட்டளை - 13** காவல்துறையினர் செய்யும் கொலையால் பாதிக்கப்பட்ட குடும்பத்தின் மேலே சொல்லப்பட்ட இந்த நெறிமுறைகள், பின்பற்றப்படவில்லை, அல்லது அவை தவறாகப் பயன்படுத்தப்படுகின்றன. விசாரணைகள் சுதந்திரமாக இல்லை, இந்த விசாரணையில் சிலர் ஒருதலை பட்சமாக நடந்து கொள்கிறார்கள், என்றால் மாவட்ட நீதிமன்றத்தில் [மாவட்ட தலைமை நீதிமன்றத்தில்] புகார் மனுவை தாக்கல் செய்யலாம். இப்படியொரு மனு தாக்கல் செய்யப்படுமேயானால் மாவட்ட நீதிபதி அதனை ஆய்வுக்குட்படுத்தி நிவாரண நடவ்டிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இது இப்போது கடைபிடிக்கப்படாத ஒரு நியதி. இதனை செய்திட பொதுமக்களும் சமுதாய அமைப்புகளும் கவனத்தில் கொண்டு நடவடிக்கைகளை மேற் கொண்டிட வேண்டும். நீதிமன்றங்களும். கண்ணை மூடிக் கொண்டு காவல்துறை சொல்வதையெல்லாம் நம்புவதை நிறுத்திட வேண்டும்.

உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள இந்த நெறிமுறைகளுக்காக நாம் உச்ச நீதிமன்றத்தைப் பாராட்டிட இயலவில்லை. காரணம் எல்லா என்கவுண்டர்களிலும் கொலையை செய்யும் காவலர் மீது இந்தியத் தண்டனை சட்டம் பிரிவு 302 இன் கீழ் வழக்குப்பதிவு செய்யப்படவேண்டும் என்ற நியதி இங்கே மீண்டும் வலியுறுத்துப் படவில்லை.

**காவலர்களைத் தூக்கிலிட வேண்டும்.**

[ Potlice men in volved in encounters should be hanged ] அன்றொரு நாள் இப்படி ஒரு அறிவிப்பைச் செய்தது நமது உச்ச நீதிமன்றம். ஆதாரம் : [ The hindu = Tuesday, Aug,9.2011 ]

"They are nothing but cold blooded brutal murder"

should be treated as the rarest of rare offences, and police pensonnel responsible for it should be awarded death sentense. They should be hanged justice katji said"

(ibid) TH. Aug 9/2011.

என்கவுண்டர் என்பவை பட்டப் பகலில் நடக்கும் குரூர கொலைகள் அல்லாமல் வேறொன்றுமில்லை. இந்த குற்றங்களை அரிதானவற்றிலும் அரிதானவை என எடுத்துக் கொள்ள வேண்டும். இதற்குப் பொருப்பான காவலர்களுக்கு மரண தண்டனை வழங்கிட வேண்டும். அவர்களைத் தூக்கிலிட வேண்டும். இந்த காரமும் கசப்பும் உச்ச நீதிமன்றத்தின் இப்போதைய பரிந்துரையில் இல்லை.

**-எம்.ஜி.எம்**

புத்தம் புது பொலிவுடன்

வைகறை பிளாக்.

Link

http://vaigaraivelichem.blogspot.in/

# சொல்ல மறந்த குமுதம் ரிப்போர்ட்டர் கோவை எஸ். ஷக்தி.

கடந்த செப்டம்பர் 2014-ல் குமுதம் ரிப்போர்ட்டரில் "எங்கள் அமைப்பை பிரபலப்படுத்த அடுத்தடுத்து கொலைகள்" அதிர வைக்கும் குட்டி குலாம் கைது பின்னனி என்ற தலைப்பில். ஒரு செய்தி வெளியானது.

தமிழ் நாட்டில் கடந்த சில மாதங்களாக கள்ள காதல் தொடர்பாக இந்து முன்னனி பிரமுகர்கள் கொலை செய்யப்படிருப்பதை நாம் சில பத்திரிக்கை செய்தி மூலம் அறிந்து கொண்டோம். வழக்கம் போல் இந்த கொலைகளுக்கு முஸ்லிம்களை பனையவைத்து இட்டுக்கட்டுவது நம் உளவுத்துறையின் வேலை. அதை பணம் பெற்றுக் கொண்டு செய்தியாக வெளியிடுவது நம் ஊடகங்களின் விசுவாசம். அந்த விசுவாசம்தான் இந்த தலைப்பு " அதிர வைக்கும் குட்டி குலாம் கைது பின்னனி ".

### சாஹுல் ஹமீது கைது

சமீபத்தில் சென்னையில் நடந்த ஒரு கொலையில் நிறைய முஸ்லிம் இளைஞர்களை கைது செய்தது உளவுத்துறை. அதில் சாஹுல் ஹமீது என்ற ஒரு முஸ்லிம் இளைஞனையும் கைது செய்து சம்பந்தப்படுத்தியுள்ளது. அது மட்டுமல்லாமல் தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் - இன் காப்பளாராகிய ஜனாப் - மு. குலாம் முஹம்மது அவர்களை எந்த சம்பந்தமும் இல்லாமல் தறைகுரைவாக சித்தரித்து செய்தியை வெளியிட்டிருந்தது குமுதம் ரிப்போர்ட்டர்.

### சொல்ல மறந்த எஸ்.ஷக்தி

திரு. ஷக்தி அவர்களே தாங்கள் வெளியிட்டுள்ள செய்தித் தொகுப்பை படிக்கின்ற ஒவ்வொருவரும் தாராளா மாக புரிந்துக் கொள்வார்கள் இந்த செய்தி பொய் செய்தி என்று. ஏனென்றால் நீங்கள் கூறிய மு. குலாம் முஹம்மது ஒன்றும் உங்கள் பத்திரிக்கை யால் அறிமுகமான நபர் இல்லை. தமிழகத்தில் நன்கு அறிமுகமுள்ள ஒரு சிறந்த எழுத்தாளர் மற்றும் பத்திரிக்கை யாளரும் கூட. அவரின் எழுத்துக்கள் இந்தியாவின் உளவுத்துறை உங்களுக்கு எழுதிக் கொடுத்த எத்தனையோ பொய் செய்திகளின், பொய் வழக்குகளின் உண்மை முகத்தை காட்டிட வழி வகுத்தது.

ஐயா ஷக்தி அவர்களே தாங்கள் அந்த ஆக்கத்தில் " தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் அமைப்பு " என்று குறிப்பிட்டுள்ளீரே! அது ஒரு " டிரஸ்ட் " என்று ஏன் குறிப்பிடவில்லை? அமைப்பு என்றால்தான் மக்கள் மனதில் நீங்கள் செய்வது எடுபடும் என்ற காரணத்தினாலையோ? தாங்கள் தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் என்றும் குலாம் முஹம்மது என்றும் குறிப்பிட்டிருந்தீர்களே. தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்டின் பணிகளையும், மு. குலாம் முஹம்மது அவர்களின் செயல்பாடுகளையும் எழுத மறந்தது ஏன்? உங்களுக்கு எழுதிக் கொடுத்தவர்கள் இதை சொல்ல வில்லையோ?

தமிழ்நாட்டில் நடக்கும் கொலைகளைப் பற்றி எழுதுகிறீர்கள். அதில் முஸ்லிம்களையும் பணைய வைக்கிறீர்கள். ஏன் இந்தியாவில் உளவுத் துறை நடத்திய குண்டுவெடிப்புகளையும், அதை கண்டு பிடித்த ஹேமந்த் கர்க்கரேயை 2008 - ல் மும்பை தாக்குதல்கள் என்ற நாடகத்தை அரங்கேற்றி இந்தியாவின் உளவுத்துறைதான் கர்க்கரேயை கொன்றது என்றும் ஆதாரப்பூர்வமாக தமிழ் நாட்டில் மட்டும் 26 இடங்களில் பொதுத்தளங்களிலும், அரங்கங்களிலும் பேசி இந்திய தீவிரவாதத்தின் உண்மை முகத்தை கிழித்தாரே அப்போது நீங்கள்

எங்கே ஒளிந்துக் கொண்டிருந்தீர்கள்?

இதே தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்டின் குலாம் முஹம்மது அவர்களின் தீவிர போராட்டத்தால் அப்பாவி முஸ்லிம் இளைஞர்கள் நாடு முழுவதும் விடுவிக்க ப்பட்டார்களே அதை என்றாவது உங்கள் கைகள் எழுத தூண்டியது உண்டா? காஷ்மீரில் நடந்த அவலங்களையும், இந்திய இராணுவம் முஸ்லிம் பெண்களை கர்ப்பழிப்பதையும், முஸ்லிம் ஆண்களை கொலை செய்து இரகசிய பொதைகுழிகளில் புதைப்பதையும் ஆதாரத்தோடு தமிழ் நாடு முழுவதும் எடுத்துறைத்தாரே தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்டின் குலாம் முஹம்மது அவர்கள். அப்போது உங்கள் காதுகளையும், கண்களையும், கைகளையும் எங்கே வைத்திருந்தீர்கள்?

வகுப்புவாத வன்முறை தடை சட்டத்தை அரசு அமல்படுத்த முயலும்போது இந்துத்துவ வாதிகள் மட்டும் அதை தடுத்தனர். அந்த சட்டத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி எடுத்து கூறி அதை அமல் படுத்த பரிந்துரை செய்தும் அவரின் வைகறை வெளிச்சம் பத்திரிக்கையில் எழுதினாரே அப்போது அந்த வைகறை வெளிச்சத்தின் குலாம் முஹம்மதுவை நீங்கள் கண்டுக் கொள்ளாமலிருந்தது ஏன்? இந்துத்துவாவின் எதிர்ப்பா? அல்லது உங்களின் உளவுத்துறை விசுவாசமா?




**நியாயமான கோபம்தான்**

*2006* - ல் இதே குலாம் முஹம்மது அவர்கள் மனித நீதி பாசறை என்ற அமைப்பை நடத்திக் கொண்டிருக்கும் போது கோவை எஸ்.ஐ.டி. - ஐ சார்ந்த டி.எஸ்.பி, இரத்தின சபாபதி அவர்கள் தானே ஒரு வெடிகுண்டை தயாரித்து வைத்துவிட்டு பழியை மனித நீதி பாசறையின் மீது சுமத்தினான். அதை " மனித நீதி பாசறைக்கு தடையா? " என்றெல்லாம் உங்களைப் போன்ற ஊடகங்கள் தலைப்பிட்டு எழுதி யிருந்தன. தாங்கள் தங்களின் கட்டுரையில் எழுதியுள்ளீரே இந்த கைது குறித்து உண்மை கண்டறியும் குழு முயற்சியில் இறங்கியுள்ளது என்று அதுப்போல் அன்றும் இரத்தின சபாபதியின் ஈன செயலுக்கும் உண்மை கண்டறியும் குழு களம் இறங்கி யதால்தான் டி.எஸ்.பி. இரத்தின சபாபதி மற்றும் உளவுத்துறையின் உண்மை முகம் வெளியே வந்தது.

இன்றும் உங்களுக்கு ஒன்றை நினைவுப் படுத்துகிறேன். மனித நீதி பாசறைக்கு தடையா? என்று உங்களைப் போன்ற ஊடகங்கள் தலைப்பிட்ட போது இதே தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்டின் குலாம் முஹம்மது அவர்கள் ஓடி ஒளியவில்லை. நான்தான் குலாம் முஹம்மது என்று நெஞ்சை நிமிர்த்தி " பிரஸ் மீட் " நடத்தி அவர்களின் சேவை பணிகளை கூறிக் கொண்டிருந்ததை உங்கள் கைகள் எழுத மறுத்துவிட்டது என்பதை நினைவுக் கூர்ந்துப் பாருங்கள். ஆகையால் இதுபோன்ற பொய் செய்திகளையும், உளவுத்துறையின் தகிடுத்தத்தங்களையும் விலைமாதுகளை போல் பரப்பும் உங்களைப் போன்ற பத்திரிக்கைகளுக்கு தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்டின் மு. குலாம் முஹம்மதை கண்டால் கோபம் வரத்தான் செய்யும்.

**உலகளவில் வளர்வது இஸ்லாமே!**

தாங்கள் தங்கள் பத்திரிக்கையில் உலகளாவிய முஸ்லிம்களின் வாழ்க்கை முறை எப்படி இருக்கிறது, வெளி நாடுகளில் இஸ்லாமியர்கள் எப்படியெல்லாம் போராடி அதிகாரத்தை





கைப்பற்றுகிறார்கள் என்றெல்லாம் எழுதியிருக்கின்றீர்களே! தங்களது ஆறாவது அறிவில் என்றாவது இப்படி சிந்தித்ததுண்டா? " நாமெல்லாம் வாங்குகின்ற சம்பளத்திற்காக இஸ்லாத்தை தாக்கி எழுதுகின்றோம் ஆனால் உலகம் முழுவதும் இஸ்லாம் வளர்ந்துக் கொண்டே இருக்கிறதே பல பிரபலங்கள் இஸ்லாத்தை நோக்கி வந்துக் கொண்டிருக்கிறார்களே " என்று?

யுவானி ரிட்லியை உங்களுக்கு தெரியுமா? உளவுத்துறை உங்களுக்கு தாலிபான்கள் என்றாலே தீவிரவாதிகள் என்று போதித்திருப்பார்கள். ஆனால் தாலிபான்களின் பிடியில் மாட்டிக் கொண்ட யுவானி ரிட்லி அவர்களின் செயல்பாடுகளை கண்டு இஸ்லாத்தை தழுவினார்கள். பின்பு அந்த அனுபவங்களை தாலிபானின் பிடியில் என்று நூல் வடிவில் வெளியிட்டார். அதை குலாம் முஹம்மது அவர்கள் தமிழில் மொழிப்பெயர்த்து வெளியிட்டுள்ளார்கள். அந்த நூலை வாங்கிப் படியுங்கள்.




**தாங்களும் - ஒரு குட்டி ஐ.பி. யே.....!**

தமிழகத்திலும் இன்னும் பிற இடங்களிலும் சில பத்திரிக்கைகளுக்கு ஒரு பழக்கம் உண்டு. அது விலைமாது களை போல் உளவுத்துறை மற்றும் காவல்துறைகளிடமிருந்து பணத்தை பெற்றுக் கொண்டு நடந்த சம்பவத்தை ஆய்வு செய்யாமல் அவர்கள் கொடுக்கும் செய்தி களை அப்படியே வாந்தியெடுப்பது. அதில் நீங்கள் சற்றும் சளைத்தவரில்லை என்று தங்களின் பத்திரிக்கை செய்தி நிருபித்து விட்டது. நாட்டில் கிருத்துவர்கள் மற்றும் முஸ்லிம்களுக்கு எதிராக எத்தனையோ இனக்கலவரங்கள் நடந்துக் கொண்டிருக் கிறது. குண்டுவெடிப்புகளில் இந்துத்துவ வாதிகள் மற்றும் உளவுத்துறைகள் மாட்டிக் கொண்டே இருக்கின்றார்கள். இவற்றை யெல்லாம் தங்கள் கைகள் எழுத மறுத்துக் கொண்டே இருக்கிறது. காரணம் தங்களுக்கு செய்திகளை இடச்செய்வது உளவுத்துறை என்பதே எதார்த்த உண்மை. இதை பொது மக்களும் நன்றாக அறிவார்கள். மொத்தத்தில் இஸ்லாமி யர்களையும், வைகறை வெளிச்சம் பத்திரிக்கையையும் , அதன் ஆசிரியர் மு. குலாம் முஹம்மது அவர்களையும் எதிர்த்து உண்மைக்கு புறம்பாக உளவுத் துறை எழுதிக் கொடுத்த செய்தியை வெளியிட்ட தாங்களும் ஒரு குட்டி ஐ.பி. யே.

**– அப்துல் பாஸித்**



# மேற்குவங்கம் பர்துவான் குண்டுவெடிப்பு

## *கிரிமினல்களின் கைவண்ணம்.*

பாரதீய ஜனதா கட்சி தேர்தகள் வரும் இடங்களில் கலவரமே எங்கள் வழி என்பதை நிரூபித்து வருகின்றது. ஓட்டுக்காக குண்டுவெடிப்பையும் நடத்திட இவை தயங்குவதில்லை. பாட்னாவில் வைத்த குண்டுகள்தாம் பீகாரிலும், ஆந்திராவிலும் அவர்களுக்கு பலன்களை பெற்றுத் தந்துள்ளது.

*2006* - இல் மேற்கு வங்கத்தில் பர்துவான் எனும் இடத்தில் குண்டு ஒன்று வெடித்தது. அது குண்டுகளைத் தயாரித்து கொண்டிருந்தவர்களின் வியாபார இடம். குண்டுகளை தயாரித்துக் கொண்டிருந்தவர்கள், குண்டு வெடிப்பில் உயிரை இழந்தவர்கள் என அத்தனை பேரும் முஸ்லிம்கள். இது பாரதீய ஜனதா கட்சியை மேற்கு வங்கத்தில் வளர்க்க வழிதெரியாமல் அல்லாடிக் கொண்டிருந்தவர்களுக்கு அழகான வாய்ப்பாகப் போனது.

குண்டுகள் வெடித்த உடனேயே வங்காளதேச தீவிரவாதம் இந்தியாவுக்குள் பாய்ந்து வந்துவிட்டது எனக்கூப்பாடு போட்டு அரசியலில் இலாபங்களைத் தேடிக்கொள்ள முயற்சிகளை மேற்கொண்டார்கள். நமது உளவுத்துறை இதற்கான தாளங்களை போட்டது. மக்கள் பெருமதிப்போடு போற்றி வந்த ' NIA ' என்ற நேஷனல் இன்வெஸ்டிகேஷன் ஏஜென்ஸியும் இதற்கு துணைபோனது எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தியது.



பர்துவானில் நடந்த குண்டுவெடிப்பு அந்த மொஹல்லாவில் வாழ்ந்த முஸ்லிம்களையும் ஏன் மேற்கு வங்கம், அஸ்ஸாம், ஆகிய மாநிலங்களில் வாழும் முஸ்லிம்களையும் மத்திய உளவுத்துறையையும், தேசிய புலானாய்வுக் குழுவையும் ஏவிவிட்டு கபளிகரப்படுத்தினார்கள். பின்னர் கிடைத்த வாய்ப்புகளை நழுவ விடக்கூடாது என்பதால் வங்காள தேசம் என்ற நமது அண்டை நாட்டுக்குச் சென்று ஆய்வுகளை நடத்துகிறோம் எனக் கூறி அங்கே சென்றுள்ளார்கள். இந்த கபளிகரத்தில் குண்டுவெடிப்பு நடந்த இடத்திற்குப் பக்கத்தில் உள்ள ஒரு மதரஸாவில் ஓதிக் கொண்டிருந்த மாணவன் ஒருவனை நெருப்பிட்டுக் கொளுத்த முயற்சி செய்துள்ளார்கள். அங்கே இருக்கும் அரசு இஸ்லாத்திற்கு எதிரானது. அது நமது உளவுத்துறைக்கு பெரிய அளவில் பயன்பட்டுக் கொண்டிருக்கிறது. மேற்குவங்க முஸ்லிம்களின் நிலைமை நாளுக்கு நாள் மோசமாகி வருவதால், முஸ்லிம்களின் நலனில் அக்கறை கொண்ட டெல்லியிலுள்ள மஜ்லிசே முஷாவரத் என்ற அமைப்பு களமிறங்கி உண்மைகளைக் கண்டறிந்திட முன்வந்தது.

**இந்த குழு கண்டறிந்த உண்மைகளை இங்கே தருகிறோம் :**

*1.* குண்டுகளை தயாரித்த காங்கிரகார்க் இல்லத்தில் குண்டுகளை தயாரிக்கும் பணி பல மாதங்களாக நடந்து கொண்டிருக்கின்றது. இது அந்தப் பகுதியுலுள்ள காவல் நிலையத்திற்கு நன்றாகத் தெரியும். அதே போல் அங்குள்ள எல்லா அரசியல்வாதிகளுக்கும் நன்றாகத் தெரியும். எந்த அளவுக்கு என்றால் ஓர் அரசியல் கட்சி கடந்த நாடாளுமன்ற தேர்தலில் இதே கட்டிடத்தில் காங்கிரகார்க் இல்லத்தில் தனது கட்சி அலுவலகத்தைத் தொடங்கியது. இதனால் காவல்துறையினர் மிகவும் அதிகமாக வந்து போகும் இடங்களில் ஒன்று இந்த காக்கிரா கார்க் இல்லம்.

**2.** குண்டுகளைத் தயாரித்தவர்கள் அவற்றை அரசியல்வாதிகளுக்கும், குண்டர்களுக்கும் விற்று வாழ்ந்துக் கொண்டிருந்தார்கள். இந்த உண்மையை அனைவரும் அறிவார்கள். குண்டுகளைத் தயாரித்தவர்கள் அரசியல் வாதிகளும், குண்டர்களும் தந்த ஆதரவில் சொ வாழ்ந்து கொண்டிருந்தவர்கள்தாம். இதனால் அவர்கள் அந்த பகுதியில் மிகுந்த ஆதிக்கம் நிறைந்தவர்களாக இருந்தாரகள். இந்த உண்மைகளைத் தெரிந்து வைத்துக் கொண்டே ஊடகங்கள் முஸ்லிம்களை மிகவும் கேவலமாக சித்தரித்துக் கொண்டிருக்கின்றது.

**4.** பாரதீய ஜனதா கட்சியினருக்கும் இந்தக் கூட்டத்தோடு அதாவது குண்டு தயாரிக்கும் கூட்டத்தோடு தொடர்பு உண்டு என எல்லோரும் கூறுகின்றார்கள். மேற்கு வங்க மாநிலத்தில் மம்தா பானர்ஜியின் கட்சியாகிய திரினாமுல் காங்கிரஸ் தான் ஆட்சி செலுத்தி வருகின்றது.அதனிடமிருந்து பிர்பூம், பர்துவான் மற்றும் நாதியா ஆகிய மாவட்டங்களைக் கைப்பற்றிட பாரதீய ஜனதா கட்சி முயற்சி செய்து வருகின்றது. இந்த மாவட்டங்களில் தன்னை நிலைபெறச் செய்திட குண்டு வெடிப்பு அரசியல் பெரிய அளவில் உதவுமென பாரதீய ஜனதா கட்சி நம்புகிறது.

இதனால் 2016 தேர்தலை மையப்படுத்தி இதுபோன்ற நிகழ்ச்சிகள் இன்னும் அதிகமாக நடக்கலாம். என மக்கள் குறிப்பாக முஸ்லிம்கள்



அஞ்சுகின்றார்கள்.

- அல் - இந்தியா மஜ்லிசே முஷாவரத்
155, Kasayar Road, Kolkata - 700017




# நாம் பிரிந்து விட வேண்டாம்

ஆசிரியர்
டாக்டர் யூசஃப் அல் கர்லாவி

தமிழில்
மௌலவி இலியாஸ் ரியாஜி.M.A

விலை : 175/-

போன் - 9841675657

# உண்மை விளம்பி சுத்திர தீப் சக்கரவர்த்தி மரணம்!



சுத்திர தீப் சக்கரவர்த்தி ஒரு சிறந்த பத்திரிக்கையாளர். கோத்ராவில் 2002ஆம் ஆண்டு நடந்த இரயில் எரிப்பை மையப்படுத்தித்தான் குஜராத் 2002 இனப்படுகொலைகளை சங்கப்பரிவாரம் நடத்திக்காட்டிற்று. அதற்கு இனப்படுகொலை புகழ் நரேந்திர மோடி தலைமை தாங்கினார். இதனை 2002 குஜராத் இனப்படுகொலை என்றும், மோடியின் மனித இனத்திற்கெதிரான குற்றம் என்றும் உலகெங்கும் அழைக் கிறார்கள்.

இந்த இனப்படுகொலைகளுக்காக மோடியை சட்டத்தின் முன் நிறுத்தி சிறையில் அடைக்கலாம் என ஏ.ஜி. நூரானி என்ற மூத்த வழக்கறிஞரும், பிர பலமான பத்திரிக்கை யாளரும் தொடர்ந்து வாதிட்டு வருகின்றார்.

ஆனால் ஜனநாயகம் எனும் கபடநாடகத்தில் சிறையிலிருக்க வேண்டிய மோடி சிம்மாசனத்தில் இருக்கின்றார். குஜராத்தில் 20,000 முஸ்லிம்களை கொலை செய்யப்பட்ட மொத்த நிகழ்விற்கும் குஜராத்தில் கோத்ரா என்ற இடத்தில் உள்ள இரயில் நிலையத்தைத்தான் காரணம் காட்டினார்கள்.

இந்த இரயில் நிலையத்திலிருந்து சற்று வெளியேதான் சபர்பதி எக்ஸ்பிரஸ் என்ற இரயிலின் இரண்டு பெட்டிகள் எரிக்கப்பட்டன. இந்த இரயில் பெட்டிகளை கொளுத்தியதாக முஸ்லிம்கள் மேல் பழி. படுகொலைகள். ஆனால் இரயில் பெட்டிகள் எரிந்தது உள்ளிருப்பு என்பது பின்னர் தெரியவந்தது. இதனை மிகவும் ஆதாரப்பூர்வமான ஆவணப்படமாக தயார் செய்தவர் சுத்திர தீப் சக்கரவர்த்தி.

அதில் வெளியிலிருந்து இரயில் பெட்டியை நோக்கி பெட்ரோலை வீசி இருக்கவியலாது ஏனெனில் இரயில் பெட்டியில் தீப்பிடித்து எரிந்த இடம் மிகவும் மேடானது. ஒரு மலை முகட்டின் மேல் நின்றுக் கொண்டிருந்த இரயில் பெட்டியின் மீது கீழிருந்து யாரும் பெட் ரோலை ஊற்றி இருக்கவியலாது. என்பதை ஆணித்தரமாக படக் காட்சிகளின் மூலம் நிருபித்தார்.

சுத்திர தீப் சக்கரவர்த்தியின் ஆவணப்படத்தை பார்த்தவர்கள் கோத்ரா இரயில் பெட்டி எரிப்பு என்பது ஒரு போலி நாடகம் என்பதை புரிந்துக் கொண்டார்கள்.

இதில் சுத்திர தீப் சக்கரவத்தியிடம் பாராட்ட வேண்டிய விவகாரம் என்னவென்றால், அவர் இந்த ஆவணப்படத்தை மோடியின் ஆட்சியின் போதே குஜராத்தில் உள்ள அஹமதாபாத்தில் திரையிட்டுக் காட்டினார். தங்களுடைய சதித்திட்டமும், உண்மையும் உலகமக்களுக்குத் தெரிந்திட வந்ததைக் கண்டு, ஆத்திரமடைந்த சங்கபரிவாரத்தினர் - அதாவது மோடியின் வகையறாக்கள் அவரை தாக்கினார்கள். இரத்தம் சிந்த வைத்தார்கள். அவருடைய திரைப்பட கருவிகளை உடைத்தெறிந்தார்கள்.

அத்தனையையும் தாங்கினார் சுத்திர தீப் சக்கரவர்த்தி. ஆனாலும் தனது முயற்ச்சியை கைவிடவில்லை. தனது ஆவணப்படத்தை நாட்டின் முக்கியத் தலை நகரங்களிலெல்லாம் வெளியிட்டுக்கொண்டே வந்தார். அப்போது அவர் சென்னை வந்திருந்த போது நாம் அவரை வரவேற்று, சிறியதொரு நிதி உதவியையும் செய்தோம். அவருடைய பேட்டி ஒன்றும் நம்முடைய பத்திரிக்கையில் வெளிவந்திருந்தது. பின்னர் உலகின் பல அரங்கங்களிலும் இந்த ஆவணப்படத்தை வெளியிட்டார் சுத்திரதீப் சக்கரவர்த்தி அவர்கள்.

இவர் கோத்ராவில் நடந்த இரயில் எரிப்பு பற்றிய மாற்றுச் சிந்தனையை ஏற்படுத்திய பின்னர், சங்கபரிவாரத்தின் உண்மை முகம் உலகுக்கு வெளிச்சமானது. தொடர்ந்து லல்லுபிராசத் அவர்கள், நீதி, Î.C.பானர்ஜி அவர்களின் தலைமையில் விசாரணை கமிஷன் ஒன்றை நியமித்தார்கள்.

அந்த கமிஷன் " இரயில் பெட்டியின் உள்ளேயிருந்துதான் தீப்பிடித்திருக்கின்றது. அது வெளியே உள்ளவர்களின் வேலை அல்ல. " என்பதை வெளிப்படுத்தியது.

இதற்கு முன்னால் டெல்லியில் ஒரு இரயிலில் இதே போல் தீப்பிடித்திருக்கின்றது, என்பதையெல்லாம் சுட்டிக்காட்டி முஸ்லிம்களுக்கும், கோத்ரா இரயில் நிலையத்திற்கு அருகாமையில் நடந்த இரயில் பெட்டி எரிப்பிற்கும், எந்த சம்பந்தமுமில்லை என்பதை தெளிவுப்படுத்தினார். ஆனால் இந்த கமிஷனின் அறிக்கை வெளியே வந்து விடாமல் தடுத்து விட்டார்கள். மோடிப்பேரவையாக இயங்கிய குஜராத் நீதி மன்றங்கள் அதை மறுத்து விட்டன. இத்தனையையும் இவருடைய " கோத்ர டாக் " [gotra attack] எனும் ஆவணப்படம் சாதித்துக் காட்டியது. ஆனால் இரயில் பெட்டிகளில் தீவைத்தது, அதில் பயணம் செய்த கரசேவகர்களா என்பதை பற்றி ஆய்வு செய்திட அனுமதிக்கவில்லை அதிகாரவர்கத்தினர்.

### எதிர் தாக்குதல்கள்

இந்தியாவில் முஸ்லிம்களை குறிப்பாக முஸ்லிம் இளைஞர்களைக் கொலை செய்தால் அதைக் காவல் துறை அதிகாரிகள் செய்தால் அவர்களுக்கு பதவி உயர்வும், பதக்கங்களும், பாராட்டுக்களும் கிடைக்கும். இப்படி பல இளைஞர்கள் குஜராத்திலும், டெல்லியிலும், இப்போது தமிழகத்திலும் கொலை செய்யப்படுக்கின்றார்கள் .இவற்றிற்கு எதிர் தாக்குதல் என்று பெயர். இந்த அநீதிகளுக்கு எதிராக ஆவணப்படங்களை தயாரித்தார்கள் சுத்திர தீப் சக்கரவர்த்தி அவர்கள். அந்த ஆவணப்படத்தின் குறுந்தகடுகளை விநியோகிப்பதிலும் தாருல் இஸ்லாம் தனது பங்களிப்புகளை தாராளமாக தந்தது. அந்த ஆவணப்படத்திற்கு காவிகளுக்காக நடக்கும் எதிர் தாக்குதல் என்ற கொலைகள் என்று பெயர் வைத்திருந்தார்.

### வழக்கறிஞர்கள் கொலை

இந்திய தீவிரவாதத்தின் ஊற்றுக்கண் மராட்டிய மாநிலம்தான். இங்கே உள்ள சித்பவன் எனும் இடத்திலிருந்துதான் அத்தனை சங்கப் பரிவார பாசிஸ்ட்டுகளும் பெருக்கெடுத்து வருகின்றார்கள். விடுதலையடைந்த இந்தியாவின் முதல் தீவிரவாதி கோட்சே, பாபரி மஸ்ஜித்தை இடிக்க வகை செய்து தந்த தீவிரவாதி நரசிம்மராவ் ( இவர் 1991 முதல் 1996 வரை இந்தியாவின் பிரதமராகவும் இருந்தார்) இவர்களையும் மும்பைத் தாக்குதலை நடத்திய அபிநவ் பாரத் என்ற இந்துத்துவ அமைப்பையும், சிவசேனா என்ற அமைப்பையும் தந்த மாநிலம் மராட்டிய மாநிலம்.

இப்படி பாசிசத்தின் பிறப்பிடமாகிய மராட்டிய மாநிலத்தில் இன்னொரு தீவிரவாதம் தொடங்கியது. அது அப்பாவி முஸ்லிம்களுக்காக வாதாடும் முஸ்லிம் வழக்கறிஞர்களை சுட்டு கொலை செய்தது. மும்பையில் மஜீத் மேமன் என்ற வழக்கறிஞர் மும்பையில் பல்வேறு குண்டுவெடிப்புகளில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்ட அப்பாவி முஸ்லிம்களுக்காக தானாக முன்வந்து வழக்காடினார். அவரை கொல்வதற்காக துப்பாக்கியால் சுட்டார்கள். அவருடைய மெய்க்காப்பாளர் அந்த துப்பாக்கிக் குண்டை தன் மார்பில் வாங்கி ஷஹீதானார். மேமன் உயிர்த் தப்பினார். ( இன்னா லில்லாஹி வ இன்னா அலைஹி ராஜிவூன் - இறைவனிடமிருந்தே வந்தோம் அவனிடமே மீளுவோம் ).

அதேப்போல் பல அப்பாவி முஸ்லிம்களுக்காக வாதாடி அவர்களை சிறையிலிருந்து மீட்டவர். ஷஹீத் அப்பாஸ் காசிமி. அவர் மீது சரமாரியாக குண்டு மழையைப் பொழிந்து கொலை செய்தார்கள். சங்கப்பரிவாரத்தினர். இவற்றையெல்லாம் ஒன்றிணைத்து ஓர் ஆவணப்படத்தைத் தயார் செய்தார் சுத்திர தீப் சக்கரவர்த்தி! அதற்கு " நீதிமன்றத்திற்கு வெளியே முடிந்த தீர்ப்புகள் " () என பெயர் வைத்து ஆவணப்படம் ஒன்றைத் தயார் செய்தார். சங்கப்பரிவாரத்தின் வெறியாட்டங்களை உலகறிய செய்தார்.

### "குற்றமற்றவர்கள்" நீதிமன்றங்கள்

நமது மத்திய உளவுத்துறை அதன் கட்டுப்பாட்டில் இயங்கிடும் காவல்துறையினர் இவர்களையெல்லாம் முஸ்லிம் இளைஞர்களின் வாழ்வையும், அதன் மூலம், அவர்களைச் சார்ந்து வாழும் பெற்றோர்களையும் சின்னாப் பின்னமாக்கி சீரழித்து வரு கின்றார்கள். இதற்கு அவர்கள் கையாளும் தந்திரங்களுள் ஒன்று ஓர் இளைஞனைப் பிடித்து நாடெல்லாம் நடக்கும் குண்டு வெடிப்புகளுக்கு இவர்களே காரணம் என்று குற்றப்பத்திரிக்கையில் கூறிவிடு வார்கள்.இதனால் இந்த இளைஞர்கள் நாடெங்கும் உள்ள நீதிமன்றங்களில், வழக்குகளை நடத்தி தங்களை விடுவித் திட வேண்டிய இமாலயப் பொறுப்பை சுமக்கிறார்கள். பெரும்பாலும் நமது தாய்மார்கள் தான் இந்தப் பெரும் பொறுப்பை சுமக்கிறார்கள். இவர்கள் அனைத்து வழக்குகளிலிருந்தும் விடுவிக்கப்பட்டாலும்




அவர்களை குற்ற வாளிகள் என்றும், தீவிரவாதிகள் என்றும் தான் உளவுத்துறையும், காவல் துறையும் பார்க்கிறது.

விடுதலை அடைந்தவர்களை வேறு ஏதேனும் வழக்குகளில் இணைத்திட தொடர்ந்து பாடுபட்டு வருகிறார்கள். இதையெல்லாம் மக்கள் மன்றத்தில் கொண்டுவந்திட ஓர் ஆவணப்படத்தைத் தயார் செய்தார் சுத்திர தீப் சக்கர வர்த்தி. அதற்கு " புயலுக்குப் பின் அமைதி இல்லை " என்ற பெயரில் வெளியிட்டார்.

### முசாபர் நகர் அநீதி [உத்திரப்பிரதேசம்]

உத்திரப்பிரதேசத்தில் 130 கலவரங்களை நடத்தி 72 நாடாளுமன்ற தொகுதிகளை கைப்பற்றினார்கள் பாசிச பரிவாராத்தினர்.இதில் மிகப்பெரிய படுகொலையாக நடந்தது முசாபர் நகர் கலவரம். அங்கே வாழ்ந்த முஸ்லிம்கள் வீடுகளிலிருந்து வெளியேற்றப் பட்டார்கள். அவ்வாறு வெளியேற்றப் பட்டவர்களின் எண்ணிக்கை அகதிகள் முகாம்களில் 63,000 பேர் என முடிந்தது. முஸ்லிம்கள் இஸ்லாத்திலிருந்து வெளியேறினால்தான் மீண்டும் அவர்கள் தங்கள் இல்லங்களுக்குச் செல்ல முடியும் என்ற நிலை. ஆனால் முஸ்லிம்கள் இஸ்லாத்திலிருந்து வெளியேறிட முடியாது என்று கூறிவிட்டார்கள்.அதனால் அவர்கள் தங்கள் சொந்த இல்லங்களுக்கும், வீடுகளுக்கும் திரும்பிட இயலவில்லை.

அடுக்கடுக்கான அநீதிகளுக்கு ஆளாகி நிற்கும், முஸ்லிம்களின் அவலங்களை மக்கள் மன்றத்திற்கு தந்துக் கொண்டிருந்த விளக்கு அணைந்தது.

முஸ்லிம்கள் ஐந்து இலட்சம் ரூபாயை பெற்றுக் கொள்ளலாம். ஆனால் தங்கள் இல்லங்களுக்குச் சென்றிடக் கூடாது. என முலாயம் சிங் - இன் அரசு எழுதி வாங்கியது. விடுதலையடைந்த இந்தியாவில் இதனையொத்ததோர் கோர நிகழ்வு நடந்ததே இல்லை. இந்த முலாயம் சிங் - இன் அரசுக்குத்தான் முஸ்லிம்கள் சட்டசபை தேர்தலில் தங்கள் வாக்குகளை அள்ளித் தந்தார்கள்.

அடுத்து முலாயம் சிங் - இன் சார்பில் உத்திரப்பிரதேசத்தில் ஆட்சி நடத்தும் அகிலேஷ் யாதவ், "144" ஊரடங்கு உத்தரவு செயலிலிருக்கும் போதே சங்கப்பரிவாரம். ஒரு லட்சம் இந்துத் தீவிரவாதிகளை ஒன்று திரட்டி வகுப்புக் கலவரங்களை நடத்தி முடித்தார்கள். அகதிகளாகவும் ஆனார்கள் முஸ்லிம்கள். அந்த அகதிகள் முகாம்களில் கூட நிம்மதியாக வாழ்ந்திட விடவில்லை அகிலேஷ் யாதவ். அகதிகள் முகாம்கள் தனது அரசுக்கு அவமானமாகவும் உலக அளவில் நெருக்கடிகள் வருவதாகவும் கூறினார். முஸ்லிம்கள் அனைவரும் உடனே அகதிகள் முகாம்களைக் காலிசெய்துவிட்டு வெளியேறிட வேண்டும் என்றார். மாற்று ஏற்பாடுகள் எதையும் செய்யவில்லை.

அகதிகள் முகாம்களிலிருந்தும் விரட்டப்பட்ட முஸ்லிம்கள் வக்ஃப் போர்டுக்குச் சொந்தமான இடங்களில் சென்று தங்கினார்கள். அவையெல்லாம் அரசாங்க இடம் என்றும், அவற்றில் தங்கி இருப்பதின் மூலம் அவர்கள் அரசாங்க இடத்தை





ஆக்கிரமித்து விட்டார்கள் என்றும் வழக்குகளை பதிவு செய்தார்கள். இதுதான் கஷ்டங்களிலும், நஷ்டங்களிலும் தங்களது கட்சிக்கு வாக்களித்த முஸ்லிம்களுக்கு தந்த சன்மானம். இந்த உத்திரப்பிரதேச சட்டமன்றத்தில் 69 முஸ்லிம் சட்டமன்ற உறுப்பினர்கள் சடலங்களாக வீற்றிருக்கின்றார்கள்.

ஜனநாயகம்! அதிகமான சட்டசபை இடங்கள் இவையெல்லாம் அகதிகள் முகாம்களில் கூட உதவி செய்யாது.என்பதன் நிதர்சனமான எடுத்துக்காட்டுதான் உத்திரபிரதேசமும் முசாபர் நகர்களும். இவற்றையெல்லாம் ஆவணப்படமாக்கினார் சுத்திர தீப் சக்கரவர்த்தி....ஆனால் மத்திய அரசின் அனுமதி கிடைக்கவில்லை.

இந்த ஆவணப்படம் வெளிவராத நிலையில் தனது 42 வது வயதில் மூளையில் ஏற்பட்ட பாதிப்பால் ஆகஸ்ட் 25 ஆம் நாள் 2014 மரணமடைந்தார்கள். சுத்திர தீப் சக்கரவர்த்தி. அடுக்கடுக்கான அ நீதிகளுக்கு ஆளாகி நிற்கும், முஸ்லிம்களின் அவலங்களை மக்கள் மன்றத்திற்கு தந்துக் கொண்டிருந்த விளக்கு அணைந்தது.

**-எம்.ஜி.எம்**




# மால்கம் - எக்ஸ்

**அமெரிக்காவில் நிறவெறிக்கெதிராக போராடிய மாவீரனின் வரலாறு.**

**மு.குலாம் முஹம்மது அவர்களின் எளிய நடையில்.**

**விலை - 80/-**

**போன் - 9841675657**



# தினத் தந்தியின் விஷமத்தனம்

கடந்த ஞாயிறு (5/10/2014) அன்று வெளிவந்த தங்களது தினத்தந்தி இதழில் போராளி இயக்கங்களில் பெண்களும் சேர்வதை கொச்சைப்படுத்தியதோடு மட்டுமல்லாமல் முஸ்லிம்களின் முக்கிய கடமைகளில் ஒன்றான " ஜிஹாதை " கொச்சைப்படுத்தும் விதமாக " செக்ஸ் ஜிஹாத் " என்று அவமதிப்பாக வெளியிட்டிருந்தீர்கள்.

எப்போதெல்லாம் அசத்தியம் தலை தூக்குகிறதோ அப்போது சத்தியத்தை நிலைநாட்ட எடுக்கும் முயற்சிதான் ஜிஹாத். உலக மக்கள் அனைவரும் நிறம், மொழி, இன வர்க்க பேதமின்றி சமமானவர்கள் என்பது இஸ்லாத்தின் கொள்கை. ஆனால் இன்று உலகின் 99% சதவிகிதம் இந்தப் பேதங்களாலும், கொடுங்கோலர்களாலும் ஆட்சி செய்யப்பட்டு வருகிறது.

இவைகளை தகர்த்தெரியும் சக்தியாக ஜிஹாத் எனும் போராட்டக் களம் உள்ளது. மனித குலம் முழுவதும் இன, மொழி, நிறம் வர்க்கப் பேதமின்றி வாழ " இஸ்லாமிய ஆட்சி மட்டுமே " உதவும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனிப் போல் தெளிவாக தெரிந்த ஒன்று. இஸ்லாமிய ஆட்சி ஏற்பட்டுவிட்டால் சுரண்டல் காரரர்கள் சுரண்ட முடியாது. இனம், மொழி, சாதி வர்க்க ரீதியாக மக்களை பிளவுப்படுத்துவது காணாமல் போய் விடும் என்ற அச்சத்தில் இஸ்லாத்தின் மீது சேற்றை வாரித் தூவ முயன்றனர். அதில் அவர்களுக்கு படு தோல்வியே மிஞ்சியது.

எனவே இஸ்லாமியர்களை கொடூரமானவர்களாக காட்டிட வேண்டும் என்ற எண்ணத்தில் " இஸ்லாமிய போராளிகள் " மீதும், அனைவருக்கும் பயனளிக்கும் ஆட்சியை அளிக்க எடுத்து வரும் உன்னத போராட்ட வடிவமான " ஜிஹாதை " கொச்சைப்படுத்தியும், மேற்கத்திய ஊடகங்கள் செய்தி வெளியிடுகின்றன. மேற்கத்திய ஊடகங்களின் எடுபிடியாக பெரும்பாலான இந்திய ஊடகங்கள் மாறிவிட்டதன் விளைவே இது போன்ற செய்திகளை தாங்களும் வெளியிடுவதாக கருத வேண்டியுள்ளது.

அதுமட்டுமின்றி கொஞ்சம் கூட நன்றியுணர்வு என்பது தங்களுக்கு இல்லை என்பதை இந்த செய்தி எங்களுக்கு மட்டுமல்ல தமிழக வாசகர்கள் அனைவருக்கும் உணர்த்தி யுள்ளது. அந்த செய்தி ஈராக்கின் பல பகுதிகளை இந்த போராளிகள் கைப்பற்றிய போது அவர்களின் ஆதிக்கத்தின் கீழ் பல நாட்டுப் பிணைகளும் வந்தனர். அதில் நமது இந்தியாவை சார்ந்த 43 நர்சுகளும் (சேவிலியர்களும்) அடக்கம். நீங்கள் கொச்சைப்படுத்திய அந்த போராளிகள் தங்கள் இச்சைக்கு பெண்களை பயன்படுத்தும் கூட்டமாக இருந்திருந்தால் நமது இந்திய பெண்கள் ஒருவர் கூட முழுமையாக நாடு திரும்பியிருக்க முடியாது.

அந்த பெண்களே பெருமிதத்துடன் கூறினர் " அவர்களெல்லாம் இஸ்லாமிய போராளிகள்!!! ஆகவே அவர்கள் எங்களை திரும்பிக்கூடப் பார்க்கவில்லை " என்று. இதற்கு தாங்கள் கொஞ்சமாவது நன்றி செலுத்த வேண்டாமா? அதுமட்டுமல்லாமல் தங்களின் செய்தி இஸ்லாமியர்களின் ஒழுக்கங்களை குறை சொல்வதாக அமைந்திருந்தது. " தனது மனைவியைத் தவிர மற்றவருடன் உடலுறவு கொள்வதை இஸ்லாம் மிக மோசமான பாவமாக கருதுகின்றது. அப்படியும் மீறி நடந்தால் கடுமையான தண்டனைகளைத் தந்து ஒழுக்க நெறிகளை கட்டிக் காக்கிறது. அப்படி ஒழுக்கத்தின் பால் மக்களின் ஆட்சியை ஏற்படுத்த போராடும் போராளிகள் எப்படி ஒழுக்கமற்ற செயலில் ஈடுபடமுடியும்? இது மிகச் சாதரணமானவர்களுக்கே புரியுமே! அப்படியிருக்கும் போது உங்களைப் போன்ற அறிவு ஜீவிகளுக்கு புரியாமல் போன மர்மம் என்ன?

அந்தப் பெண்கள் விரும்பிச் சென்றதாக செய்தி வெளியிட்டுள்ளீர்கள். பல பேருக்கு தனது உடலை பங்குப் போட எவ்வாறு விரும்பி செல்வார்கள். அதுவும் ஒழுக்கமான வாழ்க்கையை வாழ்வதற்காக ஒழுக்கம் கெட்ட வழிமுறைகளில் இருந்து வெளியேறி இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பெண்கள் அவர்கள். அவர்களின் நடத்தையை கொச்சைப்படுத்தும் இழிவான எண்ணங்கள் எவ்வாறு தோன்றியது?

"இஸ்லாமிய போராளிகளிடம் சிறைப்பட்ட பெண்கள் தவறாக நடத்தப்பட்டதாக ஒரேயொரு ஆதாரப்பூர்வமான செய்தியாவது தங்களால் காட்டமுடியுமா? ஆனால் அவர்களிடம் சிறைப்பட்டு அவர்களின் நன்னடத்தையைக் கண்டு அந்த நன்னடத்தையின் பால் அவர்களை வழி நடத்திய இஸ்லாத்தை தங்கள் வாழ்க்கை நெறியாக ஏற்றப் பெண்கள் ஏராளம்....ஏராளம்... இவ்வளவு ஏன் தங்களது ஊடகத்துறையை சேர்ந்த " யுவான்னி ரிட்லி " தாலிபான் போராளிகளிடம் கைதியாகி பின்பு அவர்களின் நன்னடத்தையால் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு உலகம் முழுவதும் வலம் வருவது தங்களுக்கு தெரிந்திருந்தும் ஏன் சேற்றை வாரி இறைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?

இந்திய இராணுவம் அமைதிப்படை என்ற பெயரில் இலங்கைக்கு சென்று தமிழ் பெண்களை சீரழித்தது. மேலும் பாதுகாப்பு என்ற பெயரில் காஷ்மீர் பெண்களை " பலாத்காரம் செய்து " சின்னா பின்னாமாக்கியது. " அமரிக்க ஐரோப்பிய இராணுவங்கள் தாங்கள் செல்லும் இடங்களிலெல்லாம் பெண்களை பலவந்தப் படுத்தி " பலாத்காரம் " செய்தது. இதுப் போன்ற ஒரேயொரு வரலாறாவது இஸ்லாமிய போராளிகளுக்கு உண்டு என்று தாங்கள் நிரூபிக்க தயாரா?

தங்களது குடும்பப் பெண்களை இந்திய இராணுவத்திடமோ மற்றும் அமெரிக்க ஐரோப்பிய இராணு வத்திடமோ சிறிது காலம் விட்டு வையுங்கள். அதேப் போல் இஸ்லாமிய போராளிகளிடமும் சிறிது காலம் விட்டு வையுங்கள். யார் எப்படியெல்லம் நடந்துக் கொள்கிறார்கள் என்பதை தங்களின் அனுபவப்பூர்வமாகவே தெரிந்து கொள்வீர்கள்.

மீண்டும் இதுப்போன்று இஸ்லாத்தையும் இஸ்லாமிய போராட்ட வடிவமான ஜிஹாதையும் இனிமேல் கொச்சைப்படுத்தாமல் உண்மையை மட்டுமே எழுதுவீர்கள் என்று நம்பிக்கையுடன் எதிர் பார்க்கின்றோம்.

***திருப்பூரிலிருந்து காதர்.***

---


# இறைவனின் அழகிய வழிகாட்டுதல் அனைவருக்கும்!

## மனிதன் இந்த உலகில் எப்படி வாழ வேண்டும்?

இந்த வினாவிற்கு முழுமையான விடையே திருக்குர்ஆன்.
இதனை அறிந்திட வேண்டியது நமது கடமை.

அறிந்திட விரும்புவோர் இலவசமாக திருக்குர்ஆன்
தமிழ் மொழி பெயர்ப்பைப் பெற்றிட கீழ்காணும் முகவரிக்கு எழுதுங்கள்.

**தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட்**
**52/1, மண்ணடி தெரு, மண்ணடி, 4வது**
**மாடி, அறை எண் 7, சென்னை - 600 001.**

இந்த இலவச விநியோகம் முஸ்லிம்களுக்கு அல்ல.

# முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்தது என்ன?

தொடர் = 34

# இந்திய சமுதாய சீரமைப்பில் இஸ்லாத்தின் பங்கு!



*மொழிபெயர்ப்பு : அஹ்மது ஜலாலுத்தீன் நத்வீ.*

✍ *அபுல் ஹசன் அலீ நத்வீ*

இஸ்லாம் வென்ற பிறகு கிருஸ்த்துவத்தை தனது மார்க்கமாகக் கொண்ட ஐரோப்பாவிலும், சிலை வணக்கத்தை மதமாகக் கொண்டிருந்த இந்தியாவிலும் இஸ்லாம் அறிவுப் புரட்சியை ஏற்படுத்தியது.

இவ்விரு பகுதிகளில் உள்ள மக்களின் வாழ்க்கை வழிமுறைகளிலும் பண்பாடுகளிலும் சமூக கலாச்சாரத்திலும் பெரும் சீர்த்திருத்தங்கள் ஏற்பட இஸ்லாமே காரணம். [Source : Infulenc of Islam on Indian Culture. By : Dr.Tarachand ]

ஓரிறைக் கோட்பாட்டின் பக்கம் மக்களைத் திருப்பியது இஸ்லாம். பெண்களுக்கு மரியாதையும், உரிமைகளையும் கிடைத்திட இஸ்லாம் காரணமாக இருந்தது. மனிதர்களிடையே ஏற்றத் தாழ்வுகள் எதுவும் இல்லை. அனைவரும் சமமே என்ற பிரகடனம் நிலை பெற்றதில் இஸ்லாத்தின் பங்கு மிக முக்கியம்.

ஷரியத் எனப்படும் இஸ்லாமிய வாழ்க்கை நெறியும் அதன் நாகரிகமும் உலகத்துக்கு அறிமுகப்படுத்திய எல்ல சீர்த்திருத்தங்களும் மக்களை வந்தடைந்தன.

வரலாற்று ஆய்வாளர் கே.எம். பணிக்கர். இவர் இந்திய தூதராக எகிப்தில் பணியாற்றியவர். இந்திய மக்களின் சிந்தனையிலும் இந்து மதத்திலும் இஸ்லாத்தின் ஏகத்துவக் கோட்பாடு எப்படிப்பட்ட சீர் திருத்தங்களை ஏற்படுத்தியது என்பதை எடுத்துரைக்கின்றார்.

இஸ்லாம் இந்தியாவிற்கு வந்திருந்த காலக்கட்டங்களில் இந்து மதத்தில் அது சீர் திருத்தங்களை ஏற்படுத்தியது மறுக்க இயலாத உண்மை. இந்து மதத்தில் ஓரிறைச் சிந்தனை ஏற்பட்டது இஸ்லாத்தின் தாக்கத்தினால் ஏற்பட்டதே.

இந்து மதத்தின் தலைவர்களும் சிந்தனையாளர்களும் தம் கடவுள்களுக்கு பல்வேறு பெயர்களை சூட்டிக் கொண்டாலும் கூட வணங்கிட தகுதியுள்ள இறைவன் ஒருவனே! அவனே வெற்றியும், மீட்பும் தர வல்லவன் என்று அவர்கள் தெள்ளத்தெளிவாக கூறினர்.

இந்தியாவில் இஸ்லாமிய ஆட்சி நிலவிய போது உருவான மதங்கள், கொள்கைகளில் இஸ்லாம் ஏற்படுத்திய ஓரிறைக் கோட்பாட்டின் தாக்கம் இருந்தது. பக்தி மார்க்கம் மற்றும் கபீர்தாஸ் - ன் சீர்திருத்த இயக்கம் ஆகியவற்றை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். [ Source : A survey Of Indian History. P.132 ]

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேரு கூறுகிறார். " வடமேற்கு இந்தியா வழி முஸ்லிம் போராளிகள் இந்தியாவுக்குள் வந்ததும் இந்தியாவிற்கு இஸ்லாம் வந்ததும் இந்திய வரலாற்றில் அதிமுக்கிய நிகழ்வு. இந்து சமுகத்தில் வியாபித்திருந்த சீர்கேடுகளை வெறுத்தது இஸ்லாம். பிறப்பினால் வரும்

ஏற்றத்தாழ்வுகள், தீண்டாமை, சாதிக்கூறுகள் இவற்றை இஸ்லாம் எதிர்த்தது. உலக வாழ்வை வெறுக்கும் துறவுக் கோட்பாடு இந்தியாவில் பரவியிருந்தது. இதையும் கண்டித்தது இஸ்லாம். "

இந்தியா இப்படி இருந்த போது இஸ்லாம் தந்த சகோதரத்துவம், சமத்துவம் இவற்றில் முஸ்லிம்கள் இளைப்பாறிக் கொண்டிருந்தார்கள். இது இந்துக்களின் சிந்தனையில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது. மனிதனின் அடிப்படை உரிமைகள் கூட மறுக்கப்பட்டு இந்தியாவில் வாழ்ந்து வந்த ஒடுக்கப்பட்ட சமுதாயத்தின் மக்கள், சமத்துவம் மறுக்கப்பட்ட சமுதாயத்தினர் இஸ்லாத்தை ஏற்று இஸ்லாம் தந்த பலனை அனுபவித்தார்கள் "
[ Source : Discovery Of India ]

நமது காலத்து அறிஞர் என்.சி.மேத்தா அவர்கள் தனது " இந்தியக் கலாச்சாரமும் இஸ்லாமும் " எனும் நூலில் கூறுகிறார்.

" பண்டைய நாகரிகங்கள் வீழ்ச்சிக்கும் சரிவுக்கும் ஆளாகி நின்ற நேரத்தில் இந்திய மக்களின் வாழ்வைக் கவ்விப் பிடித்திருந்த இருள்களைக் கிழித்திடும் இஸ்லாம் ஒளிவெள்ளமாய் இந்தியாவுக்குள் வந்தது. தெள்ளத் தெளிவான அதன் இலட்சியங்கள் இந்திய மக்களின் சிந்தனைகளின் உறுதியாக இடம் பிடித்தன. அரசியல் களத்தில் இஸ்லாம் பெற்ற வெற்றிகளை விட சிந்தனைத் தளத்தில் அது பெற்ற வெற்றி பெரியது. மகத்தானது. இது இந்தியாவில் மாத்திரமல்ல. இஸ்லாம் புகுந்த எந்த நாடுகளிலும் இப்படிப்பட்ட வெற்றிகளையே அது பெற்றது. "

இந்தியாவில் இஸ்லாத்தின் வரலாறு அதன் அரசாங்கத்தோடு பின்னிப் பிணைந்தது. எனவே சத்திய இஸ்லாத்தின் மெய் வடிவம் எவருக்கும் தெரியாமல் மறைக்கப்பட்டே இருக்கிறது. மனித குலத்திற்கு அது வழங்கிய உபகாரங்களும் அன்பளிப்புகளும் மனித பார்வைகளில் இருந்து மறைந்தே போய் விட்டது. இது நமக்கு ஒரு துரதிருஷ்டம்தாம் " [ Source ; Indian civilization and ISlam ]

இன்றைய உலகில் வனப்போடு வாழ்ந்துக் கொண்டிருக்கும் எந்த ஒரு கொள்கையும் எந்த ஒரு நாகரிகமும் இஸ்லாத்திடமிருந்தும் முஸ்லிம் களிடமிருந்தும் சிறியதாகவோ பெரியதாகவோ எந்த பலனையும் அடைந்திடவில்லை என்று கூறிட இயலுமா? இயலவே இயலாது.

அறிஞர் ராபர்ட் பிரிஃபால்ட் அவர்கள் கூருகிறார் :" முன்னேறிய ஐரோப்பாவின் எந்தப் பகுதியை எடுத்துக் கொண்டாலும் அதில் இஸ்லாமிய நாகரிகத்துக்கு பெரும் பங்கு இருக்கிறது. இஸ்லாம் தந்த சீர் திருத்தத்தின் விளைவாகவே அது ஏற்பட்டிருக்கிறது. "
[ Source : The Macking Of humanity.P.190 ]

அதே நூலில் மற்றொரு இடத்தில் அவர் இப்படி கூறுகிறார் : " அரபு மக்களின் பெருமைமிகு கல்விகளுள் ஒன்றான இயற்பியல்தான் ஐரோப்பாவிற்க்கு மறுவாழ்வைத் தந்தது என்றில்லை இஸ்லாம் தன் ஒளிச்சுடரை ஐரோப்பாவிற்குள் பாய்ச்சிய நாள்தொட்டே எல்லாத் துறைகளிலும் அது ஏராளமான சீர்த்திருத்தங்களை ஏற்படுத்தியுள்ளது. " [ Source : The Macking Of humanity.P.202 ]

இப்படியே போய்க் கொண்டிருந்தால் நன்றாகத்தான் இருந்திருக்கும். ஆம் நதிகளை அதன் போக்கிலேயே ஓடவிட்டால் அதன் அழகே தனிதான். அல்லவா? வில்லைத் தயாரித்தவனிடமே கொடுத்து அதை பயன்படுத்திடச் சொன்னால் என்ன அருமையாக அதை அவன் பயன்படுத்துவான் அல்லவா?

இதுபோல மனித குலத்தை வழி நடத்துவதற்காகவே படைக்கப்பட்ட முஸ்லிம் சமுதாயத்திடமே உலகத்தலைமை இருந்திருந்தால் மனித குலம் எல்லாமும் பெற்று பெருவாழ்வு வாழ்ந்திருக்கும். மனித குலத்தின் வரலாறு சோதனைகளாலும் வேதனைகளாலும் அதிர்ச்சிகளாலும் சூழப்பட்டு இருக்கிறதே இப்போது! இப்படியா இருந்திருக்கும் முஸ்லிம்கள் உலகத்தலைமை ஏற்றிருந்தால்?

இப்போது நாம் படித்துக் கொண்டிருக்கிறோமே அப்படி இருந்திருக்காது மனித வரலாறு. மனித வரலாறு அழகு மிளிரும் பேரும் புகழும் பெற்றுத் திகழும். எல்லோருக்கும் எல்லாமும் கிடைத்திருக்கும். அனைவரும் கண்ணும் கருத்தும் குளிர வாழ்ந்திருப்பார்கள். என்ன செய்ய? யாரைக் குறை சொல்ல முடியும்? விதி வேறுமாதிரியல்லவா? அமைந்துவிட்டது.

ஆம் முஸ்லிம்களிடத்திலேயே வீழ்ச்சி ஏற்பட ஆரம்பித்தது.......

தொடரும்......

**தமிழ் வடிவம் :**
**கே.எம். இல்யாஸ் ரியாஜி.**

---



# கஷ்மீர் நிவாரண நிதி

*28, அக்டோபர் - 2014* அன்று காலை வடபழனியில் உள்ள மஜ்ஜித் ஹக்காவில் தமிழ்நாடு ஜமாத்துல் உலாமா சார்பில் ரூபாய் 5 இலட்சம் வழங்கப்பெற்றது. டெல்லியைச் சார்ந்த சேரிட்டி அலையன்ஸ் - இன் தலைவர் டாக்டர் ஜஃபருல் இஸ்லாம் கான் அவர்கள் நேரில் வந்து பெற்றார்கள். நிதி வழங்கும் நிகழ்ச்சி வடபழனியிலுள்ள மஸ்ஜித் இல் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு மாநில ஜமாத்துல் உலமாவின் தலைவர் ஷேஹுல் ஹதீஸ் A.E.M.அப்துல் ரஹ்மான் அவர்கள் தலைமை ஏற்றார்கள். மாவட்ட ஜமாத்துல் உலமா தலைவர் மௌலான தர்வேஷ் ரஹாதி அவர்கள் நிகழ்ச்சிக்கு சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்கள்.

**- நமது செய்தி தொடர்பாளர்**

---



# கஷ்மீரின் பாதி விதவைகள்.

# இரத்தத்தை உரைய வைக்கும் உண்மைகள்

மு. குலாம் முஹம்மது அவர்களின் எளியத் தொகுப்பில்.

விலை - 70/-

# எது முதலில்?

## இடம், காலம், சூழ்நிலை இவற்றிற்கு ஏற்ப வெவ்வேறு பணிகள் முன்னுரிமை பெறுகின்றன.

தொடர் = 26



இமாம் யூசுஃப் அல் கர்ழாவி.

அதிமுக்கிய விடயம் ஒன்றை தெளிவுப்படுத்திட விரும்புகிறேன் இப்போது.

பல்வேறு நன்மைகளில் எதை முதலில் செய்ய வேண்டும். எது சிறப்பான செயல் என்பதையெல்லாம் நாம் கூறி விடும்போது ஒன்றை நீங்கள் கவனிக்கத் தவறக் கூடாது.

முன்னுரிமை தரப்பட வேண்டியவை என்றும் மிகச் சிறப்பு வாய்ந்தவை என்றும் நாம் கூறி வருபவற்றில் பெரும்பாலானவை எல்லாக் கால கட்டத்துக்கும் எல்லா சூழ்நிலைகளுக்கும், எல்லா இடங்களுக்கும் எல்லா மனிதர்களுக்கும் பொதுவானவை என்று கருதிவிடாதீர்கள்.

இடம், காலம், சூழ்நிலைகளுக்கு ஏற்ப நன்மைகளின் தரங்கள் மாறுகின்றன. இதுவரை நாம் பார்த்தவற்றில் பெரும்பாலானவை இப்படிப்பட்டவைதான். காலங்கள், தனி மனிதர்கள், பருவ மாறுதல்கள், இவைகள்தான் எவை சிறந்த செயல்கள் என்பதை தீர்மானிக்கின்றன. இதற்கு சில உதாரணங்களைத் தற்போது நாம் பார்ப்போம்.

விவசாயம், சுயதொழில், வியாபாரம், இவற்றுள் எது ஏற்றமானது, அல்லாஹ்விடம் அதிக நன்மைகளை பெற்றுத் தருவது என்பதை முடிவு செய்வதில் அறிஞர்கள் மத்தியில் மாறுபட்டக் கருத்துகள் இருக்கின்றன.

இவற்றின் சிறப்புகளை எடுத்துரைக்கும் நபிமொழிகள்தான் இவ்வாறான கருத்து வேறுபாடு எழுந்திடக் காரணமாக இருக்கின்றன. பின் வரும் நபிமொழி விவசாயத்தின் சிறப்பைக் கூறுகிறது.

" யாரேனும் ஒரு முஸ்லிம் ஏதேனுமொரு செடியை நட்டு வைத்தாலோ அல்லது விவசாயம் செய்தாலோ அதிலிருந்து ஏதேனுமொரு பறவையோ மனிதனோ மிருகமோ சாப்பிட்டால் அது அந்த முஸ்லிமுக்கு தர்மத்தின் நன்மையத் தருகிறது "( அறிவிப்பாளர் : அனஸ் (ரழி) நூல் : புஹாரி, முஸ்லிம் )

பின்வரும் நபிமொழி சுயதொழிலின் சிறப்பை எடுத்தியம்புகிறது.

" தன் சுய உழைப்பினால் [கிடைக்கும் வருமானத்திலிருந்து] உண்பவரை விட சிறந்த உணவை யாரும் உண்பதில்லை. இறைத்தூதர் தாவூது (அலை) அவர்கள் சுயதொழில் செய்து சாப்பிட்டு வந்தார்கள். "
( அறிவிப்பாளர் : மிகதாம் (ரழி) நூல் : அஹ்மது, புஹாரி )

பின்வரும் நபிமொழி வியாபாரத்தின் மேன்மையை விளக்குகிறது.

" நேர்மையான வியாபாரி மறுமையில் இறைத்தூதர்கள், வாய்மையாளர்கள், உயிர்த்தியாகிகளுடன் எழுப்பப்படுவார். "
(அறிவிப்பாளர் : அபூசயீத் (ரழி) நூல் : திர்மீதி )

இந்த நபிமொழிகளை முன் வைத்து அறிஞர்கள் இம்மூன்றில் எது ஏற்றமானது என்பதை முடிவு செய்வதில் மாறுபட்ட கருத்துக்களைக் கூறிவருகின்றனர்.

தலை சிறந்த மார்க்க அறிஞர்கள் இப்படியெல்லாம் வரையறுப்பதில்லை. மாறாக, சமூகத்தின் தேவைகளுக்கு ஏற்பவே முடிவு செய்ய முடியும் எங்கின்றனர்.

அதாவது உணவுப் பொருள் கள் குறைந்து விடும்போது, அன்றாட உணவுக்கே சமுதாயம் அல்லல்படும்போது மற்றவைகளை விட விவசாயமே சிறந்தது. ஏனென்றால் உணவின்றி வாழ்வில்லை. நம் அருகிலிருக்கும் தீமைகளில் மிகக் கொடியது பசிதான்.

**குறிப்பாக கொடுக்கல் வாங்கலுக்காக, வியாபாரத்துக்காக தடம் புரளாத நேரமையாளர்கள் இதில் ஈடுபட வேண்டும். தர்மம் வழங்குதல், தொழுகையை நிலைநாட்டுதல், இறைவனைத் துதித்தல் என தமது அறப்பணிகளை உலக அற்ப செல்வங்களுக்காக புரக்கணிக்காத நல்லவர்கள் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு முன்னிரிமை தரவேண்டும்.**

எனவே பசியிலிருந்து சமுதாயத்தைக் காப்பதும் அதன் உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதும் இப்போதுள்ள சூழ்நிலைகளில் முன்னுரிமை தரப்படவேண்டியதாகும். இதில் ஏற்படும் இன்னல்களையும் இடர்ப்பாடுகளையும் இன்முகத்தோடு எதிர் கொண்டு சகிப்புத் தன்மையுடன் இதில் ஈடுபடுவது மிகச் சிறந்த சேவையாகும். எங்கின்றனர் அறிஞர்கள்.

உணவுப் பொருள்களின் உற்பத்தி அதிகமாகிவிட்டால் எல்லோரும் ஏதேனுமொரு விவசாயத்தில் ஈடுபட்டுவிட்டால் தொழில் துறையை நோக்கி சமுதாயத்தின் தேவை திரும்பும்.

இப்போது (யூதர்கள், கிருத்துவர்கள், சிலை வணங்கிகள்) போன்ற மாற்றுக் கொள்கையுடையோரைச் சார்ந்திருக்கும் அவலம் போக்கிடவும் வேலை வாய்ப்பை பெருக்கிடவும் ( போர்க்கருவிகளை உற்பத்தி செய்வதன் மூலம் ) முஸ்லிம் சமுதாயத்தின் கண்ணியத்தையும்தன் அரசின் எல்லைகளை காத்திடவும் உற்பத்தித் துறையில் முஸ்லிம் சமுதாயம் தன்னிறைவு பெற்றிடவும் தொழில் துறைக்கு முன்னுரிமை தந்திட வேண்டும்.

விவசாயமும் தொழிலும் எங்கும் வியாபித்துவிட்டால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களையும் தானியங்களையும் ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குக் கொண்டு செல்லும் தேவை ஏற்படும். இது உற்பத்தியாளார்களுக்கும், பணியாளர் களுக்கும் இடையே இருக்கவேண்டிய உறுதியான பாலம். இதை ஒரு வியாபாரிதான் செய்கிறார்.

எந்த பொருள் மக்களுக்கு அதிகமாக தேவைப்படுமோ அந்தப் பொருளைப் பதுக்கி வைத்து கொள்ளை இலாபம் அடிக்கும் தீய நோக்கம் கொண்ட பேராசைக் காரர்கள் விற்பனைச் சந்தையில் ஆதிக்கம் செலுத்தும்போதும் சரக்குகளின் விலையை ஏற்றி இறக்கி விளையாடு வோர் சந்தையில் ஆதிக்கம் செலுத்தும் போதும் வியாபாரம் செய்வதே ஏற்றமானது.

குறிப்பாக கொடுக்கல் வாங்கலுக்காக, வியாபாரத்துக்காக தடம் புரளாத நேர்மையாளர்கள் இதில் ஈடுபட வேண்டும். தர்மம் வழங்குதல், தொழுகையை நிலைநாட்டுதல், இறைவனைத் துதித்தல் என தமது அறப்பணிகளை உலக அற்ப செல்வங்களுக்காக புரக்கணிக்காத நல்லவர்கள் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு முன்னுரிமை தரப்படவேண்டும்.

நாம் வாழும் இந்த காலம் தொழில் நுட்பப் புரட்சியின் காலம். டெக்னாலஜி, எனப்படும் தொழில் நுட்பம் உலகையே வளைத்துப்பிடித்துத் தன் கையில் வைத்திருக்கின்றது.

நம் சமுதாயம் தொழில் நுட்பத்துறையில் முனைப்புடன் ஈடுபடுவது காலத்தின் கட்டாயம். இதில் நாம் பின் தங்கவோ பதுங்கவோ கூடாது. அறிவாயுதம் ஏந்தி களம் புக வேண்டும்.

அல்லாஹ் நமக்கு இஸ்லாத்தின் மூலம் கண்ணியம் தந்தான். பேரருள் புரிந்தான். இந்தப் பேரருளை உலகெங்கும் பரப்பிட இக்காலத்தில் இதுவே உகந்த வழி. முஸ்லிம் சமுதாயம் இது விடயத்தில் நிராயுத பாணியாகவே நிற்கிறது. பரிதாபம். பரிதாபம்.

இஸ்லாத்தை பரப்பிடும் இலட்சியத்தை அடைந்திட தொழில் நுட்பத் துறையின் போதனை முறைகளில் நாம் படிப்படியாக முன்னேற வேண்டும். மற்றவர்களை விட நாமே இதில் முன்னணியிலிருக்க வேண்டும். இதற்கு தேவையான கல்விகளை கற்கவேண்டும்.

இது இஸ்லாத்தில் அவசியத்திலும் அவசியம். காலத்தின் கட்டாயம். இது ஒரு மார்க்க கடமை.

***தமிழ் வடிவம் :***
***கே.எம். இல்யாஸ் ரியாஜி.***

# சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாதி



# ஆர்.எஸ்.எஸ் - இன் நாதுராம் கோட்சே.

" இருபுறமும் மக்கள் குழுமியுள்ள நிலையில் இடையில் நடப்பதற்காக இருந்த மூன்று அடி இடைவெளியில் மக்களை பார்த்து இருகரம் கூப்பியவறாக காந்தியடிகள் வந்துக் கொண்டிருந்தார். காந்தியாருக்கு அருகாமையில் ஆறு அல்லது ஏழு அடி தூரத்தில் நின்ற ஒருவன் அவருக்கு மூன்று அடி நெருக்கத்தில் வந்து அவருடைய வயிறு மற்றும் நெஞ்சுப் பகுதியென மூன்று முறை சுட்டான். இதனால் நிலைகுலைந்த காந்தியடிகள் " ராம் ராம் " என்று கூறியவாறு பின்னால் சரிந்து மரணித்தார்கள். காந்தியாரை சுட்டு படுகொலை செய்தவன் புனேவைச் சேர்ந்த நாதுராம் விநாயக் கோட்சே என்பதை நான் பின்னால் தெரிந்துக் கொண்டேன் "

[நந்து லால் மேத்தா
*30 ஜனவரி 1948, அன்று இரவு 9;45 மணிக்கு*
பதியப்பட்ட காவல்துறையின் முதல் தகவல் அறிக்கை]

நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள ஆர்.எஸ்.எஸ் - இன் உறுப்பினர்கள் விரும்பத்தகாத மற்றும் ஆபத்தான காரியங்களில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களுக்கு கொலை, கொள்ளை, பொது சொத்துகளுக்கு சேதம் விளைவித்தல் போன்ற வன்முறை சம்பவங்களில் தொடர்பு உள்ளது. மேலும் இவர்களிடம் சட்டத்திற்கு புறம்பான ஆயுதங்கள் பெரும் வெடிகுண்டுகள் இருப்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஆர்.எஸ்.எஸ் இன் உறுப்பினர்கள் மக்களை அரசுக்கு எதிராக திசை திருப்பி தீவிரவாத நடவடிக்கைகளின் மூலம் ஆயுதங்களை கொண்டு கலகம் செய்ய தூண்டக் கூடிய துண்டு பிரசுரங்கள் வெளியிட்டதும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

இதன் மூலம் ஆர்.எஸ்.எஸ் இன் உறுப்பினர்கள் உள்ளொன்றும் புறமொன்றுமாக இரட்டை நிலையில் செயல்படக்கூடியவர்கள் என்றும் அவர்கள் ஆர்.எஸ்.எஸ் இன் வெளிப்படையான அஜெண்டாவை பின்பற்றவில்லை என்பதையும் அரசு ஊர்ஜிதம் செய்கிறது.( *4 - பிப்ரவரி 1948 அன்று காந்தியாரின் கொலைக்கு பின்பு ஆர்.எஸ்.எஸ் இன் தடைக்காக இந்திய அரசு வெளியிட்ட அரசாணை* )

சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாத செயல் எது? என்கின்ற கேள்வியெழுப்பினால் ஒட்டுமொத்தமாக எல்லோராலும் அளிக்கப்படும் பதில் மஹாராஷ்டிரா புனேவை சேர்ந்த நாதுராம் கோட்சே என்ற பார்பனிய இந்துத்துவ தீவிரவாதியால் ஜனவரி 30 1948 ஆம் ஆண்டு நிகழ்த்தப்பட்ட காந்தியார் படுகொலை என்பதாகும்.

கோட்சே இந்து மகா சபையையும், ஆர்.எஸ்.எஸ் - ஐ சார்ந்தவன், கோட்சே 1930 ஆம் ஆண்டு ஆர்.எஸ்.எஸ் - இன் அங்கமாக சேர்ந்து அவ்வமைப்பின் பௌத்திய காரியவாதியாக செயல்பட்டான். கோட்சேவிற்கும் ஆர்.எஸ்.எஸ் இன் முதல் சாரசங்கசலக் ஹெட்கேவருடன் நெருக்கமாக இருந்து அவருடன் ஆர்.எஸ்.எஸ் இன் வளர்ச்சிக்காக பல இடங்களுக்கும் பயணம் மேற்கொண்டுள்ளான்.



இந்துத்துவா தீவிரவாதிகள் காந்தியாரை கொள்வதற்காக எப்படியெல்லாம் சதி திட்டம் தீட்டினார்கள். ஆர்.எஸ்.எஸ் இன் இரண்டாம் சாரசங்கசலக் கோல்வார்கர் மற்றும் சாவர்களின் விஷமத்தனமான கருத்துக்கள் மற்றும் பிரச்சாரங்களின் முடிவு காந்தியாரை கொல்லும் அளவிற்கு கோரமான நிகழ்வை ஏற்படுத்தியது என்பதனை ஜூலை 18 1948 ஆம் ஆண்டு அப்போதைய உள்துறை அமைச்சர் சர்தார் வல்லபாய் பட்டேல் இந்து மகா சபையின் பொறுப்பாளர் ஷ்யாம் பிரசாத் முகர்ஜிக்கு எழுதிய கடிதத்தில் இருந்து கண்டுக் கொள்ளலாம். இந்த ஷ்யாம் பிரசாத் முகர்ஜி தான் பின்னாளில் ஆர்.எஸ்.எஸ் இன் உதவி யுடன் பாரதீய ஜனசங்கத்தை
தோற்றுவித்தார்.

பட்டேலின் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது :

> ‘‘ அரசின் விசாரணைகளின் மூலம் காந்தியாரின் படுகொலைக்கு இரண்டு அமைப்புகளின் விஷமத்தனமான பிரச்சாரமும் அவர்களின் செயல்பாடுகளுக்கே காரணியாக உள்ளது கண்டறியப்பட்டுள்ளது. அதிலும் குறிப்பாக இந்த மாபாதக சதி செயலில் இந்து மகா சபையின் அடிப்படைவாத மதவெறியர்களுக்கும் தொடர்புண்டு என்பதனை நான் அறிவேன். ஆர்.எஸ்.எஸ் இன் நடவடிக்கைகள் அரசிற்கும், நாட்டிற்கும், எதிரானதாக உள்ளது. அதனாலேயே ஆர்.எஸ்.எஸ் தடை செய்யப் பட்டுள்ளது. மோசாமான நடவடிக்கைகள் தொடர்ந்தால் அரசின் நடவடிக்கை இன்னும் கடுமையானதாக இருக்கும். ’’

அறுபத்தொரு வருட கால சுதந்திர இந்தியாவில் நிகழ்ந்த பயங்கரவாத சம்பவங்கள் குறித்து கேள்வியெழுந்தால்? சீக்கிய மெய்க்காப்பாளரால் நிகழ்த்தப்பட்ட இந்திராகாந்தி படுகொலை. 500 ஆண்டுகால பழைமை வாய்ந்த இறையில்லம் பாபரி மஸ்ஜித் இந்துத்துவ தீவிரவாதிகளால் இடிக்கப்பட்டது போன்ற சம்பவங்களை சொல்லலாம். அதிலும் குறிப்பாக 1984 ஆம் ஆண்டு நிகழ்ந்த



சீக்கியர்களுக்கு எதிரான கலவரம். சீக்கியர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட இந்த கலவரத்தை இந்துத்துவ சக்திகளே முன்னின்று நடத்தின. இந்திரா காந்தி சீக்கியரால் படுகொலை செய்யப்பட்டதையொட்டி அப்போதைய காங்கிரஸ் அரசாங்கம் அதனை கண்டு கொள்ளவில்லை. சீக்கிய படுகொலையால் திடீரென முளைத்த காலில்தான் தீவிரவாத இயக்கம் அல்லது 200 ஆம் ஆண்டு குஜராத்தில் இந்து இருதய சாம்ராட்டால் (ஆர்.எஸ்.எஸ், வி.எச்.பி உள்ளிட்ட இந்துத்துவ இயக்கங்களின் கூட்டமைப்பு) நிகழ்த்தப் பெற்ற மனித குலத்திற்கு எதிரான படுகொலை.

இப்படியாக சுதந்திர இந்தியாவில் நிகழ்வுபெற்ற தீவிரவாத சம்பவங்களை ஒப்பிட்டு பார்த்தால் அதனை ஊடகங்கள் எவ்வாறு கையாண்டது என்பதனை நாம் அறிந்து கொள்ளலாம். சம்பவம் நிகழ்வுபெற்ற பின் பெரும்பான்மை சமூகம் குற்றம் சுமத்தப் படுகிறாதா?சிறுபான்மை சமூகம் குற்றம் சுமத்த படுகிறதா?என்று பார்த்தால் சந்தேகமே இல்லை! சிறுபான்மை சமூகமே இந்தியாவில் குற்றம் சாட்டப்பட்டு வருகிறது. எண்பதுகளில் பிந்தைய காலம் தொட்டு தொன்னூறுகளில் தொடக்கம் வரை டர்பன் கட்டிய சீக்கியராக சித்தரிக்கப்பட்ட தீவிரவாத முத்திரை 21-ஆம் நூற்றாண்டின் முதல் பத்து ஆண்டுகளில் தாடி வைத்த முஸ்லிமாக மாறிப்போனது.

காந்தியடிகள் மீது பகைமை கொண்ட இந்துத்துவ தீவிரவாதிகள் அவர் கொலை செய்யப்பட்ட நிகழ்விற்கு முன்னதாக நான்கு முறை முயன்று தோல்வியுற்ற உண்மைகள் எல்லாம் ஒரு சிலருக்கே தெரியும்.
( வைத்தியா என்ற குஜராத்தை சேர்ந்த காந்திய வாதி 1948 - ல் இரயிலை கவிழ்த்து காந்தியாரை கொல்ல முயன்றது உட்பட ஆறு முறை இந்துத்துவ தீவிரவாதிகள் முயன்றதாக ஆதாரங்களுடன் கூறியுள்ளார். )

**முதல் முயற்சி :** ஜனவரி 25 1934 ஆம் ஆண்டு புனேவில் உள்ள மாநகராட்சி கலையரங்கில் நிகழ்வுபெற்ற கூட்டத்திற்கு உரை நிகழ்த்துவதற்காக காந்தியார் தனது மனைவி கஸ்த்தூரியா காந்தியுடன் சென்றுக் கொண்டிருந்தார். வழியில் எதிர்பாராத விதமாக அவர் வந்த வாகனம் பழுதடையவே மாற்று வாகனத்தில் சற்று தாமதமாக நிகழ்ச்சி நடக்கும் அரங்கிற்கு வந்தடைந்தார். அவர் அரங்கத்தை அடைந்தவுடன் அவர் வாகனத்தின் மீது வீசப்பட்ட வெடிகுண்டு குறிதவறி வேறு இடத்தில் வெடித்ததில் பொதுமக்கள் மற்றும் காவல்துறையினர் சிலருக்கே காயம் ஏற்பட்டதோடு காந்தியாரும்

அவர் மனைவியும் அதிஷ்டவசமாக உயிர் தப்பினர்.

**இரண்டாம் முயற்சி :** இந்த முயற்சி மே மாதம் 1944 ஆம் ஆண்டு புனேவிற்கு அருகாமையிலுள்ள சிறு மலை பிரதேச மான பச்சாகனியிற்கு காந்தியார் சென்ற போது அவரை படுகொலை செய்த இந்துத்துவ தீவிரவாதி கோட்சேயால் மேற்கொள்ளப்பட்டது. காந்தியார் பச்சாகனியிற்கு வந்தபோது ஒரு வாடகை பேருந்தில் 15 முதல் 20 இளைஞர்கள் வந்தார்கள். அவர்கள் காந்தியாருக்கு எதிராக அன்றைய நாள் முழுவதும் போராட்டம் நடத்தினர். அவர்களை காந்தியார் பேச அழைத்த போது அழைப்பினை நிராகரித்து விட்டனர். அன்றைய மாலைப்பொழுதில் பிரார்த்தனை கூட்டம் நடைபெற்ற போது கையில் பட்டா கத்தியுடன் காந்தியை நோக்கி கோட்சே வேகமாக முன்னேறினான். ஆனால் கூட்ட நெறிசலில் மக்களைத் தள்ளிக் கொண்டு முன்னேற இயலாமல் போனதால் கோட்சேவின் முதல் முயற்சியும் இந்துத்துவ தீவிரவாதிகளின் இரண்டாம் முயற்சியும் தோல்வியில் முடிவடைந்தது.

**முன்றாம் முற்சி :** இது செப்டம்பர் மாதம் 1944 ஆம் ஆண்டு முஹம்மது அலி ஜின்னாவிடம் பேச்சு வார்த்தைக்கு சேவகிராமம் ஆசிரமத்தில் இருந்து பம்பாய் செல்வதற்காக காந்தியார் புறப்பட்ட போது நடைபெற்றது. பேச்சுவார்த்தைக்கு புறப்பட்ட காந்தியாரை கோட்சேவின் தலைமையில் வந்த தீவிர வாத எண்ணம் கொண்ட இந்துத்துவ இளைஞர்கள் தடுத்து நிறுத்த முற்பட்டனர். ஜின்னாவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக காந்தியார் மும்பை செல்லக் கூடாது என்பதுதான் அவர்களின் வாதம். அப்போதும் கோட்சே தனது கையில் பட்டாக் கத்தியுடன்தான் இருந்தான். இந்த முற்சியும் தோல்வியில் முடிவுற்றது.

**நான்காம் முயற்சி :** இது ஜூன் மாதம் 4 - ஆம் தேதி 1946 ஆம் ஆண்டு காந்தியாரை அவர் சென்ற இரயிலைக் கவிழ்த்து கொல்ல முயற்சி மேற்கொள்ளப்பட்டது. காந்தியார் இரயில் மூலம் புனேவிற்கு சென்றுக் கொண்டிருந்த போது சிறப்பு இரயில் கர்ஜத் " நெருல் " என்ற இரயில் நிலையங்களுக்கு இடையே நள்ளிரவில் போய்க் கொண்டிருக்கும்போது இரயிலை கவிழ்ப்பதற்கு ஒரு பயங்கர சதித்திட்டம் தீட்டப்பட்டது. தண்டவாளத்தின் மீது மிகப்பெரிய பாறாங்கற்ளைப் போட்டு இரயிலைக் கவிழ்ப்பதற்கு சதி செய்திருந்த்தனர்.. அதிஷ்டவசமாக இரயில் இஞ்சின் டிரைவர் சாமர்த்தியனால் அந்த விபத்து தவிர்க்கப்பட்டது. இப்படியாக டிரைவர் சாமர்த்தியனால் காந்தியாருடைய உயிரும் அந்த இரயிலில் பயணம் செய்த அப்பாவி பொது மக்களின் உயிரும் பாதுகாக்கப்பட்டு இந்த திட்டமும் தோல்வியில் முடிந்தது.

**ஐந்தாம் முயற்சி :** இது 20 ஜனவரி 1948 ஆம் ஆண்டு நடத்தப்பட்டது . இந்நிகழ்வில் இந்துத்துவ தீவிரவாதிகள் காந்தியையும் பெங்காள் தலைவர் ஹூசைன் சஹீது சஹ்ராவதியையும் கொல்ல திட்டமிட்டனர். இதற்காக ஈடுபட்ட குழுவில் மதன் லால் பெஹ்வா, சங்கர் கிஸ்தய்யா, திகம்பர் பட்கே, விஷ்னு கர்கரே, கோபால் கோட்சே, நாதுராம் கோட்சே மற்றும் நாராயன ஆப்தே ஆகியோர் ஈடுபட்டனர். மதன்லால் பெஹ்வாவினால் வீசப்பட்ட குண்டு காந்தியார் தங்கிய பிர்லா பவன் மேடையில் விழாமல் குறி தவறி வீழ்ந்ததினாலும், காந்தியாரை சுடவேண்டிய நபர் குண்டு சப்தத்தினால் மக்கள் விழிப்படைந்ததால் சுட இயலாமல் போனதாலும் எவ்வித சேதமும் இல்லாமல் காந்தியார் அதிஷ்டவசமாக உயிர் தப்பினார். இந்த முயற்சியும் தோல்வியில் முடிவுற்றதோடு குண்டு வீசிய மதன்லால் பெஹ்வா கைது செய்யப்பட்டார்.

ஆறாவது மற்றும் கடைசி முயற்சி ஜனவரி 30 1948 ஆம் ஆண்டு 5;17 மணிக்கு திட்டப்படி மிக நெருக்கத்தில் இந்துத்துவ தீவிரவாதி நாதுராம் கோட்சேவால் மூன்று முறை துப்பாக்கியால் சுடப்பட்டு உயிரிழந்தார். இந்த மாபாதக கொடுஞ்செயலில் ஊடகத்தினரை கவரும் முயற்சியில் ஈடுபட்டனர். இந்த வழக்கில் நாதுராம் கோட்சே மற்றும் நாராயணன் ஆப்தே ஆகிய இருவருக்கும் மரண தண்டனையும் மற்றய அனைவருக்கும் ஆயுள் தண்டனை. என நீதி மன்றம் உத்தரவு பிறப்பித்தது. மேலும் இவ்வழக்கின் சதிகாரராக செயல்பட்ட சாவர்கர் போதிய ஆதாரமில்லை என



நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார்.

இருப்பினும் ஜவஹர்லால் நேரு அவர்களும் காந்தியின் இரண்டு மகன்களும் குற்றம் சாட்டப்பட்ட இருவரையும் மறைமுகமாக இயக்கியது மேல்நிலையில் உள்ள இந்துத்துவ தலைவர்கள்தான் என்பதை உணர்த்திருந்தனர். காந்தியார் மரண தண்டனையை விரும்பாதவர் என்றாலும் அவர் கொல்லப்பட்ட வழக்கின் முக்கிய குற்றவாளிகளான நாதுராம் கோட்சே மற்றும் நாராயணன் ஆப்தே ஆகியோர் நவம்பர் 15, 1949 ஆம் ஆண்டு அம்பாலா ஜெயிலில் தூக்கிலிடப்பட்டனர்.

காந்தியாரை படுகொலை செய்தவர்கள் அவரை கொன்றதற்காக சில காரணங்களை கூறி நியாப்படுத்தினர் அவை :

முதலாவதாக முஸ்லிம்களுக்கு தனி தேசம் என்ற பாகிஸ்தான் கோரிக்கையை ஒப்புக் கொள்வதன் மூலம் காந்தியார் நாட்டு பிரிவினைக்கு காரணமாக இருந்தார்.

இரண்டாவதாக அவர் முஸ்லிம்களுக்காக குரல் கொடுத்தார். எல்லா பிரச்சனைகளிலுமே முஸ்லிம்களையே சார்ந்திருந்தார்.

மூன்றாவதாக இந்திய அரசாங்கம் பரிக்கப்பட்டதாக இந்திய நிதியிலிருந்து ரூபாய் 55 கோடியை பாகிஸ்தானுக்கு கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். அதிலும் இந்தியா மீது பிரகடனப்படுத்தாத போரை பாகிஸ்தான் காஷ்மீரில் தொடங்கியிருந்தபோது கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்தினார்.

காந்தியாரை படுகொலை செய்த இந்துத்துவ தீவிரவாதிகள் சுமத்திய இந்த குற்றச்சாட்டுகள் அனைத்தும் போலியானவை என்பது அந்த கால வரலாற்றை நன்கறிந்தவர்களுக்கு தெரியும்.

இந்து மகா சபை மற்றும் ஆர்.எஸ்.எஸ் - ஐ சேர்ந்த இந்துத்துவ பயங்கரவாதிகள் தேசத்தை இந்துமய மாக்குவதிலேயே முனைப்பாய் இருந்தனர். அதற்காக அவர்கள் பல குற்றச் செயல்களில் ஈடுபட்டனர். ஆனால் காந்தியாரோ பன்மை சமூகம் கொண்ட இந்த தேசத்தை வேற்றுமையில் ஒற்றுமையாய் அமைதியாக வாழவேண்டும் என்பதற்காக தனது வாழ்வினை தியாகம் செய்தவராவார்.

காந்தியாரை கொல்வதற்காக அவருடைய வாழ்வில் 14 வருடங்கள் நீண்ட கொலை முயற்சியை மேற்கொண்டு எப்படியாவது அவரை கொலை செய்ய வேண்டும் என்று திட்டம் தீட்டி அவரை படுகொலை செய்ததின் மூலம் தங்களின் சித்தாந்தத்தை நிறைவேற்றுவதற்கு எத்தகைய மாபாதக செயலையும் செய்ய இந்துத்துவ தீவிரவாதிகள் விழைவார்கள் என்பதனை காட்டுகிறது.

மனித குலத்திற்கு எதிரான மாபாதக குற்ற செயலான **2002** குஜராத் படுகொலை நிகழ்த்தியவர்கள் அதனை வெளிப்படையாக ஒத்துக் கொண்ட வீடியோ பதிவுகள் [Tehelka sting Operation Published on 7 nov 2007.http://tehelka.com Story main 35 asp? File Name : Ne031107 gujarat_sec.asp ] அல்லது **[reddif.com]** இணையதளத்திற்கு கேகா சாஸ்திரி அளித்த பேட்டி [**Sheela bhatt " it had bedone, VHP Leader says of riots 12 march 2002,rediff.com. http;//www.rediff.com/news/2002/mar//12 train.htm**] இதுபோன்ற வீடியோ பதிவுகள் மற்றும் பேட்டிகள் வெளிப்படையாக வெளிவந்தப் பின்னும் அவர்கள் குற்றவாளியாக கருதப்படுவதில்லை. அரசு அவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி தண்டிக்க



தயாரில்லை.

மேலும் சாத்வி பிரக்யாசிங்கோ அல்லது புரோஷித்தோ அல்லது தயானந்த பாண்டேயோ அல்லது மொத்த குற்றத்தையும் ஒப்புக் கொண்டு வாக்கு மூலம் அளித்த அசிமானந்தாவே தீவிரவாத சதி செயல்களில் ஈடுபட்டு குற்றம் நிறுபிக்கப் பட்டாலும் அதனை ஒரு விதிவிலக்காகவே பார்க்கின்றோம்.

ஊடகங்களும் அதனை அத்துனை முக்கியப் படுத்துவதும் இல்லை. இதையே ஒரு முஸ்லிம் இளைஞனை போலிஸ் கைது செய்தால் அவனை தான் முக்கிய சதிகாரன் எனவும், அவன் பல தீவிரவாத செயல்களில் தொடர்புடைய பெரிய பயங்கரவாதி என பரப்புரை செய்ய ஊடகங்களும் தயாராக உள்ளது வேதனையே.

" எல்லா முஸ்லிம்களும் தீவிரவாதிகள் இல்லை. ஆனால் எல்லா தீவிரவாதிகளும் முஸ்லிம்களே " என்று குற்றவாளிகளின் கூடாரமான பி.ஜெ.பி பரப்புரை செய்தது வேதனையிலும் வேதனையே.

இப்படியாக பொய்வழக்குகளில் குற்றம் சாட்டப்படும் அப்பாவி முஸ்லிம்கள் நிரபராதி என்று நீதிமன்றம் விடுவிக்கும் போது அவனை மிகப்பெரிய தீவிரவாதியாக சித்தரித்த எந்த ஊடகமும் அதனை பெரிதுப்படுத்துவதுமில்லை அதற்கான கண்டனங்களை பதிவு செய்வதுமில்லை.

இந்தியாவின் பண்முகத்தன்மை என்பது இந்தியர்களுக்கு கிடைத்த அருட்கொடையாகும். இங்கே பல மதத்தவர்களும் பல மொழி பேசுபவர்களும் இரண்டரக் கலந்து வாழ்கின்றனர். இதில் பெரும்பான்மை சமூகத்தின் வகுப்பு வாத செயல்களை "தேசிய வாதமாக" சித்தரிப்பதும் சிறுபான்மையினரின் நியாயமான கோரிக்கைகளை கூட ''மதவாத'' கண்ணோட்டத்தோடு பார்ப்பதும் சிறுபான்மையினருக்கு எதிராக பெரும்பான்மையினரின் தீவிரவாத செயல்கள் கோபத்தினால் ஏற்பட்டது என கூறுவதும் பெரும்பான்மையினரின் தாக்குதலுக்கெதிராக சிறுபான்மையினர் நடத்தும் சிறிய போராட்டங்களை கூட தேச விரோத செயலாக சித்தரிப்பதும் இந்துத்துவாவினரின் ஒரு சார்பு மத சகிப்புத்தன்மையையே தெளிவாக காட்டுகின்றது. அது பண்முகத்தன்மை கொண்ட தேசத்திற்கு உகந்தது அல்ல.

தீவிரவாதம் என்பது எந்த ஒரு சமூகத்தின் தனிப்பட்ட அடையாளம் அல்ல. இஸ்லாமியர்களை தீவிரவாதிகளாகவும் இஸ்லாத்தை தீவிரவாதத்தோடு முழுவதுமாக சித்தரிப்பது என்பது ''9/11'' பின்பாக அமெரிக்காவின் தீவிரவாதத்திற்கு எதிரான போர் என்கின்ற பொய் பரப்புரையின் மூலம் பரப்பப்பட்டதாகும்.

நாட்டில் பல்வேறு தீவிரவாத செயல்கள் நிகழ்வுபெற்ற பின்பும் அதில் இந்துத்துவ தீவிரவாத இயக்கங்களுக்கு உள்ள தொடர்பு நிருபனமான பின்பும் அரசாங்கம் சட்டம் இழுங்கை முறையாக பயன்படுத்தவில்லை. கடந்த சில வருடங்களில் நடைபெற்ற மோசமான தீவிரவாத செயல்களில் ஈடுபட்ட இந்துத்துவ தீவிரவாத இயக்கங்களை அரசு மென்மை போக்குடனையே கையாண்டுள்ளது. இது அரசியல் தளத்தில் இந்துத்துவ இயக்கங்கள் வலிமை பெருவதையே ஊக்குவிக்கும்.

### சுயம் சேவக் கோட்சே

ஆர்.எஸ்.எஸ் - இற்கும் கோட்சேவிற்கும் ஆன தொடர்பானது இன்றுவரை மறுக்கப்பட்டே வருகிறது. ஆனால் காந்தியார் படுகொலை குறித்து எழும் கருத்து



பரிமாற்றங்களில் ஆர்.எஸ்.எஸ் மற்றும் அதன் தோழமை இந்துத்துவ தீவிரவாத அமைப்புகள் குற்றம் சாட்டப்படாமல் இருந்ததில்லை. ஆர்.எஸ்.எஸ் கோட்சேவையும் அவனது குழுவினரையும் வெளிப்படையாக எதிர்மறை கருத்துடனையே விமர்சித்து தாங்களுக்கும் அவர்களுக்கும் தொடர்பில்லை என்பதுபோல் காட்டிக் கொள்கிறது.

ஆகஸ்டு 2004 ஆம் ஆண்டு அப்போதைய மத்திய மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சராக இருந்த திரு. அர்ஜுன் சிங் அவர்கள் காந்தியாரின் கொலை மட்டுமே ஆர்.எஸ்.எஸ் சாதனை என கருத்து தெரிவித்தார். இதனை கடுமையாக எதிர்த்த ஆர்.எஸ்.எஸ் அவர் மீது குற்றவியல் அவதூறு வழக்கு தொடுக்கப் போவதாக அறிவித்தது. ஆனால் இதனை நான் பொருட்படுத்த போவதில்லை என்றும் உங்களால் இயன்றதை செய்துக்கொள்ளுங்கள் மன்னிப்பு கேட்கும் பேச்சுக்கே இடமில்லை என திரு. அர்ஜுன் சிங் அவர்கள் திட்டவட்டமாக கூறிவிட்டார்.

ஆர்.எஸ்.எஸ் 17 ஆகஸ்டு 2004 ஆம் ஆண்டு காந்தியாரின் கொலைக்கும் தங்களுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்பதனை திட்டவட்டமாக மறுத்து அதற்கு ஆதாரமாக காந்தியார் படுகொலை செய்யப்பட்டு இருபது நாள் கழித்து அன்றைய உள்துறை அமைச்சர் சர்தன் வல்லபாய் பட்டேல் அவர்கள் அன்றைய பிரதமர் ஜவஹர்லால் நேருவிற்கு எழுதிய கடிதத்தை காட்டியுள்ளது. ஆனால் அதே கடிதத்தில் காந்தியாரின் படுகொலையில் சாவர்கருக்கு தொடர்பிருப்பதாகும் ஆர்.எஸ்.எஸ் மற்றும் இந்து மகா சபை காந்தியாரின் படுகொலையை வரவேற்பதாகவும் கூறியுள்ளதை மறைத்து காந்தியாரின் கொலைக்கும் தங்களுக்கும் சம்பந்தமில்லை என்பதற்கு ஆதாரமாய் பிப்ரவரி 20 1948 ல் தேதியிட்ட பட்டேலின் கடிதத்தின் நகல்களை பரப்பியது.

கொலை மற்றும் விசாரணைகளின் தகவல்கள் உள்ளடங்கிய அந்த மூன்று பக்க

கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது

"விசாரணையின் போது பல்வேறு தரப்பட்ட மக்களையும் விசாரித்ததில் ஆர்.எஸ்.எஸ் இதில் சம்பந்தப்படவில்லை என்று தெரிகிறது. இருப்பினும் அந்த கடிதத்தின் அடுத்த வார்த்தை என்னவென்றால் தீவிரவாத சிந்தனை கொண்ட இந்துமகா சபையின் பிரிவு சாவர்கரின் தலைமையின் கீழ் இந்த சதி செயலை நிறைவேற்றியிருக்கக்கூடும்" எனக் கூறுகிறது.

[Neena Vyas RSS "releases proof Of its innocense" (18 Aug 2004.The Hindu]

ஆர்.எஸ்.எஸ் ஆதாரமாக காட்டிய அதே நேரத்தில்தான் இந்து மகாசபையும் ஆர்.எஸ்.எஸ் ஆகிய இரண்டு அமைப்புகளும் காந்தியாரின் கொலையை கொண்டாடியதாகவும் இவ்வமைப்பினர் காந்தியாரின் பன்முகத்தன்மை கொள்கைகளுக்கு எதிரானவர்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

காந்தியார் படுகொலை செய்யப்பட்ட நாள் முதல் இன்று வரை ஆர்.எஸ்.எஸ் இற்கும் கோட்சேவிற்கும் எவ்வித தொடர்புமில்லை என்ற ஐமுக்காளத்தில் வடிகட்டிய பொய்யை மிகவும் சிரத்தை எடுத்து கூறிவருகின்றது. அதனை மேலும் உருதிபடுத்த ஆர்.எஸ்.எஸ் இன் மூத்த உறுப்பினரும் பி.ஜெ.பி.யின் மூத்த தலைவருமான எல்.கே.அத்வானி இப்படிக் கூறினார்.

'கோட்சேவோடு செய்வதற்கு



எங்களுக்கொன்றுமில்லை. அவனுக்கும் ஆர்.எஸ்.எஸ் - இற்கும் தொடர்பில்லை. காங்கிரஸ் ஆர்.எஸ்.எஸ் - யையும் இந்துக் களையும் வலுவிலக்கச் செய்வதற்காக இப்படி கூறிகின்றது."

[தி டைம்ஸ் ஆஃப் இந்தியா, 22 நவம்பர் 1993 ]



அத்வானியின் இந்த குற்றச்சாட்டை கோட்சேவின் சகோதரரும் குற்றம் நிருபிக்கப்பட்டு சிறையில் இருந்தவருமான கோபால் கோட்சே மறுத்துள்ளார். இதனை அவர் ( ) காந்தியை நான் ஏன் கொன்றேன் என்ற நூலில் மறுத்துள்ளார். அதுமட்டுமில்லாமல் நாதுராம் கோட்சேதான் ஆர்.எஸ்.எஸ் - ஐ விட்டு வெளியேறியதாக கூறினார். அவர் ஏன் அப்படி கூறினார் என்றால் காந்தியாரின் படுகொலைக்கு பின்னர் கோல்வாக்கருக்கும் ஆர்.எஸ்.எஸ் இற்கும் நிறைய பிரச்சனைகள் எழுந்தது. இதனை தீர்க்கவே அவர் அப்படி கூறினார். ஆனால் உண்மையில் நாதுராம் கோட்சே ஆர்.எஸ்.எஸ் - ஐ விட்டு விலகவில்லை என்ற முக்கியமான தகவலையும் வெளிப்படுத்தியுள்ளார். அத்வானியின் கருத்து கோழைத்தனமானது என்றும் கோபால் கோட்சே அந்த புத்தகத்தில் கூறியுள்ளார்.




இதனை கோபால் கோட்சே 28 ஜனவரி 1994 - ஆம் ஆண்டு பிரண்ட்லைனில் அரவிந்த் இராஜகோபாலுக்கு அளித்த பேட்டியிலும் உருதிப்படுத்தி உள்ளது.

கேள்வி : நீங்கள் ஆர்.எஸ்.எஸ் - இன் உறுப்பினரா?

பதில் : ஆம். நான், நாதுராம், தாத்ரேயா, மற்றும் கோவிந்த் ஆகிய நான்கு சகோதரர்களும் ஆர்.எஸ்.எஸ் - இல் இருந்தோம். நாங்கள் ஆர்.எஸ்.எஸ் - இல் வளந்தவர்களே தவிர எங்கள் வீட்டில் வளந்தவர்கள் அல்ல. ஆர்.எஸ்.எஸ் தான் எங்களின் குடும்பம்.

கேள்வி : நாதுராம் ஆர்.எஸ்.எஸ் - இல் இருந்தார அல்லது வெளியே சென்று விட்டாரா?

பதில் : நாதுராம் ஆர்.எஸ்.எஸ் - இன் பௌத்திய காரியவாதியாக இருந்தார். அவர் தனது வாக்கு மூலத்தில் ஆர்.எஸ்.எஸ் - ஐ விட்டு வெளியேறி விட்டதாக கூறினார்.அவர் ஏன் அப்படி கூறினார் என்றால் காந்தியாரின் கொலைக்கு பின்பு கோவல்கருக்கும் ஆர்.எஸ்.எஸ் - இற்கும் நிறைய பிரசனைகள் வந்தது. அதனை தீர்பதற்காகவே அவர் வெளியேறியதாக கூறினார். ஆனால் உண்மையில் அவர் ஆர்.எஸ்.எஸ் - ஐ விட்டு விலகவில்லை.

கேள்வி : நாதுராமிற்கும் ஆர்.எஸ்.எஸ் க்கும் தொடர்பில்லை என அத்வானி கூறியுள்ளாரே அது பற்றி என்ன கூறுகிறீர்கள்?

பதில் : நான் அதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளேன். அவ்வாறு கூறுவது கோழைத்தனம். " சென்று காந்தியை கொன்று விட்டு வா " என ஆர்.எஸ்.எஸ் தீர்மானம் போடவில்லை என்று வேண்டுமானால் கூறலாம். ஆனால் ஆர்.எஸ்.எஸ் இற்கும் நாதுராமிற்கும் சம்பந்தமில்லை என்று கூற முடியாது. இந்து மகா சபை அவ்வாறு கூறவில்லை. ஆர்.எஸ்.எஸ் - இல் பௌத்திய வாதியாக இருந்து கொண்டே *1944* ஆம் ஆண்டு முதற்கொண்டே நாதுராம் இந்து மகா சபையில் பணியாற்றத் தொடங்கினார்.

நாதுராம் கோட்சே தூக்கிலிடப் படுவதற்கு முன் நடந்த கடைசி நிகழ்வுகள் குறித்தும் கோபால் கோட்சே தனது புத்தகத்தில் கூறியுள்ளார்.நாதுராம் தூக்கிலிடப் படுவதற்கு முன்பாக தூக்குமேடையை அடைந்த வுடன் தாய் நாட்டிற்கான தனது அர்பனிப்பு மிகுந்த வாசகங் களை பின்வருமாறு கூறினான்.

" நமஸ்தே சதா வந்சலே மாத்ருபூமி
தூய ஹிந்து பூமி சுகவர்தித்தே ஹூம்,
மஹாமங்கல புணே பூமி துத்ந்தே
பதிவேஷ் கயா நமஸ்தே நமஸ்தே. "

ஆர்.எஸ்.எஸ் - இன் நடவடிக்கைகளை உண்ணிப்பாக கவனித்தால் நமக்கு தெரியும் அவர்கள் ஷாகாக்களை அந்த வாசகத்தை கொண்டே ஆரம்பம் செய்கின்றனர். இது ஒன்றே போதும் ஆர்.எஸ்.எஸ் மற்றும் கோட்சேவின் தொடற்புகளை உறுதி செய்வதற்கு.

### கோட்சே - சாவர்கர் உறவு

" யாஷாஸ்வி ஹோஹூன்யா " (வெற்றியுடன் திரும்பி வாருங்கள்) என்று நாதுராம் கோட்சே மற்றும் நாராயணன் ஆப்தே ஆகிய இருவரிடமும் காந்தியாரை படுகொலை செய்வதற்கு முன்னதாக கூறியதாக வி.டி.சாவர்கர் கூறியதாக போலிஸ் பதிவுகளில் உள்ளது.



காந்தியார் படுகொலை செய்யப் பட்டதில் இருந்தே கோட்சே தன்னை ஆர்.எஸ்.எஸ் இடமிருந்து சாவர்கரிடமிருந்தும் தூரப்படுத்திக் கொண்டான். ஆனால் கோட்சே *1935* - ஆம் ஆண்டு முதல் சாவர்கருடன் மிகவும் நெருக்கமாக பணியாற்றியுள்ளான். கோட்சே மற்றும் குற்றவாளிகள் அனைவரும் சாவர்கரை காப்பாற்றுவதிலேயே முனைப்பாய் இருந்தனர். இருப்பினும் சாவர்கர் தான் முக்கிய சதிகாரன் என்பது பின்பு விசாரணைகளில் தெரியவந்தது.

காந்தியார் படுகொலை வழக்கு சம்பந்தமாக நியமிக்கப்பட்ட நீதிபதி அத்மாசரண் காந்தியின் படுகொலையில் சாவர்கர் உட்பட எட்டு பேருக்கு தொடர்பு இருப்பதாக முதல் குற்றப்பத்திரிக்கையினை உறுதி செய்தார். வழக்கின் முடிவில் இருவருக்கு மரண தண்டனையும் ஐவருக்கு ஆயுள் தண்டனையும் அளித்த நீதிமன்றம் சாவர்கரை விடுதலை செய்தது.

இவ்வழக்கில் திகாம்பர் பட்கே அப்ரூவராக மாறி தனது வாக்குமூலங்களை பதிவு செய்தார். இவரின் வாக்கு மூலமே வழக்கில் முக்கிய ஆதாரமாக எடுத்துக் கொள்ளப்பட்டது. திகம்பரின் வாக்கு மூலங்கள் நம்பகத்தன்மை யானது என்றாலும் அதனை உறுதி செய்ய இரண்டாவது சாட்சியம் இல்லாத காரணத்தாலே சாவர்கர் விடுதலை செய்யப்பட்டார். திகம்பர் பட்கே நம்பகத்தன்மையானவர் என்றும் அவரின் வாக்குமூலங்கள் உண்மையானது என்றும் வழக்கின் நீதிபதி கூறினார். திகம்பர் பட்கே இந்து மகா சபையை சேர்ந்தவர். இவரே கோட்சேவிற்கு துப்பாக்கியை வழங்கியவர். இவர் நீதிமன்றத்தில் ஆர்.எஸ்.எஸ் இன் முக்கிய அங்கம் சாவர்கருக்கு காந்தி படுகொலையில் உள்ள தொடர்பு குறித்து தெளிவாக கூறினார்.

திகம்பர் பட்கே கொலையாளிகளின் சதித்திட்டம் குறித்து போலிஸிடம் தெளிவாக வாக்கு மூலமளித்தார். " நாராயணன் ஆப்தே அவருடன் சேர்ந்து தில்லிக்கு வரமுடியுமா? என்று என்னிடம் கேட்டார். நான் எதற்காக என்று கேட்டேன் அதற்கு அவர் "தத்யாரவ்" என்றார். அதற்கு அர்த்தம் கேட்டதற்கு காந்திஜி, ஜவஹர்லால், மற்றும் ஹூசைன் சஹிது சஷ்ராவதி ஆகிய மூவரையும் கொலை செய்ய சாவர்கர் திட்டம் தீட்டியிருப்பதாகவும் அந்த பொருப்பு தங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

போகும் வழியில் சாவர்கர் வீட்டை அடைந்தவுடன் என்னை வெளியே இருக்க சொல்லிவிட்டு கோட்சே மற்றும் ஆப்தே இருவரும் சாவர்கரை சந்திக்க சென்றனர். ஐந்து அல்லது பத்து நிமிடம் கழித்து இருவரும் வெளியே வந்தனர். அவர்களை பிந்தொடர்ந்து வந்த சாவர்கர் " யாஷஸ்வி ஹோஹூன்யா "
( வெற்றியுடன் திரும்பி வாருங்கள் என்றார். ) சாவர்கர் வீய்லிருந்து புறப்படும் போது ஆப்தே என்னிடம் 'தத்யாரங்'' திட்டமிடப்பட்டு விட்டதாகவும் காந்தியின் வாழ்க்கை முடியப் போவதாகவும் கூறினார்.

[ Rajesh Ramachandran
The Master mind, Out Lokk, 6.sep.2004]

ஜனவரி 20 1948 ஆம் ஆண்டு மதன்லால் பெஷ்பா கைது செய்யப்பட்ட குண்டுவெடிப்பு சம்பவத்தை தொடர்ந்து சாவர்கரின் வீட்டை தீவிரமாக கண்காணித்து வருமாறு மும்பை மாகானத்தின் உள்துறை அமைச்சர் மொரார்ஜி தேசாய் மும்பை காவல்துறை ஆணையர் ஜம்செத் நாகர்வாலாவிற்கு உத்தரவு பிறப்பித்திருந்தார்.

காந்தியாரை கொலை செய்யும் சதி செயலில் தொடர்புள்ளதால்தான் சாவர்கரின் வீடு கண்காணிப்பிற்குள்ளானது. இது குறித்து நீதி மன்றத்தில் கேள்வி எழுப்பிய சாவர்கரின் வழக்கறிஞர் அதற்கு உள்துறை அமைச்சர் பதில் அளிக்கு வேண்டும் என்றும் கோரிக்கையை வைத்தார். இதற்கு பதில் அளித்த மொரார்ஜி தேசாய் பதிலை நான் தயார் செய்திருப்பதாகவும் நான் பதில் அளிக்க வேண்டுமென சாவர்கர் முடிவு செய்தால் பதிலளிப்பதாகவும் கூறினார். அதற்கு சாவர்கரின் வழக்கறிஞர் தான் கேள்வியினை வாபஸ் வாங்கிக் கொள்வதாக கூறினார். ]J.C.Jain The Murder Of Mahatma Gandhi : Proud And After Match Centre, Mumbai.1961,p.104]

சரியாக காந்தியார் கொல்லப்பட்டு பதினாறு வருடங்கள் கழித்து ஆயுள் தண்டனை கைதிகள் (12 நவம்பர் 164 ஆம் ஆண்டு) விடுதலை செய்ய்ப்பட்டனர். குற்றவாளிகள் விடுதலை செய்யப்பட்டதை இந்துத்துவாவினர் புனேவில் விழாவாக கொண்டாடினர். விழாவையொட்டி நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய சில பேச்சாளர்கள் தங்களுக்கு கொலை குறித்து முன்பே தெரியும் என பேசினர். இதனால் கொதிப்படைந்த மக்கள் மற்றும் 21 பாராளுமன்ற உறுப்பினர்கள் கொடுத்த அழுத்தத்தினால் அப்போதைய உள்துறை அமைச்சர் கல்கரிவாய் நநத்தா கொலை குறித்து விசாரிக்க ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி ஜிகன்லால் கபூர் தலைமையில் விசாரணை கமிஷனை 1965 ஆம் ஆண்டு நியமித்தார்.

நீதிமன்றத்தில் காந்தியாரின் கொலை யின் மொத்த பழியையும் கோட்சேவே எற்றுக் கொண்டதாலும் அப்ரூவர் திகம்பர் பட்கேவின் சாட்சியத்தை உருதி செய்ய இன்னொரு சாட்சி இல்லாததாலும் சாவர்கர் விடுதலை செய்யப்பட்டார். சாவர்கருக்கும் கோட்சேக் கும் இடையே இருந்த இருந்த அரசியல் கோட்பாடு உறவு பற்றிய ஆதாரம் காந்தி கொலை வழக்கு விசாரணையின் போது இருந்தது என்றாலும் 1966 - இல் சாவர்கர் இறந்தபின் மேலும் சில சாட்சியங்கள் வெளிச்சத்துக்கு வந்தன. சாவர்கரின் மெய்க்காப்பாளரான அப்பா இராமச்சந்திரா மற்றும் செயலாளரான கஜான் விஷ்னு தாங்லே ஆகியோர் நீதிபதி கபூர் கமிஷன் முன்பு ஆஜராகி வாக்கு மூலங்கள் அளித்தார்கள்.

அவர்கள் ஜனவரி 24 - இல் கோட்சே மற்றும் ஆப்தே ஆகிய இருவரும் காந்தியை கொல்வதற்கு முன் சாவர்கரை சந்தித்ததை உறுதி செய்தனர். இவையெல்லாவற்றையும் கணக்கில் எடுத்துக் கொண்டு சாவர்கர் தலைமையிலான குழுவே திட்டம் தீட்டி காந்தியை படுகொலை செய்ததாக நீதிபதி கபூர் தனது தீர்ப்பை வழங்கினார்.

**- ஹாரிஸ் முஹம்மது.**

# மதிப்புரை



நூல்
இஸ்லாமிய கலாச்சாரம்.

ஆசிரியர்
இமாம். யூசுஃப் அல் கர்லாவி.

தமிழ் வடிவம்
மௌலவி அபுல் ஹசன் ஃபாசி.

பக்கங்கள் : 208.

விலை : நூறு ரூபாய்.

வெளியீடு
**சிராத்துல் முஸ்தகீம் பதிப்பகம்**
அல் ஹூதா எலக்ட்ரானிக்ஸ் ,
51, பி.வி. ஐயர் தெரு, மாஸ்கான் சாவடி, சென்னை - 600 001.
தொடர்புக்கு : 98949 07531 , 8973392393.

ஒரு முஸ்லிம் மாறுபட்ட பல கலாச்சாரங்களை தன்னுடன் இணைத்துக் கொள்ளும் விடயத்தில் தேனீயை போன்றவன். அத்தேனீ வஹீயின் மூலமும் இல்ஹாம் எனும் மன உதிப்பின் மூலமும் தன் இறைவன் காட்டிய வழியில் உழைக்கும் ஓர் உயிரினம். அது பல மரங்கள் மற்றும் பல பூக்கள் இடையே பறந்து பறந்து செல்கிறது. எனினும் தன் இறைவனின் வழிகாட்டல்களுக்கு பணிந்து நடத்ததினால் மணமான பழங்களில் இருந்தே அது சாப்பிடுகின்றது. அப்பால் சாப்பிட்டதை மென்று விழுங்கி பல நிறங்கள் கொண்ட ஒரு பானமாக மாற்றி வயிற்றிலிருந்து வெளியேற்றுகின்றது. அதில் மக்களுக்கு நிவாரணம் இருக்கின்றது.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

'' மூஃமினின் உதாரணம் தேனியின் உதாரணமாகும். நல்லதையே அது சாப்பிடுகிறது. நல்லதையே அது வெளி யேற்றவும் செய்கின்றது. " ( நூல் : தப்ரானி , இப்னு ஹிப்பான் )

**நூலிலிருந்து.................(பக்கம் : 87)**

மௌலவி அபுல் ஹசன் ஃபாசி " வைகறை வெளிச்சம் '' வாசகர்களுக்கு புதியவரல்லர். நங்கு அறிமுகமானவரே. சர்வதேச அரசியல் நகர்வை கூர்ந்து கவனிப்பவர். சர்வதேச இஸ்லாமிய அறிஞர் டாக்டர் யூசுஃப் அல் கர்லாவியின் எழுத்துக்களால் கவரப்பட்டவர். அவரின் நூல்களை தமிழ் வடிவில் தருவதை தம் வாழ்வின் இலட்சியமாக வைத்து உழைப்பவர். அந்த இலட்சிய ஓட்டத்தில் முகிழ்ந்ததே இந்த நூலும்.

இஸ்லாம் ஒரு முழுமையான மார்க்கம் அதனை நம்புவோர் எதற்காகவும் இன்னொரு கொள்கையை நாடிட வேண்டிய தேவையை இஸ்லாம் வைத்திருக்கவில்லை என்றனர் சிலர். இஸ்லாத்தை ஒரு மதமாக மட்டும் சுருக்கிக் காட்டவும் தொழுகை எனும் உன்னத வழிபாட்டின் அசைவுகளை மட்டுமே பேசும் மார்க்கவும் சிலர் காட்ட முயற்சித்துக் கொண்டே இருக்கின்றார்கள்.

இன்னும் சிலரோ இஸ்லாத்தை ஏற்காதவர்களுக்கு எதிரான மார்க்கம் என்று காட்டப்பார்க்கிறார்கள். வேறு சிலரோ இதர சமுதாயங்களுடனான கலந்துரையாடல்களில் அநாகரிகமாக நடந்து பேசி இதன் மூலம் நாங்கள் இஸ்லாத்தை நிலைநாட்டி விட்டோம் என பிதற்றுகின்றார்கள். இன்னும் சிலரோ இஸ்லாத்தின் மூல ஆதாரங்களுடன் இணைந்தே வாழ்ந்து கொண்டிருக்கும் அரபுமொழியை இஸ்லாத்திடமிருந்து பிரித்துவிட பார்க்கின்றார்கள்.

இவர்களுக்கு மத்தியில் இஸ்லாம் வாழ்ந்துக் கொண்டிருக்கிறது. இதற்கு காரணம். இஸ்லாமிய கலாச்சாரத்தின் கூறுகள்தான். அது நெகிழ்வாக இருக்க வேண்டிய இடத்தில் நெகிழ்வாகவும், இறுக்கமாக இருக்கவேண்டிய இடத்தில் இறுக்கமாகவும் இருக்கிறது. இதை நூல் நெடுக விவரித்துக் கொண்டே போகிறார் நூலாசிரியர் கர்லாவி அவர்கள்.

ஜாஹிலிய்யா காலத்தின் கொடை வள்ளல் ' ஹாதிம் தாயியோ ' இன் மகளை முஸ்லிம்கள் ஒரு போர்களத்தில் கைதியாகப் பிடித்துவிட்டனர். தந்தையின் நற்பன்புகளுக்காக அவரின் மகளை நபி (ஸல்)

மரியாதையாக நடத்தினார்கள்.
( பக்கம் : 70 )

ஜாஹிலிய்யாவைத் தன் காலடியில் புதைத்த பெருமானார் அதன் நல்லவைகளையும் நல்லவர்களையும் மதித்தார்கள்.

அகழ் யுத்தத்தில் பாரசீகர்களின் பாணியில் எதிரிகளை எதிர் கொண்டார்கள்.( பக்கம் : 72 )

அக்கால மன்னர்கள் கடிதங்களை முத்திரையிட்டு அனுப்புவார்கள். முத்திரையிட்டு வரும் கடிதங்களை மட்டுமே ஏற்பார்கள் என்பதை அறிந்த நபி (ஸல்) அதை தாமும் செயல் படுத்தினார்கள். ( பக்கம் ; 71 )

இவ்வாறு பிறக் கோட்பாடுகளில் எது இஸ்லாத்தின் அடிப்படைகளுக்கு முரண்படவில்லையோ அதை முஸ்லிம்கள் ஏற்று நடக்கலாம். இதில் இஸ்லாமிய கலாச்சாரம் நெகிழ்வைக் கடைப்பிடிக்கின்றது. "இஸ்லாம் முழுமையான மார்க்கம்" என்ற பிரகடனத்துக்கு இது முரணானதல்ல.

இஸ்லாமியக் கலாச்சாரத்தின் தனித் தன்மைகளைப் பட்டியலிடும் கர்ளாவி அவர்கள் அவற்றை விவரிக்கும் போது இஸ்லாத்தின் மேன்மை பளிச்சென விளங்குகிறது.

இஸ்லாமியக் கலாச்சாரத்தின் பன்முகத் தன்மையைப் பற்றிக் கூறும் போது ஈராக், சிரியா, அந்தலூசியா, துனுசியா, மொராக்கோ, எமன், ஈரான், துர்க்மேனிஸ்தான், இந்தியா, துருக்கி உள்ளிட்ட நாடுகளிலிருந்து முஸ்லிம் அறிஞர்கள் இஸ்லாமிய கலாச்சாரத்தில் ஏற்படுத்திய தாக்கங்களையும் தொட்டுக்காட்டுகிறார். இதன் மூலம் அரபுலகத்துக்கு வெளியே இருந்து வரும் புதுமைகளை அவை இஸ்லாத்துக்கு முரணில்லாதவைகளாக இருக்கும் பட்சத்தில் இஸ்லாம் தன் நெகிழ்வுத் திறனால் அவற்றை எப்படி தனதாக்கிக் கொண்டது என்பதை வாசிப்போர் உணர முடிகிறது. இந்த நெகிழ்வுக்கும் எல்லை உண்டு அந்த எல்லை எதுவென்றும் கூறுகிறார்.

இந்நூலின் முக்கியமான அத்தியாயங்களுள் ஒன்று **புதுப்பிப்பதை நம்பும் கலாச்சாரம்** என்ற அத்தியாயம். இதில் புதுமை பழைமை என்றால் என்ன?

''ஒவ்வொரு நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியிலும் இம்மார்க்கத்தைப் புதுப்பிக்கும் ஒருவரை இச்சமுதாயத்துக்கு அல்லாஹ் அனுப்பி வைப்பான்'' ( அபுதாவூத் )

என்ற நபி மொழியின் பொருள் என்ன? என்பதை விரிவாகக் கூறும் கர்லாவீ தன் அறிவுக்குப் புரியாத நபிமொழிகளை ஏற்க மறுப்பவர் களையும், ஃபிக்ஹூ சட்டங்களைப் புரியாமல் அதனை விமர்சிப் பவர்களையும் சீர்த்திருத்தவாதிகள் என ஏற்க முடியாது என்பதை ஆணித்தரமாக நிறுவுகிறார்.




இஸ்லாத்தின் மீது தமிழகத்தினுடைய பகுத்தறிவுப் போர்வையை போர்த்த முயல்பவர்கள் அவசியம் வாசிக்க வேண்டிய அத்தியாயம் இது. சுருங்க கூறுவதென்றால் இஸ்லாத்தின் பெயரால் பல்வேறு சிந்தனைக் குழுக்கள் உருவாகி வரும் சூழலில் இஸ்லாத்தின் மீதான அனைவரின் பார்வையையும் ஒரே நேர் கோட்டில் கொண்டு வந்து நிறுத்தும் வலிமையான நூல்..

குறிப்பாக தாவா களத்திலும் பிரச்சார களத்திலும் நிற்பவர்கள் அவசியம் வாசிக்க வேண்டிய நூல்.

மௌலவி அபுல் ஹசன் ஃபாசியின் மொழி நடை வாசிப்பின் ஓட்டத்திற்கு துணை செய்கிறது.இஸ்லாமிய கலாச்சாரத் திலுள்ள நெகிழ்வு அதன் வளர்ச்சிக்கு காரணமாக இருப்பது போல அதன் இருக்கம் அதன் நிலைத்தத் தன்மைக்கு காரணம் என்பது நூலை வாசித்து முடித்தவுடன் புரிகிறது.

இஸ்லாத்தின் பெருமையை வேறொரு கோணத்தில் சொல்லும் நூலாகவும் இதைக் கருதலாம். இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்வோருக்கு இஸ்லாத்தை புரியவைக்கும் நூலாகவும் கருதலாம்.காலத்துக்கு ஏற்ற நூல் வாசிக்க வேண்டிய நூல்...

***கே.எம். இல்யாஸ் ரியாஜி.***

# நான் ஏன் முஸ்லிம் ஆனேன்?




மௌலவி அபுல் ஹஸன் ஃபாஸி M.A.

வீதிகளில் நடமாடுபவர்களில் மூவரில் அல்லது நால்வரில் ஒருவர் முஸ்லிம் என்பதே நமது இந்திய தேசத்திலும், சர்வதேச அளவிலும் முஸ்லிம்களின் சராசரி எண்ணிக்கை. முஸ்லிம்கள் இன்றி உலகின் எந்தப்பகுதியையும் கற்பனை செய்ய முடியாதபடி உலகில் மனிதர்கள் வாழும் எல்லா பகுதிகளிலும் முஸ்லிம்கள் வாழ்கிறார்கள்.

### முஸ்லிம்களின் அடையாளங்கள்

தாடி, தொப்பி, புர்கா போன்ற வெளிரங்கமான அடையாளங்கள் முஸ்லிம்களை தனித்துக்காட்டுவது போன்று சில பழக்க வழக்கங்களாலும் முஸ்லிம்கள் அடையாளம் காணப்படுகின்றனர். பள்ளி, கல்லூரிகளில் படிக்கும் போதும், பெரிய நிறுவனங் களில் வேலை பார்க்கும் சமயங்களிலும், வியாபாரம், கொடுக்கல் -வாங்கல் மற்றும் மற்ற சமுதாயத்தினருடன் இரண்டறக் கலந்து வசிக்கும் இடங்களிலும் முஸ்லிம்களின் பழக்க வழக்கங்கள் மற்றவர்களுக்கு ஆச்சரிய மூட்டுபவையே. பிஸ்மில்லாஹ் கூறி இஸ்லாமியர் ஒருவர் அறுத்தகடைகளில் மட்டுமே இறைச்சிவாங்குதல், தரையில் அமர்ந்து பிஸ்மில்லாஹ் கூறிசாப்பிடுதல் - குடித்தல், முழங்கால் தெரியாதவாறு ஆண்கள் ஆடையணிதல், முகம் - மணிக்கட்டு தவிர மற்ற இடங்களை மூடியவாறு பெண்கள் ஆடையணிதல், ஆபாசங்கள் இன்றி நாகரிமாக பேசுதல், பொய்யை தவிர்த்தல்,அமர்ந்து சிறுநீர் கழித்தல், பின்பு சுத்தம் செய்தல், மது அருந்தாமை, வட்டிக் புறக்கணிப்பு ஆகியவை பிற சமுதாயத்தவர்களால் ஈர்க்கப்படும் அம்சங்கள்.இஸ்லாத்தின் இறையியல் கொள்கை, திருக்குர்ஆன், நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு ஆகியவற்றினால் கவரப்பட்டு மக்கள் இஸ்லாத்தை ஏற்பதைப் போன்று முஸ்லிம்களின் இஸ்லாமிய பண்பாடுகளும், நற்பழக்கங்களும் இஸ்லாத்தை மக்கள் ஏற்பதற்கு காரணமாக அமைகின்றன என்றால் மிகையில்லை. இவ்வாறு முஸ்லிம்களின் பழக்கவழக்கங்களினால் கவரப்பட்டு இஸ்லாத்தை ஆய்வு செய்து இஸ்லாத்தை ஏற்றவர்தான் அமெரிக்காவைச் சேர்ந்த ஆங்கில மொழிப்பயிற்சியாளர் டொனால்டுஃப்லட் **(DONALD FLOOD)**.

### நான் ஏன் முஸ்லிம் ஆனேன்?

தாம் இஸ்லாத்தை ஏற்றது குறித்து டொனால்டு கூறியதாவது, “ஒவ்வொரு கலாச்சாரத்திலும் பலமும், பலவீனமும் இருக்கவே செய்யும். அமெரிக்க வாழ்க்கையில் ‘தனிமனித சுதந்திரம்’ கடைபிடிக்கப்படுவதாக பரவலாக அறியப்படுகின்றது. பெற்றோர்கள் தங்களின் பிள்ளைகளின் கைகளில் பெரிய கயிற்றைக் கொடுத்து விடுவார்கள். பிள்ளைகளின் மதவிவகாரங்களில் பொதுவாக தலையிட மாட்டார்கள். பெற்றோர் களும் சரி; பிள்ளைகளும் சரி ஒருவர் மற்றவரின் தனிப்பட்ட விஷயங்களில் தலையிடமாட்டார்கள். அதனை மதிப்பார்கள். எனது வீடு இத்தகைய தாராளமான வீடுதான் **(LIBERAL HOME)**.

### மதப் பின்னணி

எனது மதப் பின்னணி வழக்கமான அமெரிக்க மாடலில்தான் இருந்தது. ஆம். பிறப்பில் நான் ஒரு கிறிஸ்தவனே. பெற்றோருடன் அவ்வப்போது சர்ச்சுக்கு சென்றிருக்கின்றேன். எனினும் மாறுபட்ட மதங்கள் மற்றும் கலாச்சாரங்களுக்கு எனது மனம் திறந்தே இருந்தது. நான் வளர்ந்த விதம் அப்படி.

தந்தையின் வேலை நிமித்தம் எங்களின் குடும்பம் பல இடங்களுக்கு இடம் பெயர வேண்டியிருந்தது. இலத்தீன் அமெரிக்க பகுதிகளில் கூட நாங்கள் பல மாதங்கள் வாழ்ந்திருக்கின்றோம். அங்கு வாழ்ந்த சமயத்தில் புதிய மொழிகளையும், வேறுபட்ட பல கலாச்சாரங்களையும், அமெரிக்க வாழ்க்கை முறைக்கு சிறிதும் ஒப்பாகாத

பல்வேறு வாழ்க்கை முறைகளையும் அறிந்து கொண்டேன். அது எனது மனதையும், பார்வையையும் இன்னும் விரிவுபடுத்தியது .அத்துடன் பல கலாச்சாரங் களையும், மொழிகளையும் அறிந்து கொள்ளும் ஆர்வத்தை யும் அது அதிகப்படுத்தியது.

காலங்கள் கடந்தன. இலத்தீன் அமெரிக்காவில் இருந்து நாங்கள் அமெரிக்காவு க்கு வந்தோம். இன்டியானாவில் எனது மேல்நிலைப் படிப்பை நிறைவுசெய்தேன். டெக்சாஸ் - மெக்சிகோ எல்லையில் எல்பாசோ (El Paso) நகரில் உள்ள டெக்சாஸ் பல்கலையில் வணிக நிர்வாகத்தில் பட்டப்படிப்பு படித்தேன்.

**எனது இந்து - முஸ்லிம் நண்பர்கள்**

பல்கலையில் சேர்ந்த பின்பு பிறகலாச் சாரங்களின் மீதான எனது ஆர்வம் குறைய வில்லை. பல்கலையில் எனக்கு இந்து நண்பர் ஒருவர் இருந்தார். அவருக்கு சவூதி அரேபி யாவைச் சார்ந்த அரபு முஸ்லிம் ஒருவர் நண்பர்.

நாங்கள் மூவரும் நண்பர்கள் ஆனோம். ஒரு நாள் எனது இந்து நண்பர் என்னிடமும், அவரின் முஸ்லிம் நண்பரிடமும் சொன்னார். இன்ன தேவாலயத்தில் கூட்டம் நடக்கின்றது. அங்கு சென்றால்(சோறு ) சாப்பாடு கிடைக்கும் என்றார்.

மாணவராக வெளியூரில் தங்கிப் படிப்பவர்களுக்கு வீட்டுச்சாப்பாடு என்பதே கொம்புத்தேன் தான். எப்போதாவது தான் அது கிடைப்பதுண்டு. கிடைத்தால் உடனே பயன்படுத்திக்கொள்வோம். கூட்டம் நடந்த இடத்திற்கு சென்றோம். சமையல் நடந்த பகுதியை பார்வையிட்டோம். ஆடம்பரமான விருந்து என்று அகமகிழ்ந்தோம்

தேவாலயத்தின் தலைவர் ஒரு கரும்பலகையில் ஹிப்ரு மொழியில் எழுதப்பட்ட பாடலை பாடினார். எங்களையும் பாடச் சொன்னார். வேறு என்னசெய்ய! உணவு கிடைக்க வேண்டுமே! பாடத் தொடங்கினோம். ஆனால் எங்களுடன் வந்திருந்த அரபு நண்பர் அபூஹுசைன் இது பிடிக்காமல் எழுந்து வெளியேற முயன்றார். எங்களையும் வெளியேவரும்படி சொன்னார்.

நானும், இந்து நண்பரும் எழுந்து அவருடன் வெளியேறினோம். விருந்து ஏற்பாட்டாளர்கள் எங்களை அமரவைத்திட முயற்சி செய்தார்கள். ஆனால் தீர்க்கமாக வெளியேறி விட்டோம். இந்நிகழ்வு எங்களை நெருங்கிய நண்பர் களாக்கிவிட்டது

**முஸ்லிம்களின் நட்பு**

இதற்கு பின்பு சில வாரங்கள் கழித்து நானும் - அபூஹுசைனும் ஒன்றாக வாடகைக்கு வீடு பிடித்து தங்கிட முடிவெடுத்தோம். எங்களுடன் குவைத் மாணவர் ஒருவரும், ஈரான் மாணவர் ஒருவரும் தங்கியிரு ந்தனர்.ஏற்கனவே புதிய கலாச்சாரங்களை அறிவதில் ஆர்வம் கொண்ட எனக்கு இது வாய்ப்பாக அமைந்தது. நான் இதுவரை கண்டிராத அரபு முஸ்லிம் கலாச்சாரத்தை அவர்களின் மூலம் அறிந்து கொண்டேன்.

**என்னைக் கவர்ந்த இஸ்லாமிய பண்பாடுகள்**

அவர்களின் உணவு எனக்கு மிகவும் பிடித்துப் போனது. விளைவு அதனை சமைக்கக் கூட நான் கற்றுக் கொண்டேன். ஒன்றாக அமர்ந்து சாப்பிடும் சமயங்களில் அவர்களிடம் நான் கண்டேன். அவர்கள் வலது கையினால் தான் சாப்பிட்டார்கள்; குடித்தார்கள். வெள்ளிப் பாத்திரங் களையும், கோப்பைகளையும் அவர்கள் தவிர்த்தார்கள். மேலும் மேஜையில் அமர்ந்து சாப்பிடாமல் தரையில் அமர்ந்தே அவர்கள் சாப்பிட்டார்கள்

அமெரிக்க கழிப்பறைகளில் தண்ணீர் தேவைப்படுவதில்லை. பேப்பர் உபயோகிப்பதே அதற்கு காரணம். ஆனால் அவர்கள் பக்கெட்களில் தண்ணீர் பிடித்து வைத்த பின்பே கழிப்பறையை பயன் படுத்துவார்கள். அது மட்டுமல்ல.. அவர்களின் விருந்தோம்பலைக் கண்டு பல முறை நான் ஆச்சரியப் பட்டுள்ளேன்.

அவர்களிடம் காணப்பட்ட மிக உயர்ந்த தன்னம்பிக்கை என்னை கவர்ந்த அம்சங்களில் ஒன்று. என்ன நடந்தாலும் அவர்கள் நம்பிக்கை இழக்கமாட்டார்கள்.
சில வருடங்கள் ஒன்றாக தங்கி யிருந்தோம். அவர்களின் பழக்க வழக்கங்கள் பற்றி அவர்களிடம் நான் பேசுவதில்லை. எனினும் கடைசியில் புரிந்து கொண்டேன். அவர்களின் நற்பழக்கங்களுக்கு கலாச்சாரம் காரணம் அல்ல.. அவர்கள் பின்பற்றும் இஸ்லாமிய மார்க்கம் தான் காரணம் என்று. ஏற்கனவே அறிந்திருந்த புதிய கலாச்சாரம் இலத்தீன் அமெரிக்க கலாச்சாரம். இப்போது தெரிய வந்துள்ள கலாச்சாரம் இஸ்லாமிய கலாச்சாரம்.

பின்பு ஒரு நாள் நண்பர்கள் என்னிடம் சொன்னார்கள். இலத்தீன் அமெரிக்க கலாச்சாரம் இஸ்லாமிய கலாச்சாரத்தின் தாக்கம் பெற்ற கலாச்சாரம் தான். மத்திய ஐரோப்பிய வரலாற்றில் சுமார் எண்ணூறு

ஆண்டுகள் ஸ்பெயின் நாட்டை இஸ்லாமியர்கள் தான் ஆட்சி செய்தார்கள். அக்காலத்தில் இஸ்லாமிய கலாச்சாரத்தில் இருந்தே ஐரோப்பா தாக்கம் பெற்றது.

இலத்தீன் அமெரிக்காவில் நான் கண்ட சில பழக்கவழக்கங்கள் அரபுகளின் பழக்கவழக்கங்களுடன் ஒத்து இருப்பது நினைவுக்கு வந்தது.

**எனது சவூதி பயணம்**

படிப்பு முடிந்தது. நண்பர் அபூஹுசைன் சவூதி அரேபியா புறப்பட்டுப் போனார். எனினும் எங்களின் நட்பு நீடிக்கவே செய்தது. ஒரு வருடம் கழித்து என்னையும் சவூதி வருமாறு அழைத்தார். இரண்டு வார விசாவில் ரியாத் சென்றடைந்தேன்.

எங்களின் பெரும் பகுதி நேரம் ரியாத் அருகில் உள்ள ஒரு கிராமத்தில் தான் கழிந்தது. அங்குள்ள வாழ்க்கை முறை எனக்கு வெகு வித்தியாசமாக இருந்தது. இரவில் நிலா வெளிச்சத்தில் வானத்தில் நட்சத்திரங்கள் மினுமினுக்க சிவப்பு கம்பளத்தை தரையில் விரித்துபடுத்த அனுபவம் எனக்கு அதுவரை இல்லை.

அபூஹுசைன் விருந்துக்கு ஏற்பாடு செய்தார். அரேபியாவின் பாரம்பரிய இறைச்சி விருந்து அது. பல ஆடுகள் அறுக்கப்பட்டன. கிராமத்திலுள்ள அனைவரும் அதற்கு அழைக்கப்பட்டிருந்தனர். பரஸ்பரம் ஒருவரையொருவர் மதித்து பாராட்டும் அப்படி ஒரு நிகழ்வை எனது வாழ்வில் சந்தித்ததே இல்லை.

ஒரு நாள் ஒட்டகங்களை பார்த்திட பாலைவனம் சென்றோம். சில சிறுவர்கள் கறந்த ஒட்டகப்பாலை என்னிடம் தந்தார்கள். பாக்கெட் பால் சாப்பிட்டு பழகிப்போன எனக்கு அது புது அனுபவம். உற்சாகத்தில் நான் சொன்னேன். இந்த ஒட்டகத்தின் பால் மதுரமாக உள்ளது. உடனே அபூஹுசைனின் தந்தை சொன்னார். டொனால்டு நீ முஸ்லிமானால் உனக்குப் பத்து ஒட்டகங்கள் தருகிறேன். சற்றும் தாமதிக்காமல் நான் சொன்னேன். நீங்கள் கிறிஸ்தவரானால் நான் பத்து ஒட்டகங்களை தருவேன். அவர் பதில் பேசவில்லை.சில நாட்களில் அமெரிக்கா திரும்பினேன்.

**மீண்டும் அரபுநாட்டில்**

இரண்டு வருடங்கள் கழிந்திருந்தன. அமெரிக்காவின் நிவேடா மாகாணத்தில் உள்ள லா ஸ்வெகாஸ் நகருக்கு சென்றேன். அந்நகரில் வசிப்பவர்களில் அதிகமானவர்கள் வெளி நாட்டினர்களே. சூதாட்ட விடுதிகளில் வேலை பார்ப்பவர்கள். ஆதலால் அங்கு ஆங்கில மொழிப்பயிற்சி நிலையத்தை தொடங்கினேன். என்னிடம் ஆங்கிலம் கற்க சிலர் வந்தனர். எனது தொழில் நன்றாக தழைத்தோங்கியது.

எனினும் அந்நகரில் வாழ்ந்த வர்களின் பாவ செயல்கள் என்னை வருத்தப்படுத்தின. ஆம். அங்குள்ள வர்களின் வாழ்க்கை முறை (**LIFE STYLE**) எனக்கு என்னவோ மாதிரி இருந்தது. சமூகத்தில் பல தீமைகளைக் கண்டேன். ஒரு கட்டத்தில் வாழ்க்கையே எனக்கு வெறுத்துப் போனது. அர்த்தமற்ற வாழ்க்கை வாழ்வதாக நான் உணர்ந்தேன்.

**மாற்றத்தை நோக்கிய பயணம்**

பழைய வாழ்க்கை எனக்கு கசந்தது. மாற்றத்தை விரும்பினேன். எனது சவூதி நண்பர் அபூஹுசைனை தொடர்பு கொண்டேன். எனது சான்றிதழ்களை அவருக்கு தொலை நகல் பொறி (**FAX**) யில் அனுப்பினேன். எனக்கு சவூதியில் வேலை ஏற்பாடு செய்யும்படி அதில் குறிப்பிட்டிருந்தேன். சவூதியில் உள்ள ஜுபைல் நகரில் ஆங்கில பயிற்சியாளர் வேலை இருப்பதாகவும், ஒரு மாதத்துக்குள்ளாக வரவேண்டும் என்றும் அபூஹுசைன் எனக்கு பதில் தந்தார். நான்சவூதி சென்றேன். வேலையில் சேர்ந்தேன்.

**பாவ மன்னிப்பு**

ஒரு நாள் அலுவலகத்தில் என் கையில் புத்தகம் ஒன்று கிடைத்தது. அது தத்துவ புத்தகம். அதனை எடுத்து படிக்கத் தொடங்கினேன். மனிதன் இறைவனிடம் மீளவேண்டும். அவனிடம் பாவமன்னிப்புக் கேட்கவேண்டும் என்றுதத்துவ அடிப்படையில் அப்புத்தகம் விளக்கியது.

எனது வாழ்க்கையில் இறைவனிடம் பாவமன்னிப்பு தேடுவது தொடர்பாக இதுவரை சிந்தித்ததே இல்லை. எனக்குள் நான் கேட்டேன். இதுவரை எத்தனை பாவங்களை நான் செய்துள்ளேன்? எவ்வளவு தவறுகள் என்னிடம் நிகழ்ந்துள்ளன? ஏன் இதுவரை இறைவனிடம் பாவமன்னிப்புக் கேட்கவில்லை?. மேலும் மனதில் சொல்லிக் கொண்டேன். பாவங்களை மன்னிக்கு மாறு இப்போது வேண்டி னாலும் இறைவன் என்னை மன்னிப்பார்.

**சுதந்திரம் என்பதின் உண்மைப்பொருள்**

ஒரு நாள் நண்பர் அபூ ஹுஸைனிடம் பேசிக் கொண்டிருந்தேன். அப்போது அவரைத்தேடி அவரின் நண்பர் ஒருவர் வந்தார். மூவரும் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது நான் சொன்னேன். உங்களின் நாட்டைக் கவனித்தேன் இதைவிட எனது (அமெரிக்கா) நாட்டில் அதிகம் சுதந்திரம் இருக்கின்றது. உடனே அந்நண்பர் குறுக்கிட்டுச் சொன்னார். அப்படி கிடையாது. தொடர்ந்து அவர் சொன்னார். “சுதந்திரம் என்பது அதற்கு நீ என்ன பொருள் தருகிறாயோ அதனைப் பொறுத்தே உள்ளது. உலகில் நீ வாழும் பகுதியில் (அமெரிக்காவில்) பிள்ளை களுக்கு வீட்டில் நல்லொழுக்கங்கள் மற்றும் அறநெறிகளை நல்ல பெற்றோர்கள் எப்படி போதிப்பார்கள்? என்பது ஒரு விஷயமே இல்லை.

ஏனெனில், பிள்ளைகள் கொஞ்சம் வளர்ந்ததும் வெளியே சுற்றப் போய் விடுவார்கள். வெளியே போனதில் இருந்து அறநெறிகளுக்கெதிரான வற்றையே சமூகத்தில் அவர்களால் காணஇயலும். இதுவே அமெரிக்காவின் நிலைமை. ஆனால் நாங்கள் வாழும் இஸ்லாமிய உலகம் அப்படியில்லை. இங்கே வீட்டில் பெற்றோர்களால் எல்லாவகையான அறநெறிகளும், ஒழுக்கப் பண்பாடுகளும் கற்றுத்தரப்படுகின்றன. பெரியவனாகி வெளியே சென்றால், வீட்டில் என்ன கற்றுத்தரப்பட்டதோ அதனை எளிதில் சமூகத்தில் காணலாம். நிம்மதியாக வாழலாம். இப்போது சொல்லுங்கள். யாருக்கு சுதந்திரம் இருக்கின்றது?

ஒன்றைப்புரிந்து கொள்ளுங்கள். தாராளமயம் பேசும் சமூகங்களில் ஒழுக்கக்கேடுகள் வியாபித்து நிற்கின்றதே ஏன்? அவர்கள் பேசும் சுதந்திரம் ஏன் நேர்மறையான விளைவுகளை ஏற்படுத்தாமல் - எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துகின்றது?

அவரின் கேள்விகளுக்கு என்னால் பதிலளிக்க இயலவில்லை. சுதந்திரம் குறித்து அவர் தந்த விளக்கத்தை ஒப்புக் கொண்டேன். இஸ்லாமிய வழி காட்டல்கள் முஸ்லிம் சமூகத்தில் மனித நேயத்தை வளர்க்கின்றன. ஆதலால், அவை சுதந்திரத்துக்கு குறுக்கே நிற்பதாக புரிந்து கொள்ளப்படவில்லை என்பதை அவர் எனக்கு தெளிவுபடுத்தினார்.

**இறையில்லத்தில் நுழைந்தேன்**

ஒரு நாள் நானும் அபூஹுஸைனும் ஷாப்பிங் சென்றோம். அப்போது தொழுகை நேரம் குறுக்கிட்டது. அபூஹுஸைன் அருகில் இருந்த பள்ளிவாசலுக்கு தொழச் சென்றார். நானும் மஸ்ஜிதுக்குள் சென்றேன். வெளிப்பள்ளியில் நின்று தொழுகையை கவனித்தேன். மிகுந்த அமைதி எனக்குள் ஏற்பட்டதாக உணர்ந்தேன். மேலும் முஸ்லிம்கள் தங்களின் பள்ளிவாசலில் முஸ்லிமல்லாதவர்களை அனும திப்பார்கள் என்றும் புரிந்து கொண்டேன்.

இன்னொரு சமயம் வேறொரு சவூதி நண்பருடன் ஷாப்பிங் சென்றபொழுது இதே மாதிரி தொழுகை நேரம் வந்தது. நான் வெளிப்பள்ளிவாசலில் நிற்கிறேன். நீங்கள் உள்பள்ளியில் தொழுது விட்டு வாருங்கள் என்றேன். அப்போது அவர் கேட்டார். டொனால்டு! நீங்கள் எங்களுடன் தொழலாமே? படைத்த இறைவனிடம் பாவமன்னிப்பையும், மெய்யான வழி காட்டலையும் கேளுங்கள். அவ்வளவுதான் என்றார். முஸ்லிம்களின் அணியில் நின்று தொழுதேன். ஆறுதலும், மனநிறைவும் கிடைத்தது. அதற்கு முன்பு அப்படி ஒன்றை நான் உணர்ந்ததில்லை. இந்நிகழ்வில் இருந்து இஸ்லாத்தை ஏற்கா மலேயே முஸ்லிம்களுடன் தொழக் கூடியவனாக ஆனேன்.

**எனக்கிருந்த தடைகள்**

முஸ்லிம்களுடன் பள்ளி வாசலுக்கு சென்று தொழும் வழக்கம் எனக்கு ஏற்பட்டாலும் இஸ்லாத்தை பகிரங்கமாக ஏற்பதற்கு எனக்கு பல தடைகள் இருந்தன. எனது குடும்பத்தை இழந்து விடுவேனா? என்னுடன் நட்புடன் உள்ள எனது பழைய அமெரிக்க கிறிஸ்தவ நண்பர்களை இழந்து விடுவேனா? என்ற அச்சம் முக்கிய காரணம்.அத்துடன் இஸ்லாத்தை ஏற்றால் முழுமையாக வாழ்க்கை முறையை மாற்ற வேண்டியது வரும். ஒரு சில தீமைகளை வேண்டுமானால் கைவிடலாம். முழுமையாக மாறுவது என்பது எப்படி முடியும்? இத்தகைய தயக்கம் இரண்டாவது காரணம். எனினும் இஸ்லாமிய பழக்கவழக்கங்கள் மனதிலும், ஆத்மாவிலும் இனிமையாக இருப்பது அதிகரித்துக் கொண்டே போனது.

**வாழ்க்கையின் நோக்கம் எது?**

ஒரு நாள் அபூஹுசைனின் வீட்டில் அரபு நண்பர்கள் சிலருடன் பேசிக் கொண்டிருந்தோம். அப்போது அவர்கள் எனக்கு ஒரு வீடியோவை போட்டுக் காண்பித்தனர். அதில் ஒரு கேள்வி இடம்

பெற்றது. அது வாழ்க்கையின் நோக்கம் என்ன? என்ற கேள்வியாகும். என்னால் அக்கேள்விக்கு பதில் தர இயலவில்லை. இதுவரை அப்படி ஒரு கேள்வியை நான் சந்தித்ததே இல்லை.

வீடியோவில் பேசியவரே பதில் தந்தார். வாழ்க்கையின் நோக்கம் இஸ்லாமாகும். இஸ்லாம் என்றால் அமைதியை ஏற்படுத்துதல் என்பது பொருள். அதாவது இறைவனின் விருப்பத் திற்கிணங்க உலகில் முழுமையான அமைதியை ஏற்படுத்துவதாகும் என்றார்.

சிக்கலான கேள்விக்கு சுருக்கமான வரிகளில் அவர் பதிலளித்தது என்னை வியப்பில் ஆழ்த்தியது. மேலும் அவர் சொன்னார். படைத்த இறைவனிடம் இஸ்லாம் மட்டுமே ஒப்புக் கொள்ளப்படும் மார்க்கம். (காண்க அல்குர்ஆன் 3:19)

அம்மார்க்கம் குறிப்பிட்ட இனம், குறிப்பிட்ட பாலினம், குறிப்பிட்ட நாட்டு மக்களுக்கு மட்டும் சொந்தமானதல்ல.. மாறாக இஸ்லாம் ஒரு சர்வதேச மார்க்கம் என்றார்.

**மீடியாக்கள் பரப்பும் இஸ்லாம்**

இவ்வீடியோவை காண்பதற்கு முன்புவரை இஸ்லாத்தைப் பற்றி தவறாக புரிந்து வைத்திருந்தேன். அது மீடியாக்களின் வழியாக நான் விளங்கி வைத்த இஸ்லாமாகும்.

ஆனால் இவ்வீடியோவை பார்த்த பின்பு மீடியாக்கள் பரப்பும் இஸ்லாம் வேறு; உண்மையான இஸ்லாம் வேறு என்று புரிந்து கொண்டேன். இதற்கு முன்பு சத்தியத்தின் தேடலில் இருந்துள்ளேன். ஆனால் எனது தேடலில் ஒரு போதும் இஸ்லாம் இருந்ததில்லை. இப்போது இஸ்லாம் தான் சத்திய மார்க்கம் என்பதை புரிந்து கொண்டேன்.

**முஸ்லிம்களை வைத்து இஸ்லாத்தை புரிந்துகொள்வதா?**

இஸ்லாம் உயர் ஒழுக்கங் களையும், சிறந்த அறநெறிகளையும் போதிக்கின்றது. இஸ்லாம் போதிக்கும் அத்தகைய உயர் அறநெறிகள் எல்லா முஸ்லிம்களிடமும் அப்படியே பிசகாமல் இருக்கின்றதா? என்றால், இல்லை என்பதே பதிலாகும்.

ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். முஸ்லிம்களும் மனிதர்கள் தான். மனிதர்கள் எல்லோரும் பாவம் செய்யக் கூடியவர்களே. ஆதலால், இஸ்லாத்தை முஸ்லிம்களை வைத்து புரிய முற்படக்கூடாது. மாறாக இஸ்லாத்தை திருக்குர்ஆன் மற்றும் இறைத்தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வழிமுறையைக் கொண்டே புரிய முற்படவேண்டும். இதனை அவ்வீடியோவின் மூலமாக அறிந்தேன். மனதளவில் இஸ்லாத்தை ஏற்கத் தயாரானேன்.

ஒரு நாள் அபூஹுசைனுடன் நடைப்பயிற்சி மேற்கொண்டேன். அப்போது இஸ்லாம் குறித்த பேச்சுவந்தது. அவர் என்னிடம் இஸ்லாத்தை ஏற்றால் என்ன? என்றார்.
நான் ‘சரி’ என்றேன். உடனே கலிமா ஷஹாதத்தை எனக்கு சொல்லிக் கொடுத்தார். நானும் அதனைக் திருப்பிக் கூறி இஸ்லாமானேன். அவர் நண்பர் களுக்கு அறிவித்தார். அவர்கள் ஒவ்வொருவராக வந்து எனக்கு வாழ்த்துக் கூறினார்கள்.

**முஸ்லிம் பெயர்**

இது நடந்து இரண்டு நாட்கள் கழித்து வெள்ளிக் கிழமை வந்தது. ஜும்ஆத் தொழுகைக்காக பள்ளி வாசலுக்கு சென்றோம். அப்போது எனது அனுமதியுடன் நான் இஸ்லாத்தை ஏற்ற நிகழ்ச்சி தொழுகைக்கு பின்பு பள்ளியில் நடந்தது. விழாவில் எனக்கு யஹ்யா என்ற பெயர் சூட்டப்பட்டது. அதன் பொருள் என்ன? என்றேன். அபூஹுசைன் சொன்னார். யஹ்யா என்றால் ‘திரு முழுக்கு யோவான்’ (John the Baptist)என்று பைபிளில் கூறப்படும் ஓர் இறைத்தூதரின் பெயர். அதன் அரபிப் பொருள் ‘வாழ்பவர்’ என்பதாகும் என்றார். அப்பெயரை நான் ஆமோதித்தேன்.

இஸ்லாத்தை ஏற்ற பிறகு புதிதாக இஸ்லாத்தை ஏற்றவர்களுக்குரிய கல்வி நிலையத்தில் இஸ்லாத்தை கற்றேன். அல்லாஹ்வின் மகத்தான அருளால் சில வருடங்களில் எனது தாயாரும் இஸ்லாத்தை ஏற்றார். முஸ்லிம் பெண்ணை திருமணம் செய்தேன்.

Source: Converts to Islam page :95

**தொடர்புக்கு :** abulhasanf@gmail.com

சந்தாதாரர்கள் தங்களது
சந்தாக்களை புதுப்பித்து
விட்டீர்களா?
98416 7

# வாசகர்களின் எண்ணங்கள்.



**மலாலாவிற்கான நோபல் பரிசு**

திறமைக்கு (நடிப்பு) கிடைத்த ஊதியம் (பரிசு).

- Mohamed Ibrahim

மலாலா ஈரானில் இருந்திருந்தால் அவளுக்கு மரணபரிசு கிடைத் திருக்கும்.

- Sams Deen

வருங்கால பாகிஸ்தான் பிரதமர் .அமெரிக்காவின் உண்மையான விசு வாசியாக திகழ்வார்..அமெரிக்கா இஸ்ரேலின் நீண்டநாள் திட்டத்தின் செயல்வீரர். இவரின் தந்தை மேற் கத்திய கலாச்சாரத்தின் ஏஜெண்ட். நிச்சயம் இவருக்கு நோபல்பரிசு கொடுக்க வேண்டும் .நீங்கள் மௌதூ திக்கும்..ஹசனுல் பன்னாக்கும். யூசுஃப் அல் கர்ளாவிக்கும் .எர்துகானுக்கும். முர்ஸிக்கும் நோபலை எதிர்பார்த்தால் அது உங்களின் அறியாமையே!

- Peer Mohamed

இஸ்லாத்தின் மீது தொடுக்கபட்ட மறைமுக போர்.

- Sheik Abdullah

ஒரு மலாலாவை காப்பாற்றிய அமெரிக்கா பல ஆயிரம் மலாலாக் களை இஸ்ரேலிய வெறி நாய்கள் சமீபத்தில் சல்லடையாக ஆக்கிய போது வேடிக்கை பார்த்தது ஏன் ? காரணம் இவளை உருவாக்கு வது அமெரிக்கா ..

- Hameed Faizal

பாலஸ்தீனத்தில் ஐ.நா.வின் பள்ளிக் கூடத்திலேயே மிஷிஸிகிணிலி குண்டுவீசி குழந்தைகளை கொன்ற போது கூட, வாயை திறக்காத மலாலா வுக்கு "அமைதிக்கான" நோபல்பரிசு என்பது தகுதியுடையதாக தெரிய வில்லை.

- Rasheed Maricar

ஒரு முஸ்லிமைப் பார்த்து என்றாவது யூதர்களும் கிரிஸ்த்தவர்களும் புகழ்ந்து விருதுகளும் பாராட்டுக்களும் வழங்கியது உண்டா. இதிலிருந்தே தெரிய வேண்டாமா அவர் உண்மையான முஸ்லிமாக இருக்க முடியாது என்று.

- Ibnu Ahmad Abu Ahmad

இயற்கை வளங்களுக்கு எதிரான போரின் விளைவுகள் எனும் தங்களின் பதிவு ஆழமான பதிவு, அல்ஹம்துலில்லாஹ், ஒரே ஒரு திருத்தம் இருவாட்சி பறவை இப் பொழுதும் மேற்கு தொடர்ச்சி மலைகளில் இருக்கிறது ... அழிந்துவிட்ட வேறு வகை பறவையினங்களும் உண்டு

Shaheed Bin Abdul

மஸ்ஜிதுகளில் கண்காணிப்பு கேமராவை நிறுவுவதற்கு எந்த நிர்பந்தமுமில்லை! என்ற தங்களின் பதிவு விழிப்புணர்வுள்ள நடவடிக்கை. முன்னேறட்டும் நம் சமுதாயம்.

Mariyam Zeena

பொதுத்தளங்களில் நாகரிகம் தேவை தங்களுடைய ஆக்கம் அருமை. நம்முடைய எழுத்து தான் நமது முகம்.முகநூலில் நமது முகம் நன்றாக இருக்க...நாகரிகமாக பதிவிடுவது அறிவுடைமை.

Rasheed Maricar

# அல் அக்ஸா பள்ளி வாசல் ஆக்கிரமிப்பு இரண்டாக்க திட்டம்



மௌலவி அபுல் ஹஸன் ஃபாஸி M.A.

இஸ்லாத்தின் வரலாற்றில் நபி (ஸல்) அவர்களின் மிஃராஜ் பயணம் மிக முக்கியமான நிகழ்வு. மிஃராஜ் பயணத் திற்கு பின்புதான் இஸ்லாத்தின் வளர்ச்சியில் பெரிய முன்னேற்றம் ஏற்பட்டது.மிஃராஜ் பயணத்தில் நபி (ஸல்) அவர்கள் மக்காவில் இருந்து புராக் எனும் வாகனத்தில் ஜெருசேலம் நகரில் உள்ள பைத்துல் முகத்தஸ் பள்ளிவாசலுக்கு மேற்கொண்ட பயணத்தை இஸ்லாமிய அறிஞர்கள் 'இஸ்ரா' என்று குறிப்பிடு கின்றனர்.இப்பயணத்தை திருக் குர்ஆனில் வல்லோன் அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுவான்.

> “அல்லாஹ் மிகப் பரிசுத்தமானவன். அவன் முஹம்மது (ஸல்) அவர்கள் எனும் தனது அடியாரை கஅபவாகிய) சிறப்புக் குரிய பள்ளி வாசலில் இருந்து வெகு தூரத்தில் உள்ள பைத்துல் முகத் தஸிலுள்ள) அல் அக்ஸா பள்ளி வாசலுக்கு ஒரே இரவில் அழைத்துச் சென்றான்.”
>
> (அல்குர்ஆன் 50:1)

உலகெங்கும் வாழும் இஸ்லாமியர்களால் வருடந்தோறும் ரஜப்பிறை 27ல் மிஃராஜ் இரவு நினைவு கூறப்படுகின்றது. அல் அக்ஸா பள்ளி வாசல் இன்றி மிஃராஜ் இரவைப் பற்றி பேச இயலாது.

### அல் அக்ஸாவும் அல்லாஹ்வின் தூதரும்

உலகில் அல்லாஹ்வை வணங்குவதற்காக கட்டப்பட்ட பள்ளிவாசல் களில் இரண்டாவது பள்ளிவாசல் அக்ஸா பள்ளி வாசலாகும்.

> “அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்க ளிடம் உலகில் முதலில் அல்லாஹ்வை வணங்கிட கட்டப்பட்ட பள்ளிவாசல் எது? என்று கேட்கப்பட்டது. நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். புனித கஅபா. பின்பு இரண்டாவது எது? என்று கேட்கப்பட்டது. நபி (ஸல்) அல் அக்ஸா பள்ளி வாசல் என்று பதிலளித்தார்கள்.” (புகாரி, முஸ்லிம்)

அது மட்டுமல்ல.. புனித கஅபா வுக்கு வந்து ஹஜ் செய்பவருக்கு எவ்வாறு அல்லாஹ் அவரின் பாவங்களை மன்னித்து அன்று பிறந்த பாலகரைப் போன்று திரும்புவாரோ அதே போன்று அல் அக்ஸா பள்ளிவாசலுக்கு தொழுதுவிட்டு செல்பவரும் பாவங்கள் மன்னிக்கப்பட்டு அன்று பிறந்த பச்சிளம் பாலகரைப் போன்று திரும்ப வேண்டும். இது நபி சுலைமான் (அலை) அவர்களின் பிரார்த்தனை.

அவர்களின் இப்பிரார்த்தனை நிறைவேற நான் ஆதரவு வேண்டும் என்றார்கள் அல்லாஹ்வின் தூதர். (நூல் : இப்னு மாஜா)

அதுமட்டுமல்ல ஹிஜ்ரத் செய்து மதீனாவுக்கு வந்த பின்பு ஆரம்பத்தில் சுமார் 16 மாதங்கள் ஐந்து வேளைத் தொழுகைக்கு அல்அக்ஸாவை நோக்கியே தொழுது வந்தார்கள்.இந்த அடிப்படை யில் முஸ்லிம்களின் முதல் கிப்லா எனும் சிறப்பை பெற்றதும் அல்அக்ஸாவே.

### முஸ்லிம்களின் கரங்களில் அல்அக்ஸா

உலகின் இரண்டாவது பள்ளி வாசலும், முஸ்லிம்களின் முதல் கிப்லாவுமான அல்அக்ஸா பள்ளிவாசல் இரண்டாம் கலீஃபா உமர் (ரழி) அவர்களின் ஆட்சிக் காலத்தில் அஜ்னாதைன் யுத்த வெற்றிக்குப் பின்பு ஹிஜ்ரி 15 ஆம் ஆண்டு கலீஃபா உமர் (ரழி) அவர்களிடம் ஒப்படைக்க ப்பட்டது. (காண்க வைகறை ஆகஸ்ட் 2014)

அன்று முதல் இன்று வரை அல்அக்ஸா பள்ளிவாசல் முஸ்லிம்களின் ஆலயமாகத் தான் இருந்து வருகிறது.

### கேம்ப் டேவிட் ஒப்பந்தம்

*1978* ஆம் ஆண்டு செப்டம்பர் *17* ஆம் தேதி எகிப்து அதிபர் அன்வர் சாதாத் மற்றும் இஸ்ரேல் பிரதமர் மெனாச்சம் பெகின் இடையே அமெரிக்கா அதிபர் ஜிம்மி கார்டர் ஏற்பாட்டில் உருவான ஒப்பந்தம் கேம்ட் டேவிட் ஒப்பந்தம்.

மேற்கு கரையையும், காசா பகுதியையும் முழுமையாக இஸ்ரேலுக்கு தாரை வார்ப்பதற்கு வழிசெய்ததால் இவ்வொப்பந்தம் முஸ்லிம்களால்



அப்போதே நிராகரிக்கப்பட்டது.

*1967* ஆம் ஆண்டு நடந்த அரபு - இஸ்ரேல் ஆறு நாள் யுத்தத்தில் தான் ஜோர்டானிடமிருந்து மேற்கு கரையில் உள்ள ஜெருசேலம் நகரம் கைப்பற்றப் பட்டது.ஜெருசேலம் நகரில் தான் புனித அல்அக்ஸா பள்ளிவாசல் இருந்தது. முஸ்லிம்களின் முதல் கிப்லாவான அல்அக்ஸாவை மனதில் கொள்ளாமல் இஸ்ரேலுக்கு தாரை வார்த்ததால் உலக முஸ்லிம்களின் வெறுப்புக்கும் - மன கொதிப்புக்கும் ஆளானார் அன்வர் சாதாத். விளைவு படுகொலை செய்யப்பட்டார்.

ஜெருசேலம் நகரத்தை இஸ்ரேல் கைப்பற்றிய பிறகு ஜெருசேலம் நகரிலும், அல் அக்ஸா பள்ளிவாசலிலும் இரத்தங்கள் சிந்த தொடங்கின.வலதுசாரி சியோனிச தீவிரவாதிகள் அல்அக்ஸா பள்ளிவாசலில் தொழுகை நேரத்தில் நுழைந்து தொழுகையாளிகளை சுட்டுக் கொல்லும் அவலங்கள் நிகழந்தன.

இஸ்ரேல் பிரதமாக இருந்து பின்பு எட்டு ஆண்டுகள் கோமாவில் இருந்து கடந்த ஆண்டு மரணித்த ஏரியல் ஷெரோன் அல்அக்ஸா பள்ளிவாசலில் துப்பாக்கிச் சூடு நடத்தியும், ஷாப்ரா - ஷாத்திலா அகதிகள் முகாம் படுகொலை களின் மூலமாகவும் புகழடைந்து பதவியைப் பிடித்த ஒருவரே.

இஸ்ரேல் அரசின் பாதுகாப்புடன் தினம்



தினம் துப்பாக்கிச் சூடு நடந்த போதும் அல்அக்ஸா பள்ளிவாசலில் தொழுவதை முஸ்லிம்கள் நிறுத்த வில்லை. அல்அக்ஸாவுக்கு இமாம் நியமிப்பது உட்பட பல விஷயங்களில் தடைகளை ஏற்படுத்தி வந்தது இஸ்ரேல். பலத்த கெடுபிடிகளுக்கு மத்தியில் சொற்பமான ஊதியங்களில் எளிமையாக பணியாற்றி வந்தார்கள் அல்அக்ஸா இமாம்கள். இன்றும் அல்அக்ஸா இமாம்கள் எளிமையான கோலத்தில் இருப்பதை அங்கு செல்பவர்கள் காணலாம்.

### அல்அக்ஸா பள்ளிவாசலைப் பிரிக்க திட்டம்

ஜெருசேலம் நகரைக் கைப்பற்றி பிறகு முஸ்லிம்கள் மிகுதியாக வாழ்ந்த அந்நகரை இரண்டாக ஆக்கி அதன் மேற்குப் பகுதியில் யூதர்களை அடா வடியாக குடியமர்த்தியது இஸ்ரேல். முஸ்லிம்கள் அடர்த்தியாக வாழ்ந்த அந்நகரில் யூதர்களை பெரும்பான்மை யினராக ஆக்கிட வேண்டும் என்பதே இஸ்ரேலின் நோக்கம்.

ஜெருசேலம் நகரை இரண்டாக்கி தனது நோக்கத்தை நிறைவேற்றிய இஸ்ரேலுக்கு அல்அக்ஸா பள்ளிவாசலும் கண்களை உறுத்தி வந்தது. அதனையும் இரண்டாக்கி பின்பு முழுப் பள்ளி வாசலையும் அபகரிக்க வேண்டும் என்பதற்கு சதித் திட்டங்களை தீட்டியது.அமெரிக்காவின் நரித் தனத்துடன் இத்திட்டத்தை செயல்படுத்த முடிவு செய்தது.

### அல்அக்ஸாவை பிரிக்க சம்மதிக்காத யாசர் அரஃபாத்

*1990* களில் உலக முஸ்லிம்களின் ஹீரோவாக இருந்தவர் பி.எல்.ஓ தலைவர் யாசர் அரஃபாத். நமது தமிழகத்தில் கூட *1990* களில் பிறந்த பெரும்பான்மை ஆண் குழந்தைகளுக்கு 'யாசர் அரஃபாத்' பெயர் இருப்பதற்கு இதுவே பின்னணி.

அமெரிக்க அதிபராக இருந்த பில் கிளிண்டன் முன்னிலையில் இஸ்ரேல் பிரதமர்



எகுத் பராக் மற்றும் பாலஸ்தீன அதிபர் யாசர் அரஃபாத் இடையே நடந்த பேச்சுவார்த்தையே கேம்ப் டேவிட் 2000.

இப்பேச்சுவார்த்தையில் அல் அக்ஸாவை பிரிப்பதற்கு அரஃபாத் சம்மதிக்கவில்லை.ஆதலால் இப்பேச்சு வார்த்தை தோல்வியில் முடிந்ததாக கருதப்பட்டது.

அச்சமயத்தில் வெள்ளை மாளிகை யில் உள்ள ஓவல் ( oval room) அறையில் வரையப்பட்டிருந்த வரைபடத்தில் அல்அக்ஸா எப்படி பிரிக்கப்பட வேண்டும் என்று வரையப் பட்டிருந்தது.பேச்சுவார்த்தை தோல்வி யில் முடிந்ததால் அப்போது அது கைவிடப்பட்டது.

### அல்அக்ஸாவை பிரிப்பதற்கு கர்ளாவி கடும் கண்டனம்

கேம்ப் டேவிட் ஒப்பந்தம் நடந்து 47 ஆண்டுகளுக்கு பின்பு, அல்அக்ஸா பிரிப்பு வரைபடம் வரையப்பட்டு 14 ஆண்டுகளுக்க பின்பு கடந்த பிப்ரவரி மாதம் இப்பிரச்சினையை இஸ்ரேல் கிளப்பியது. அப்போதே இதற்கு கடும் ஆட்சேபம் தெரிவித்தார் சர்வதேச இஸ்லாமிய பேரறிஞர் டாக்டர் யூசுஃப் அல்கர்ளாவி.

21.02.14 ஜும்ஆ உரையில் இவ்வாறு குறிப்பிட்டார் கர்ளாவி."அல் அக்ஸா பள்ளிவாசலை முஸ்லிம்களுக்கும் - யூதர்களுக்கும் இடையே இடம்- காலம் அடிப்படையில் பங்கு போட திட்ட மிடுவதாக தெரிகிறது. இஸ்லாமியர்கள் இதற்கு சம்மதிக்கக்கூடாது.

ஏற்கனவே பாலஸ்தீனத்தில் கலீல் நகரில் உள்ள மஸ்ஜித் இப்ராஹீமை இப்படித் தான் இழந்தோம்.பாதி முஸ்லிம்களுக்கு இன்னொரு பாதி யூதர்களுக்கு என அது பிரிக்கப் பட்டுள்ளது.

முதலில் பிரித்து தொழுகை நடத்தப்பட்ட அப்பள்ளிவாசலில் 2000ம் ஆண்டு முதல் சனிக்கிழமைகளில் லுஹர் பாங்கு சொல்ல தடை, யூதப் பண்டிகை காலங்களில் எல்லா தொழுகைகளுக்கும் தடை என இஸ்ரேல் பயங்கரவாத அரசு அடாவடி செய்து வருகிறது.

ஆதலால், நேரத்தின் அடிப் படையிலோ அல்லது காலத்தின் அடிப் படையிலோ மஸ்ஜிதுல் அக்ஸாவை முஸ்லிம்கள் பங்கு போட அனுமதிக்கக் கூடாது.

ஏனெனில், மஸ்ஜிதுல் அக்ஸா வரம்பு மீற அனுமதிக்கப்பட்டால் மஸ்ஜிதுல் ஹராமிலும் வரம்பு மீறப்படும் நிலை உருவாகலாம்.இரண்டும் ஒரே வசனத்தில் கூறப்பட்டவை என்பதை இஸ்லாமிய உம்மத் நினைவில் கொள்ள வேண்டும்." (காண்க வைகறை மார்ச் 2014 பக் 32)

சியோனிச விசுவாச அறிஞர்களில் சிலரும், ஸலஃபி அறிஞர்கள் சிலரும், ஜோர்டான் அரசும் அல்அக்ஸாவை பங்கு போடுவதற்கு சம்மதம் தெரிவித்ததற்கு மறுப்பாகவே இவ்வாறு கர்ளாவி பேசியது குறிப்பிடத்தக்கது.

### அல்அக்ஸா பள்ளிவாசல் மோதலின் பின்னணி

யூதப் பண்டிகைகளில் ஒன்று சுகூத் (Sukkot).நிழல் பண்டிகை என்பது பொருள்.செப்டம்பர் கடைசி வாரத்தில் இருந்து அக்டோபர் கடைசி வாரம் வரை கொண்டாடப்படும் இப்பண்டிகையில் அல்அக்ஸா வளாகத்தில் நுழைந்து ரகளையை உண்டாக்குவது யூதர்களின் வழக்கம்.

இஸ்ரேல் உருவான 1948 ஆம் ஆண்டில் இருந்து இத்தகைய ரகளையை அல்அக்ஸா வளாகத்தில் முஸ்லிம்கள் சந்தித்து வருகிறார்கள்.( அல்ஜஸீரா 14.10.14)

இவ்வருடம் காசாப் போரில் ஹமாசிடம் தோற்று உலக அரங்கில் கேவலப்பட்ட இஸ்ரேல் மேற்கு கரையில் உள்ள முஸ்லிம்களை கொல்வதற்கு



தேர்ந்தெடுத்த இடமே அல்அக்ஸா பள்ளிவாசலாகும்.

இவ்வருடம் தொடங்கிய இப்பண்டிகையில் அல்அக்ஸா வளாகத் தில் வலதுசாரி சியோனிச குழுக்களை அதிகளவில் அனுமதித்தது.விளைவு முஸ்லிம்களுக்கும் - வலதுசாரி குழுக்களுக்கும் மத்தியில் அல்அக்ஸா வளாகத்தில் வன்முறைகள் நடந்தன. வன்முறையில் 32 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர்.வலதுசாரி யூத மத குரு ஒருவரும் கொல்லப்பட்டார்.

### அல்அக்ஸா பள்ளிவாசலை பூட்டிப் போட்ட இஸ்ரேல்

அல்அக்ஸாவை முஸ்லிம்கள் கைப்பற்றிய காலத்தில் இப்போது வரை தொழுகை நடக்கும் பள்ளிவாசலாகவே அது இருந்து வருகிறது.1967 ஆம் ஆண்டு ஜோர்டானிடமிருந்து ஜெருசேலம் நகரைக் கைப்பற்றிய பின்பு இது நாள் வரையிலும் அல்அக்ஸாவில் தொழுகைக்கு அனுமதி மறுக்கப்பட்டதில்லை.

ஆனால் ரப்பி கொலையைக் காரணம் காட்டி கடந்த *30.10.14* வியாழக்கிழமை ஃபஜ்ரு தொழுகை முதல் *31.10.14* ஃபஜ்ரு தொழுகை வரை இமாம் உட்பட யாரையும் பள்ளிவாசலில் அனுமதிக்காமல் அடாவடி செய்து தடுத்தது இஸ்ரேல்.

### கர்ளாவி கடும் கண்டனம்

அல்அக்ஸா பூட்டப்பட்ட நிகழ்வு உலக முஸ்லிம்களை கடும் கொந்தளிப்புக்கு ஆளாக்கியது. பாலஸ்தீனத்தின் காசா உட்பட எல்லா நகரங்களிலும், அரபு நாடுகளில் ஜோர்டான் , எகிப்து நாடுகளிலும் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.ஜோர்டான் பாராளுமன்றத்தில் இஸ்ரேலுக்கு எதிர்ப்பு தெரிவிக்கப் பட்டது.கர்ளாவியைத் தலைமையாகக் கொண்டு இயங்கும் சர்வதேச இஸ்லாமிய அறிஞர்கள் அமைப்பு இதற்கு கடும் கண்டனம் தெரிவித்தது.

அவ்வமைப்ப வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியதாவது, " இஸ்ரேல் அல்அக்ஸா பள்ளிவாசல் உள்ளேயும், அதன் வளாகத்திலும் வன்முறையில் ஈடுபட்டு வருகின்றது.அல்அக்ஸாவை பாதுகாப்பதற்காக ஜெருசேலம் படுகொலைகளையும், சிறைத் தண்டனை களையும் சந்தித்து வருகின்றார்கள். நாளுக்கு நாள் இது அதிகரித்தே வருகின்றது.ஆனால் உலக நாடுகள் மட்டுமல்ல முஸ்லிம் நாடுகளும் இது விஷயத்தில் மௌனமாகவே உள்ளன. பாலஸ்தீன பிரச்சினை, அல்அக்ஸா பிரச்சினை, ஜெருசேலம் பிரச்சினை இவை அனைத்தும் அரபுலகம் மற்றும் முஸ்லிம் உலகம் தீர்வு காண வேண்டிய பிரச்சினைகள்." (அல்ஜஸீரா *03.11.14*)

பாலஸ்தீன விடுதலை அமைப்பான ஹமாஸ் இஸ்ரேலின் அடாவடியை வன்முறையை கண்டித்ததோடு, மூன்றாவது இன்திஃபாழாவுக்கு அழைப்பு விடுத்தது.



### அல்அக்ஸா மூடப்பட்ட விவகாரம்: கிறிஸ்தவர்கள் கண்டனம்

பாலஸ்தீனத்தில் சியோனிச ஆக்கிரமிப்பு யூதர்களுக்கும் - முஸ்லிம்களுக்கும் மோதல்கள் நடந்து வந்தாலும் பாலஸ்தீனத்தில் காசா மற்றும் மேற்கு கரையில் வாழும் கிறிஸ்தவர்களும் - முஸ்லிம்களும் ஒற்றுமையாகவே வாழ்ந்து வருகிறார்கள்.

கடந்த ஆகஸ்டு மாதம் நடந்த காசா - இஸ்ரேல் போரில் காசா பகுதியில் உள்ள சுமார் *70* பள்ளிவாசல்கள் தரைமட்டமாக்கப்பட்டன அச்சமயத்தில் ரமழான் மாதத்தில் முஸ்லிம்கள் சிறப்பு தொழுகை நடத்தவும், பள்ளிவாசலை குறி வைத்து தாக்கி முஸ்லிம்களை கொன்ற

தால் முஸ்லிம்களை பாதுகாக்கவும், காசாவில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் தங்களின் தேவாலயங்களை தொழுகை நடத்திட முஸ்லிம்களுக்குத் தந்தார்கள்.

கிறிஸ்தவர்களின் சர்ச்சுகளில் திருக்குர்ஆன் ஓதி தராவீஹ் தொழுகை நடத்தப்பட்ட அதிசயங்கள் இவ்வருடம் காசாவில் நடந்தது. இச்செய்தி அல்குத்ஸ் பத்திரிக்கையில் புகைப்படத்துடன்



வெளியிடப்பட்டிருந்தது.

அது மட்டுமல்ல..போரில் தோற்ற பின்பு முஸ்லிம்களையும் - கிறிஸ்தவர்களையும் பிரிப்பதற்கு மொழி அடிப்படையிலான பிரிவினைவாதத்தை இஸ்ரேல் தூண்டி விட்டது. கிறிஸ்தவர்களின் மூல மொழி அராமிக் மொழி.அரபு முஸ்லிம்களின் மொழி.ஆதலால் பாலஸ்தீன கிறிஸ்த வர்கள் அரபி மொழியை கைவிட்டு விட்டு அராமிக் மொழியை உருவாக்கினால் இஸ்ரேல் அரசு உதவி செய்யும் என்றார் இஸ்ரேல் அமைச்சர்களில் ஒருவர்.

அரபு மொழியே எங்களின் தாய் மொழி.உங்களைப் போன்று செத்துப் போன வழக்கொழிந்த மொழியை உயிர்ப்பிக்க நாங்கள் தயாரில்லை என்றன பாலஸ்தீன கிறிஸ்தவ தேவாலயங்கள்.இப்போது அல்அக்ஸா மூடப் பட்ட விவகாரத்திலும் பாலஸ்தீன கிறிஸ்தவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

**கர்தினால் ஹன்னா**

பாலஸ்தீன கிறிஸ்தவ ஆர்த்தோடக்ஸ் ஆலயங்கள் தலைவர் கர் தினால் ஹன்னா இதனை வன்மையாக கண்டித்துள்ளார் .பாலஸ்தீன முஃப்தி முஹம்மது ஹுசைன் அவர்களை சந்தித்த பின்பு ஹன்னா கூறியதாவது,

“அக்அக்ஸா பள்ளிவாசல் முஸ்லிம்களின் வணக்கஸ்தலம்அதனை பூட்டிப் போடு வதையோ, அதன் வளாகத்தில் துப்பாக்கிச் சூடு நடத்துவதையோ ஏற்க இயலாது .பாலஸ்தீனத்தில் உள்ள கிறிஸ்த வர்களும், முஸ்லிம்களும் அந்நகரில் இருந்தே ஒன்றான



தங்களின் நாகரிகத்திற்கும் - புனிதத் தலங்களுக்கும் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலை எதிர்த்துப் போராடுவார்கள். இதில் உறுதியாக நிலைத்து நிற்பார்கள்.

கடைசியில் ஹன்னா இவ்வாறு குறிப்பிட்டார்.“ ஆக்கிரமிப்பையும், அதன் முரட்டுத்தனத்தையும் நாங்கள் ஏற்க மாட்டோம்.“ *(அல்குத்ஸ் 03.11ஃ14)*

**எர்துகான் கடும் கண்டனம்**

அல் அக்ஸா பள்ளி வாசல் வன்முறைக்கு துருக்கி அதிபர் டாக்டர் ரஜப் தய்யிப் எர்துகான் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். வன்முறையை இஸ்ரேல் நிருத்த வேண்டும். இல்லையெனில் ஐ.நா. பாதுகாப்பு அவையில் இதனை எழுப்புவோம் என்றார்.

முன்னரே கடந்த **5.11.2014** புதன் கிழமை அன்று பாலஸ்தீன் அதிபர் மஹ்மூத் அப்பாஸிடமும், ஹமாஸ் அரசியல் தலைவர் கால்த் மிஷ்அலிடமும் தொலைபேசியில்



தொடர்பு எர்துகான் இத்தகவலை அவ்விரு வரிடமும் தெரிவித்தார்.

டெய்லி சபாஹ் - *06.11.2014*

**தொடர்புக்கு : ABULHASANF@GMAIL.COM**

# தரீக்குல் குர்ஆன்

## அத்தியாயம் : அல்பகரா
## வசனங்கள் : 102, 103



மௌலவி இல்யாஸ் ரியாஜி

சுலைமானின் ஆட்சி குறித்து ஷைத்தான்கள் ஓதிக்காட்டியதையே அவர்கள் (இஸ்ரவேலர்கள்) பின்பற்றினர். சுலைமான் நிராகரிக்கவில்லை. எனினும் ஷைத்தான்களே நிராகரித்தனர். மக்களுக்கு சூனியத்தை நகரத்திலிருந்த ஹாரூத் மாரூத் என்ற இரு மலக்குகள் (வானவர்கள்) மீது (சூனியம்) இறக்கப்படவில்லை. அவ்விருவரும் 'நாங்கள் (இறைவன் அனுப்பிய) சோதனையாக இருக்கிறோம். எனவே, நீங்கள் இறை மறுப்பாளர்களாகிவிட வேண்டாம்' என்று கூறாமல் யாருக்கும் (எதையும்) கற்பிக்கவில்லை. ஆனால் அவர்கள் (இஸ்ரவேலர்கள்) ஒரு மனிதருக்கும் அவரின் மனைவிக்குமிடையே பிரிவு ஏற்படுத்தக்கூடியதை அவ்விருவரிடமிருந்தும் கற்றனர். அதன்மூலம் அல்லாஹ்வின் உத்தரவின்றி யாருக்கும் அவர்கள் தீங்கு செய்திட இயலாது. அவர்கள் தமக்குப் பயன்தராத, தீங்கிழைப்பதையே கற்கின்றனர். இதை(சூனியத்தைக் கற்று)ப் பெற்றுக்கொண்டவனுக்கு மறுமையில் எந்த பாக்கியமும் கிடைக்காது என்பது அவர்களுக்கும் தெரியும். எதற்குப் பகரமாக தம்மை அவர்கள் விற்றார்களோ அது மிகத் தீயது. இதை அவர்கள் அறிந்திருக்க வேண்டுமே..!

அவர்கள் இறை நம்பிக்கையுடனும் இறையச்சத்துடனும் திகழ்ந்தால் அல்லாஹ்விடமிருந்து (அவர்களுக்குக் கிடைக்கும்) நற்கூலி சிறந்ததாகும். (இதையும்) அவர்கள் அறிந்திருக்க வேண்டுமே...!

### விரிவுரை

இறைத் தூதர் சுலைமான் (அலை) அவர்கள் (கி.மு.1032 - கி.மு.975) ஒரு பேரரசர். முழு உலகையும் ஆண்டவர். பென்னம் பெரும் அரசாட்சியின் அதிபர். நீதியாளர். நேர்மையின் வழியில் ஆட்சி நடத்தியவர். இதனால் அல்லாஹ் அவர்களுக்கு தன் அருட்கொடைகளை வாரி வழங்கியிருந்தான்.

காற்றும் வலிமைமிகு ஜி ன்களும் அவர்களுக்கு வசப்பட்டிருந்தன. பறவைகளின் மொழியும் அவர்களுக்குத் தெரியும். இஸ்ரவேல் சமுதாயத்தின் இறைத்தூதரும் அரசருமான சுலைமான் நபி மீது இஸ்ரவேலர்களே பொறாமை கொண்டனர்.

"சுலைமான் ஒரு சூனியக்காரர். சூனியத்தை அவர் அறிந்து அதன்மூலமே இவ்வளவு பெரிய அரசாட்சியை அவர் தனதாக்கிக் கொண்டிருக்கிறார்" என்று கூறினர் இஸ்ரவேலர்கள். அவர்களிடம் இறை வேதமாம் தவ்ராத் இருக்க, அதை விட்டுவிட்டு சூனியம் எனும் ஷைத்தானிய கலையைப் பின்பற்றவே அவர்கள் விரும்பினர். இதற்காக அவர்கள் பல பொய்களையும் புனைவுகளையும் பரப்பினர்.

"பாபிலோன் என்ற நகரத்திலுள்ள இரு

வானவர்கள் மீது சூனியம் என்ற கலை இறக்கப்பட்டுள்ளது. இது அல்லாஹ் அவர்களுக்கு இறக்கி வைத்த கலைதான். அவ்விரு மலக்குகளிடமிருந்து நாங்கள் சூனியக்கலையை கற்றிருக்கிறோம்" என்றும் அக்கால இஸ்ரவேலர்கள் கூறினர்.

இதன்மூலம் அவர்கள் இறைவேதம் எனும் சிறந்த நேர்வழி காட்டியைக் கையில் வைத்துக்கொண்டே ஆபத்தான, பயனில்லாத சூனியத்தைக் கற்றனர். பரப்பினர். பின்பற்றினர்.

சூனியம் என்பது ஒரு இறை மறுப்புக் கலை. அதனால் ஆபத்து உண்டு. பயன் இல்லை. இவ்வுலகில் அதைச் செயல்படுத்துவோருக்கு மறுஉலகில் எந்த நற்பாக்கியமும் கிடைக்காது. என்னதான் ஒருவர் இன்னொருவருக்குச் சூனியம் செய்தாலும் அல்லாஹ்வின் கட்டளையை மீறி யாரும் யாருக்கும் தொந்தரவு தந்திட இயலாது. சுலைமான் நபி சூனியம் கற்கவில்லை. ஹாரூத், மாரூத் என்ற இரு மலக்குகளுக்கு சூனியம் இறக்கப்படவுமில்லை. சுலைமான் நபிக்கு விரிந்து பரந்த, அதிகாரம் குவிந்த அரசை அல்லாஹ்வே உவந்தளித்தான். இதில் சூனியத்துக்கு சற்றும் பங்கில்லை. இதுவே உண்மை.

சூனியம் என்பது என்ன? அது எப்படி வேலை செய்கிறது? அதனால் ஏற்படும் ஆபத்துக்கள் என்ன? அது எப்படியெல்லாம் ஈமான் என்ற இறைநம்பிக்கையைக் கெடுத்து அதை நம்பக்கூடியவர்களை காபிர்களாக - இறை மறுப்பாளர்களாக மாற்றுகிறது என்பதையெல்லாம் அங்குள்ள மக்களுக்குப் போதிப்பதற்காக அல்லாஹ் பாபிலோன் நகருக்கு இரு வானவர்களை அனுப்பினான்.

சூனியத்தைப் பற்றி அறிந்திட தம்மிடம் வருபவர்களிடம் அவ்விருவரும் "நாங்கள் கற்பிக்கும் சூனியம் செயல்படுத்துவதற்கல்ல. சூனியம் எவ்வளவு ஆபத்துக்கள் நிறைந்தது என்று நீங்கள் புரிந்துகொள்ளத்தான். எனவே, இதன் ஆபத்துககளைப் புரிந்தபின் இதிலிருந்து விலகி விடுங்கள். இதை செயல்படுத்தி விடாதீர்கள். செயல்படுத்தினால் இறை மறுப்பாளராகி விடுவீர்கள்" என்று எச்சரித்த பிறகே அதைக் கற்றுக் கொடுத்தனர்.

இறை வேதங்கள் வானத்திலிருந்து இறைத்தூதர்களுக்கு இறக்கப்பட்டதைப் போல சூனியம் பாபிலோனிலுள்ள வானவர்களுக்கு வானத்திலிருந்து இறக்கப்பட்டிருக்கவில்லை. ஏனெனில் இறைவேதமும் சூனியமும் ஒன்றல்ல.

ஹாரூத் மாரூத் என்ற இரு மலக்குகளும் சூனியத்தின் விளைவுகளையும் ஆபத்துக்களையும் அல்லாஹ்வின் கட்டளையை மீறி சூனியம் செயல்படுவதில்லை. அல்லாஹ்வின் கட்டளையே வலிமையானது. இதற்கு முன்னால் சூனியம் பலவீனமடைந்துவிடும் என்பதையெல்லாம் எடுத்துக் கூறி மக்களைத் திருத்திட வந்தவர்களே.

அவ்விருவரின் வருகையும் அவர்களின் போதனைகளும் சோதனைகளே. அதாவது அவ்விருவரிடமிருந்தும் உண்மையைக் கற்றுச் சென்றவர்கள் சூனியத்தின் யதார்த்தத்தைப் புரிந்து திருத்துகின்றார்களா? அல்லது சூனியத்தைப் பின்பற்றுகிறார்களா? என்பதே அந்த சோதனை. இஸ்ரவேலர்கள் அல்லாஹ் வைத்தச் சோதனையில் தோற்றார்கள். சூனியத்தைச் செயல்படுத்தினார்கள்.

இறை வேதத்தை வைக்க வேண்டிய இடத்தில் சூனியத்தை வைத்தனர் அதைப் பின்பற்றுவோருக்கு மறுமையில் எந்த பாக்கியமும் கிடைக்கப் போவதில்லை என்று தெரிந்து கொண்டே சூனியத்தைப் பின்பற்றினர் யூதர்கள்.

ஷஹீத் ஸெய்யித் குதுப் (ரஹ்) கூறுகின்றார்கள்: யூதர்கள் தம்முடைய வேதமான தவ்ராத்-ஐ உண்மைப்படுத்தும் வகையில் அல்லாஹ் இறக்கியுள்ள குர்ஆன்

என்ற வேதத்தை விட்டுவிட்டு சுலைமான் நபியின் ஆட்சிக் காலத்தைப் பற்றி ஷைத்தான்கள் கூறுகின்றவற்றைப் பின்பற்றப் போய்விட்டனர். "சுலைமான் நபி ஒரு சூனியக்காரர். அவருககு எவையெல்லாம் வசப்பட்டிருந்தனவோ அவை அனைத்தையும் சூனியத்தின்மூலமே அவர் வசப்படுத்தியிருந்தார்" என்றெல்லாம் யூதர்கள் சுலைமான் நபி பற்றிக் கூறி மக்களை வழி கெடுத்திருந்தனர். அக்கால யூதர்களின் வழிகேடுகளையே (நபியின் காலத்தில் வாழ்ந்த) யூதர்கள் பின்பற்றினர்.

"சுலைமான் நிராகரிக்கவில்லை" என்ற வாக்கியத்தின்வழியாக "சுலைமான் சூனியக்காரர்" என்ற பொய்யை மறுக்கிறது திருக்குர்ஆன். மேலும்,சூனியத்தையும் அதனை பயன்படுத்துவதையும் (குஃப்ர்) இறை மறுப்புக்கு ஒப்பிடுகிறது.

இப்படிப்பட்ட இறைமறுப்பை சுலைமான் நபி செய்யவில்லை. "மக்களுக்கு சூனியத்தைக் கற்பித்து ஷைத்தான்களே நிராகரித்தனர்" என்று கூறி இறை நிராகரிப்பு ஷைத்தான்களுடையது என்று உறுதி செய்கிறது.

மேலும், பாபிலோனில் தங்கியிருந்த ஹாரூத் மாரூத் என்ற இரு வானவர்கள் மீதும் அல்லாஹ்விடமிருந்து சூனியக்கலை இறக்கப்படவில்லை என்று குர்ஆன் கூறுகிறது .

ஷைத்தான்கள் என்று இவ்வசனத்தில் கூறப்பட்டிருப்பது நெருப்பால் படைக்கப்பட்ட ஜீன் இனத்தைச் சார்ந்த ஷைத்தான்களையே குறிக்கும் அல்லது ஷைத்தானின் வேலைகளைச் செய்து கொண்டிருக்கும் தீய மனிதர்களை (யூதர்களை)க் குறிக்கும். அதுபோல மலக் (வானவர்) என்பதும் ஒளியால் படைக்கப்பட்ட வானவர்களைக் குறிக்கும் அல்லது மலக்குகள் போன்று நற்பணிசெய்யும் நல்ல மனிதர்களைக் குறிக்கும் என்று சில விரிவுரையாளர்கள் கூறியுள்ளனர்.

ஷஹீத் ஸெய்யித் குதுப் (ரஹ்) கூறுகின்றார்கள்: ஹாரூத், மாரூத் பற்றி வரலாறு யூதர்கள் மத்தியில் பிரபலமானது தான் என்பது இங்கே தெளிவாகத் தெரிகிறது.

"அவ்விருவரும் சூனியம் தெரிந்தவர்கள். மக்களுக்கு அதைக் கற்பித்தவர்கள்! அதுஅல்லாஹ்வே தங்களுக்கு இறக்கி வைத்த கலை என்று கருதியவர்கள்" என்றெல்லாம் தீய யூதர்கள் அல்லது ஷைத்தான்கள் கூறிவந்தனர். இவை அனைத்தும் பொய் என்கிறது குர்ஆன்.

அவ்விரு மலக்குகளும் ஏதோ ஒரு நுண்ணிய மறைவான சோதனைக்காக வந்தவர்களே. "நாங்கள் சோதனையே" என்று கூறாமல் யாருக்கும் அவர்கள் கற்றுத்தரவில்லையல்லவா?

சூனியத்தைக் கற்றுச் செயல்படுத்தி இறை மறுப்புக்கு ஆளாகி விடாதீர்கள் (ஃபலா தக்ஃபுர்) என்று இரு மலக்குகளும் எச்சரித்தபிறகும் கூட சிலர் அதைக் கற்றே தீருவது என்று அடம்பிடித்துக் கற்றனர். இதனால் சோதனைக்கு ஆளாயினர்.

"அல்லாஹ்வின் உத்தரவு இன்றி யாருக்கும் அவர்கள் தீங்கு செய்திட இயலாது" என்று குர்ஆன் கூறுகிறது. இதில் இஸ்லாத்தின் அடிப்படைத் தெளிவாகக் கூறப்படுகிறது. அல்லாஹ்வின் நாட்டமின்றி எதுவும் நடப்பதில்லை என்பதே அந்த அடிப்படை.

ஆம். அல்லாஹ்வின் உத்தரவுடன் தான் காரணங்கள் செயல்படுகின்றன. விளைவுகள் ஏற்படுகின்றன. இந்தக் கொள்கைத் தெளிவு ஒவ்வொரு இதயத்திலும் முழுமையாக இருந்திட வேண்டும்.

ஒரு உதாரணத்தைப் பாருங்கள். நெருப்பில் நீங்கள் கை வைத்தால் உங்கள் கை கரிந்து விடுகிறது. எனினும் அல்லாஹ் நாடாமல் உங்கள் கை கரிந்து போவதில்லை. ஏனென்றால், நெருப்புக்கு எரிக்கும் குணத்தை தந்தவன் அல்லாஹ்தான். உங்கள் கைக்கு

கரியும் தன்மையைத் தந்தவனும் அவனே. அவன் நாடினால் ஏதோ ஒரு நுட்பமான காரணத்துக்காக இந்த தன்மைகளை செயல்படாமல் வைத்துவிடவும் முடியும். இறைத்தூதர் இப்ராஹீம் நெருப்புக் குண்டத்தில் வீசப்பட்டபோது இதுதான் நடந்தது.

சூனியமும் இப்படித்தான். இதை வைத்து கணவன் - மனைவி இடையே பிரிவினை ஏற்படுத்திட அவர்கள் முனைந்தனர். அல்லாஹ்வின் நாட்டப்படி அது நடக்கிறது. அல்லாஹ் நாடினால் ஏதோ ஒரு நுட்பமான காரணத்துக்காக அதை செயல்பட முடியாமல் தடுத்துவிடுவான்.

உலகில் எவையெல்லாம் பாதிப்பை ஏற்படுத்தும் என்று நாம் நினைக்கிறோமோ அவை அனைத்தும் இப்படித்தான். அதற்குரிய குணத்துடன் அது செயல்பட அல்லாஹ் அனுமதிக்கிறான். அதன் செயலை நிறுத்திடும் வலிமை அல்லாஹ்வுக்கு உண்டு.

இறை வேதத்தைத் தூக்கி எறிந்து விட்டு எந்த சூனியத்தின் பின்னால் யூதர்கள் ஓடினார்களோ எதன்மூலம் கணவன் - மனைவி பிரிவினையை ஏற்படுத்தினார்களோ அந்த சூனியம் பற்றி கொஞ்சம் பேச வேண்டிய இடம் இதுதான்.

எல்லா காலக்கட்டங்களிலும் சில காட்சிகளைப் பார்க்க முடிகிறது. அதாவது சில மனிதர்களுக்கு சில சிறப்பியல்புகள் இருக்கின்றன. அவற்றுக்கு பெயர்தான் வைக்க முடிகிறதே தவிர அவை பற்றி முழுமையாகப் புரிந்திட முடிவதில்லை.

எங்கோ தொலைதூரத்திலிருக்கும் ஒருவரை, பார்க்கவோ குரல் கொடுத்து அழைக்கவோ இயலாத தூரத்திலிருக்கும் ஒருவரை அழைக்கும் ‘டெலிபதி’ என்ற உணர்வு, எப்படி சாத்தியமாகிறது?

மெஸ்மெரிஸம் மூலம் உறக்கத்திலாழ்த்துவது எப்படி நடக்கிறது? ஒருவரின் விருப்பத்தை, சிந்தனையை இன்னொருவர் எப்படி தீர்மானிக்க முடிகிறது, ஆதிக்கம் செலுத்த முடிகிறது? ஆனால், இவை நடந்து கொண்டுதானிருக்கிறது.

மெஸ்மெரிஸம் என்றும் டெலிபதி என்றும் பெயர் வைத்துக் கொள்கிறோமே தவிர அது எப்படி நடக்கிறது என்று முழுமையாக புரிந்துகொள்ள முடியவில்லை. இதுபோல ஏராளமானவை உள்ளன.

சிலர் இதை மறுக்கலாம். இப்படிப்பட்ட மனோரீதியான ஆற்றல்களை மறுக்க முயல்பவர்கள் முன்னறிவிப்பாக வரும் கனவுகளை மறுக்க முடியாது. யாராலும் அறிந்து கொள்ள முடியாத எதிர்காலத்தைப் பற்றிய கனவுகளை ஒருவர் காண்பதுண்டு. பிறகு சில காலம் கழித்து அவர்கள் கண்ட கனவு அப்படியே பலித்திருக்கும். இதெல்லாம் எப்படி நடக்கிறது?

இந்த மறைமுகமான உணர்வுகளுக்கெல்லாம் எந்தப் பெயரும் இருப்பதில்லை. ஆனால், அவை நடந்து கொண்டுதானிருக்கின்றன.

ஒருவரால் எப்படி உணரமுடிகிறது? ‘இன்னும் சில காலத்தில் இப்படி நடக்கும்’ என உணர்கிறார். அதுபோல் நடக்கிறது. ‘ஒருவர் விரைவில் வருவார்’ என உணர்கிறார். அதுபோல் நடக்கிறது!

நடந்து கொண்டிருக்கும் ஒருவிஷயம் நமக்குப் புரியவில்லை என்பதற்காக அதை அடியோடு மறுப்பதும் அப்படி ஒன்று இல்லை என்பதும் ஆணவம், அடம்.

இப்படிக் கூறுவது அசத்தியக் கோட்பாடு ஒன்றை ஏற்றுக் கொள்வதாகவோ கட்டுக்கதையின் பின்னால் ஓடுவதாகவோ ஆகிவிடாது. பேணுதலான நிம்மதியான வழி என்னவென்றால் இதுபோன்ற புரிந்துகொள்ள முடியாத விஷயங்களில் முடிவான எந்தக் கருத்தும் கூறாமலிருப்பதே.

இன்ஷா அல்லாஹ் தொடரும்...

# மோடியின் அமெரிக்க பயணம்

# அற்புதமா? அவமானமா?



வகுப்பு கலவரங்களை நடத்தி, 6200 மாணவர்களை இணையத்தில் அமர்த்தி பொய் பித்தலாட்டங்களை பரப்பி, ஆப்கோ எங்கின்ற பன்னாட்டு கம்பெனியின் துணையோடு ஆட்சிக் கட்டிலில் அமர்ந்த மோடி செப்டம்பர் 27 - ஆம் தேதி முதல் அக்டோபர் 2 - ஆம் தேதி வரை ஐந்து நாள் அரசுமுறை பயணமாக அமெரிக்கா சென்று வந்துள்ளார்.

இந்த மோடி ஏற்கனவே அமெரிக்கா செல்ல விசா கோரிய போதெல்லாம் மத சுதந்திரத்திற்கு எதிரான கடுஞ்செயலில் ஈடுபடக்கூடிய வெளிநாட்டு அரசு அதிகாரிகளுக்கு அமெரிக்காவில் நுழைய தடைவிதிக்கும் சட்டமான அமெரிக்கா சர்வதேச மதச்சுதந்திர சட்டம் மற்றும் குடியேற்றச் சட்டம் 212(A) (2) (G) ஆகிய சட்டங்களின் அடிப்படையில் குஜராத் தில் மோடி செய்த முஸ்லிம்களுக் கெதிரான படுகொலை யினை காரணம் காட்டி விசாவினை அமெரிக்கா நிராகரித்து வந்துள்ளது.

இந்த சட்டத்தின் படி இது நாள் வரை விசா நிராகரிக்கப்பட்டுள்ள ஒரே நபர் மோடி மட்டுமே! இதே அமெரிக்கா இலட்சக்கணக்கான முஸ்லிம்களை உலகம் முழுவதும் கொன்று வருவது தனிக்கதை. ஆக உலக மகா ரவுடி உள்ளூர் பேட்டை ரவுடிக்கு சட்டம் பேசியதும், ஒரு மாநிலத்தின் முதல்வருக்கு விசா நிராகரிக்கப்பட்டதும் இந்திய போலி ஜனநாயகத்திற்கு வந்த சோதனையிலும் சோதனை.

ஒரு வழியாக ஆப்கோவின் உதவியால் பிரதமர் ஆன பிறகு தனது இந்தி சந்தையின் கொத்தடிமைத் தலைவரை அதாவது முன்பு விசா நிராகரித்த அதே சாட்சாத் மோடியை அமெரிக்கா வருமாறு அமெரிக்கா ஏகாதி(பை)பத்திய அரசின் அதிபர் ஒபாமா அழைப்பு விடுத்தார். மோடி யாரும் தனது எஜமானருக்கு விசுவா சத்தினை காட்ட அமெரிக்கா செல்வ தற்கு முன்பாக செப்.19 ஆம் தேதி புற்று நோய் மாத்திரையின் விலையை 8,500 ரூபாயிலிருந்து ஒரு இலட்சத்து எட்டாயிரம் ரூபாயாகவும், இரத்த அழுத்தம் மற்றும் நெஞ்சு வலிக்கு உள்ள மாத்திரை 147 ரூபாயிலிருந்து 1,615 ரூபாயாகவும், இன்னும் பல அத்தியாவசிய மருந்துகளின் விலையினை மனிதாபிமானமற்ற முறையில் ஏற்றி தனது விசுவாசத்தினை காட்டியுள்ளார். (சவப்பெட்டி வாங்குவதில் ஊழல் செய்தும், நிரை மாத கர்பினியின் வயிற்றை அறுத்து சிசுவை கொளுத்தி யவர்களிடம் மனிதாபிமானம் எதிர் பார்ப்பது நம்மின் அறியாமையே )

விசுவாசம் காட்டி தனது நாட்டிற்கு வந்த மோடியை அமெரிக்காவும் தன்னால் முடிந்த மட்டில் அலட்சியப்படுத்தியுள்ளது. அங்குள்ள மனித உரிமை ஆர்வலர்களும், தன்னால் முடிந்த மட்டில் எதிர்ப்பினை காட்டியும்,




நீதிமன்றத்தில் மோடி குற்றவாளி கூண்டில் நிற்பது போலவும் அவருக்கு நீதிபதி தண்டனை வழங்குவது போலவும் நாடகங்களை நடத்தி கேவலப் படுத்தியுள்ளனர்.

### மோடியை அலட்சியப்படுத்திய அமெரிக்கா

ஒரு நாட்டின் பிரதமர் அரசு முறை பயணமாக இன்னொரு நாட்டுக்கு செல்கிறார் என்றால் அவரை வரவேற்க அந்த நாட்டின் முதல் நிலை அரசியல் தலைவர்களான அதிபரோ அல்லது துணை அதிபரோ அல்லது அந்த நாட்டின் செயலாளரோ வரவேண்டும் இதில் அமெரிக்காவில் மோடியை வரவேற்க யாருமே வரவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. ஒரு நாட்டின் பிரதமர் அரசுமுறை பயணமாக வந்தால் அவர் நாடாளுமன்ற கூட்டுக்குழுவில் உரையாற்றுவது வழக்கம் இந்த வாய்ப்பும் மோடிக்கு அமெரிக்கா அளிக்கவில்லை.

### மோடிக்கு எதிராக மக்களின் போராட்டமும் மக்கள் நீதிமன்ற விசாரணையும்

அமெரிக்கா சென்ற மோடிக்கு எதிராக மனித உரிமை ஆர்வலர்கள் பல்வேறு போராட்டங்களின் மூலம் தங்களின் எதிர்ப்பை தெரிவித்தனர். மேடிசன் சதுக்கத்தில் மோடி உரை நிகழ்த்திய வேலையில் சதுக்கத்துக்கு வெளியே ஆயிரக்கணக்கில் மக்கள் கூடி எதிர்ப்பு போராட்டத்தை நடத்தினர். அதேபோல வாஷிங்டனில் உள்ள வெள்ளை மாளிகைக்கு மோடி வருகை தந்த வேலையில் வெள்ளை மாளிகைக்கு எதிரில் உள்ள லாஃபாட்டி பூங்காவில் 2002 - இல் நடந்த இனப்படுகொலை தொடர்பாக சீக்கியர்கள் நீதியமைப்பு என்ற மனித உரிமை ஆணையம் ஏற்பாடு செய்திருந்த மக்கள் நீதிமன்ற விசாரணை நடைபெற்றது. வெள்ளை மாளிகையில் அமெரிக்க அதிபர் ஒபாமாவுடன் விருந்து உண்ணும் அதே வேளையில் மக்கள் நீதிமன்றத்தில் மோடி மீது விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அப்போது முகமூடி அணிந்த ஒருவர் மோடி மாதிரி நீதிமன்ற குற்றவாளிக் கூண்டில் நிற்க, நீதிபதி முன்பு பாதிக்கப்பட்ட மக்கள் சாட்சி கூறினர். வழக்கறிஞர்கள் ஒருவர் மோடி மீதான குற்றச்சாட்டை வரிசைப்படுத்திக் கூறிக்கொண்டு இருந்தார். இந்த நிகழ்ச்சிக்காக நியூயார்க்கின் முக்கிய இடங்களில் விளம்பர போர்டுகள் வைக்கப் பட்டிருந்தன. ஆதலால இந்நிகழ்ச்சிக்கு மக்கள் கூட்டம் கூட்டமாக வந்திருந்தனர். இந்நிகழ்ச்சி அமெரிக்கா முழுவதும் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது.

மொத்தத்தில் மோடி அமெரிக்காவில் இருந்த 5 நாட்களிலும், போராட்டக்காரர்கள் இரவு பகலாக தொலைக்காட்சியில் விவாதங்கள் மற்றும் பத்திரிக்கையில் வாசகர் கடிதங்கள் என மக்களுக்கும் இந்தியாவில் சிறுபான்மை யினருக்கும் எதிராக நடக்கும் கொடுமை கள் அதற்கு மோடி அரசு எந்த அளவிற்கு துணை போகிறது என்ற விவரத்தை மக்களிடம் கொண்டு சேர்த்தனர்.

இந்திய பிரதமர் ஒருவருக்கு அதிகமான அவமதிப்பு இழைக்கப் பட்டது என்றால் அது அமெரிக்காவில் மோடிக்கு இழைக்கப்பட்டது தான் என சமூக ஆர்வலர்கள் கருத்து தெரிவிக் கின்றனர்.

இத்துணை நடந்த பின்னும் மோடிக்கு அமெரிக்காவில் சென்ற இடமெல்லாம் சிறப்பாக இருந்ததாகவும், விட்டால் கழிவறையில் கூட சிகப்பு




கம்பளம் விரிப்பவர்களாகவும் கூட மோடியின் அடிவருடிகள் கூறுவார்கள். சினிமாக்காரர்களின் உடல் அங்குலங் களை விற்று காசாக்குவது மட்டுமே தொழில் என்று எண்ணக்கூடிய மீ(மோ)டியாக்களோ முழு பூசணிக்காயை சோற்றில் மறைப்பது போன்று இவ்வனைத்தையும் மூடி மறைத்துள்ளனர். மொத்தத்தில் மோடி அமெரிக்கா சென்று கேவலப்பட்டிருப்பது மொத்த இந்தியா விற்கும் அவமானமே.

**– ஹாரிஸ் முஹம்மது.**



# தாலிபானின் பிடியில்

யுலான்னி ரிட்லி.

மு. குலாம் முஹம்மது
அவர்களின்
எளிய தமிழ் நடையில்

**விலை ரூ.90/-**

**தொலைப்பேசி**

**9841675657 , 044 25664887.**

# பெருமானார் [ஸல்] அவர்கள் நமது காலத்திற்காக அனுப்பப்பட்ட நபி.



தொடர் - 2

# ஜிஹாத்

**கரன் ஆம்ஸ்ட்ராங்.**

முஹம்மத் [ஸல்] அவர்கள் ஓர் பின்பற்றதக்க முன் மாதிரி அவர்களுடைய வாழ்க்கை முஸ்லிம்கள் மட்டுமல்ல மேலை நாட்டவர்களும் பின்பற்றத் தக்க முன்மாதிரியான வாழ்க்கை. அவர்களுடைய வாழ்க்கை ஒரு ஜிஹாத். அதை நாம் அடுத்து வரும் பக்கங்களில் பார்த்திட இருக்கின்றோம்.

ஜிஹாத் இந்த சொல்லுக்கு (மேலை நாட்டவர்கள் கொச்சைப்படுத்திப் பேசும்) புனிதப்போர் என்பதல்ல பொருள். இதன் பொருள் தொடர்ந்து எடுக்கப்படும் முயற்சிகள் -கொட்டப்படும் உழைப்பு - [இந்த பொருளில்] ஜிஹாத் செய்து முஹம்மத் (ஸல்) அவர்கள் போர்களால் பிளந்தும், பிரிந்தும், ஊனப்பட்டும் கிடந்த அரேபியாவில் அமைதியை - நிலையான அமைதியை நிலைநாட்டினார்கள்.

இதற்காக முஹம்மத் (ஸல்) அவர்கள் தொடர்ந்து உழைத்துக் கொண்டே இருந்தார்கள். எதிர் பட்ட சவால்களையும், எதிர்ப்புகளையும் எதிர்கொண்டு முன்னேறிக் கொண்டே இருந்தார்கள். இன்றைக்கு உலகம் போர்களால் சிதைந்து சின்னாப்பின்னமாகிக் கொண்டிருக்கின்றது. இன்றைய காலக்கட்டத்தில் நமக்கு அவரைப் போல் முயற்சிகளை மேற்கொள்பவர்கள் அவசரமாக தேவைப் படுகிறார்கள். அவர்களுடைய வாழ்க்கை, பேராசை, அநீதி, ஆணவம், குலப்பெருமை,இனப்பெருமை, கோத்திரப் பெருமை, இவற்றிற்கு எதிராக நடந்த தொய்வில்லா, ஓய்வில்லா தொடர் போராட்டம். அவர்கள் இந்த ஜிஹாதை செய்திட ஒருபோதும் தயங்கியதோ, தளர்ந்ததோ இல்லை.

அரேபியா ஒரு திருப்பு முனையில் நிற்கின்றது என்பதை அவர்கள் உணர்ந்தார்கள்.பழைய சிந்தனைகள் பலன் தரமாட்டா என்பதையும் அவர்கள் உணர்ந்தார்கள். அதனால் ஆக்கப் பூர்வமான புதியத் தீர்வுகளை அவர்கள் தந்தார்கள்.இன்று செப்டம்பர் 11க்கு பின் நாம் ஒரு புதிய சகாப்தத்திற்குள் புகுந்திருக்கின்றோம். நாமும் (முஹம்மத் (ஸல்) அவர்களைப் போல் மிகுந்த சிரத்தையுடன் ஆக்கப்பூர்வமான புதிய பாதைகளை வித்யாசமான பாதைகளை வகுத்தெடுக்க வேண்டும்.

ஆச்சர்யப்படத்தக்க அளவில் அரேபியாவில் 7 ஆம் நூற்றாண்டில் நடந்த நிகழ்வுகள் நமது காலத்தில் நடப்பவற்றிற்கு பாடம் சொல்லித் தருவனவாக அமைகின்றன. அந்த அரபு மக்களிடமிருந்த காட்டுமிராண்டி தனங்கள், காட்டு தர்பார்கள், நமது அரசியல் வாதிகளிடம் அனுவும் பிறழாமல் அப்படியே இருக்கின்றன. ஆதனால் முஹம்மத் (ஸல்) அவர்களின் பண்பு நலன்களோடு அவர்களின் முயற்சிகள் நமக்கு இன்றும் முன் மாதிரியே. அவை அப்படியே தேவைப்படுகின்றன. மக்களை இந்த மாதோன்மத்தர்களிடமிருந்து மீட்க! முஹம்மத் (ஸல்) அவர்கள் மதப் பழைமைவாதங்களை மக்களிடையே திணிக்க முயற்சிகளை மேற்கொள்ள வில்லை. வெற்று வேதாந்தங்களையும் பேசிக்கொண்டிருக்கவில்லை. அவர்கள் மக்களின் மனங்களையும், சிந்தனை களையும் மாற்றிட உழைத்தார்கள். அன்று அந்த மக்களிடையே புழக்கத்தில் இருந்தவற்றை அவர்கள் ஜாஹிலிய்யா அறியாமையின் இருள் என்றே அழைத்தார்கள். இதனை முஸ்லிம்களும் அறியாமை இருள் மண்டிக்கிடந்த காலம் என்றே அழைக்கின்றார்கள். இது அரேபியாவில் இஸ்லாத்திற்கு முந்திய காலம்.



இவற்றில் தற்போது பல ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த ஆராய்ச்சிகளில் முஹம்மத் (ஸல்) அவர்கள் ஜாஹிலிய்யா என்ற சொற்றொடரை வரலாற்றின் ஒரு காலக் கட்டத்தைக் மட்டும் குறிப்பிடவில்லை. மாறாக வன்முறை, பயங்கரவாதம், தீவிரவாதம், ஆண்டான் அடிமை என்ற மனநிலை, கொலைப்பாதகங்கள், தீமைகள், பாவங்கள், இவற்றை செய்யும் மனநிலை, ஆகியவற்றை செயல்படுத்தி கொண்டிருக் கும் காலக் கட்டங்கள் அனைத்தையும் உள்ளடக்கித்தான் அந்தச் சொற்றொடரைப் பயன் படுத்தினார்கள். இவை செயலில் இருக்கும் காலக்கட்டங் களெல்லாம் அறியாமை இருள் மண்டியக் காலம்தான். ஜாஹிலிய்யாதான்.

நான் அடித்துக் கூறுவேன். மேலை நாடுகளில் இஃது நிரம்பவே பரவிக் கிடக்கின்றது. [அதாவது மேலை நாடுகள் அறியாமை இருளில் மூழ்கிக் கிடக்கின்றன.] இதனால் முஹம்மத் (ஸல்) அவர்கள் காலங்களைக் கடந்த ஒரு மாமனிதர் ஆகிவிட்டார். அவர்கள் எல்லா காலக் கட்டத்திற்கும் வழிகாட்டிட வல்லவர்கள். அவர்கள் தான் வழ்ந்த காலக்கட்டத்தில் ஆழமாக வேரூன்றி மிகைத்து நின்றார்கள் என்றில்லை, அவர் எல்லாக்காலத்திற்கும் வழிக்காட்டிவிட்டே சென்றார்.

முஹம்மத் (ஸல்) அவர்களை நாம் எப்போது சரியாக புரிந்துக் கொள்வோம் என்றால், அவர்கள் எதையெல்லாம் எதிர்த்து நின்றார்கள் என்பதை புரிந்து கொள்ளும் போதுதான். அவர்களின் சாதனைகளை எப்போது நாம் ஏற்றுக் கொள்வோம் என்றால் அவர்கள் எதையெல்லாம் அதாவது எந்தெந்த மடமைகளையும், தீமைகளையும் வென்று காட்டினார்கள் என்பதைப் புரிந்து கொள்ளும்போதுதான்.

நாம் இன்று எதிர்நோக்கும் அவலங்களுக்கு முஹம்மத் (ஸல்) அவர்கள் எப்படி வழிகாட்டுகின்றார்கள் என்பதை அறிந்துகொள்ள நாம், 1400 ஆண்டுகளுக்கு முன் அவர்கள் வாழ்ந்த குரூரமான காலக்கட்டத்திற்குள்ளும், பாவங்களும், குற்றங்களும், பேதமைகளும், நிறைந்து நின்ற உலகுக்குள்ளும் புகுந்திட வேண்டும். அவற்றை அறிந்திட வேண்டும். அதன் மூலம் தெளிவுகளையும் வழிகாட்டுதல்களையும் புரிந்திட வேண்டும். நெருப்பாய் கனன்ற அந்த உலகில் அந்த அரேபியாவில் ஒரு மலைப் பொதும்பில் அவர்கள் நபித்துவத்தை பெற்றார்கள். அந்த ஒளிக்கீற்றால் அங்கு செருக்கோடு ஆட்சிச் செய்துக் கொண்டிருந்த மௌட்டீகங்களை எதிர்த்தார்கள். அதனை தன் காலின் கீழே போட்டு மிதித்தார்கள் மனித மாண்புகளை மக்கள் பெற்றிடச் செய்தார்கள். அறியா மையையும் புரட்டிப் போட்டார்கள். வாழும் தலைமுறைக்கும், வரும் தலைமுறைக்கும் வழிகாட்டினார்கள். அது எப்படி என்று அடுத்த இதழில் காண்போம் இன்ஷா அல்லாஹ்......

**-எம்.ஜி.எம்**



# பெண்கள் நடத்திய பெண்களுக்கான பெருநாள் சந்திப்பு ( ஈத் மிலன் ) நிகழ்ச்சி!

மதுரையில் பெண்களுக்காக பெண்களால் நடத்தப்பட்ட ஈத்மிலன் நிகழ்ச்சி 24.08.2014 அன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 7 மணியளவில் இறையருளால் சிறப்பாக நடந்தது.இந்நிகழ்ச்சி தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்டின் - மஜ்லிஸுன் நிஷா என்ற பெண்கள் அணியினரால் நடத்தப்பட்டது.இந்த நிகழ்ச்சியில் சகோதர சமுதாயத்தை சார்ந்த 110 பெண்கள் கலந்துக் கொண்டார்கள்.அதில் 70 பெண்கள் மாற்று மத சகோதரிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சியில் இறையியல் ஆசிரியை சகோதரி சபுரானி ஆலிமா அகர்கள் ' இஸ்லாம் ஓர் அறிமுகம் ' என்ற தலைப்பில் சிற்றுரையாக சிறப்புரை ஆற்றினார்.இவரது உரை தெளிவாகவும் அழகாகவும் இருந்ததாக வந்திருந்த சகோதரிகளால் பாராட்டப்பெற்றது.உரையைத் தொடர்ந்து கலந்துரையாடல் நடந்தது. அதில் பல்வேறு ஐயங்கள் தெளிவுப்படுத்தப்பட்டன.

நிகழ்ச்சியில் சிறு கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பெண்களே உஷார், பாதுகாப்பான ஆடை, சிந்தனைக்கு சில, அப்பாவிகள், தீர்வை நோக்கி, போன்ற சில தலைப்பின் கீழ் கருத்துப் பலகைகள் காட்சிப்படுத்தப் பட்டிருந்தன. இவை அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது.இறுதியில் விருந்து நிகழ்ச்சியோடு மாலை 9.30 மணியளவில் நிகழ்ச்சி இனிதே முடிவடைந்தது.

இந்த நிகழ்ச்சி பல்வேறு தரப்பினரின் கவனத்தை ஈர்த்த பாராட்டுகளைப் பெற்ற விழிப்புணர்வு முகமாக அமைந்தது இதன் சிறப்பு.இவ்வரங்கு நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மதுரையை சார்ந்த தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்டின் சகோதரர்கள் மற்றும் வைகறை வெளிச்சம் வாசகர் வட்டமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

எப்போதும் போல இந்த் நிகழ்ச்சிக்கும் உளவுத்துறை ஒருவரை ஏற்பாடு செய்து அனுப்பிவைத்து தொந்தரவு செய்தது.

எது முதலில்?

ஆசிரியர்

இமாம். யூசஃப் அல் கர்லாவி.

தமிழில்

K.M.இலியாஸ் ரியாஜி. M.A

விலை : 40/-

98416 75657

# சாதி ஒழிந்தது 32 வது நூல் அறிமுக நிகழ்ச்சி!

தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் சார்பில் சாதி ஒழிந்தது நூலின் 32 ஆவது அறிமுக நிகழ்ச்சி இராமநாதபுரம் மாவட்டத்தில் நவம்பர் 2, 2014 ஞாயிறு மாலை 6.30 மணிக்கு நடைபெற்றது. மதுரை சகோதரர் ரஃபீன் திருக்குர்ஆன் ஓதி நிகழ்ச்சியை தொடங்கிவைத்தார். நிகழ்ச்சிக்கு தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்டின் தலைவர் மு.குலாம் முஹம்மது அவர்கள் தலைமை ஏற்றார்கள். நூல் அறிமுக உரையும் அவரே நிகழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து வழக்கறிஞர் பசுமலை அவர்கள் உரை நிகழ்த்தினார்கள். பின்னர் தமிழ் நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் மாவட்ட செயலாளர், திரு. முருகன் அவர்கள் உரையாற்றினார்கள். அவரது உரையைத் தொடர்ந்து பெரியார் பேரவையைச் சேர்ந்த திரு. நாகேஸ்வரன் அவர்கள் உரை நிகழ்த்தினார்கள்.

நிகழ்ச்சியை ஒருங்கினைத்த வைகறை வெளிச்சம் ஆசிரியர் மு. குலாம் முஹம்மது அவர்கள் உரை நிகழ்த்தியவர்கள் எழுப்பிய வினாக்களுக்கும், விமர்சனங் களுக்கும் பதில் சொன்னார்கள். அதனைத் தொடர்ந்து சென்னையைச் சேர்ந்த ஆடிட்டர் அப்துல் ரஹ்மான் அவர்கள் தான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட அனுபவங்கள் வழி புரட்சிப் பாதையும், தீண்டாமைக் கொடுமையிலிருந்து, காப்பாற்றிடாது. அதற்கு இஸ்லாம் ஒன்றே வழி என்பதை தெளிவுப்படுத்தினார்கள்.

அடுத்து டாக்டர் நசீரா பர்வீன் அவர்கள் உரையாற்றினார்கள். மருத்துவர் அம்மா அவர்கள். கரியூர் ஷஹீத் முஹம்மத் அலீ ஜின்னா அவர்களின் மகள். கரியூர் என்ற மொத்த கிராமத்தையும் இஸ்லாத்தின் பக்கம் கொண்டு சாதனைப் படைத்தவர் ஷஹீத் முஹம்மத் அலீ ஜின்னா அவர்கள். இதனால்தான் பாசிசத்தை பாதையாகக் கொண்டவர்களால் கொலை செய்யப்பட்டார். அந்த வகையில் அவரின்



மொத்த குடும்பமும் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டது மட்டுமல்ல. அதனை ஏனைய மக்களுக்கும் அறிமுகப்படுத்தி வருகின்றார்கள்.

இந்த பின்னணியில் மருத்துவர் நசிரா பர்வீன் அவர்களும் நிகழ்ச்சியில் பொட்டில் அறைந்தாற்போல் ஓர் உரையை நிகழ்த்தினார்கள். தன் தந்தை 25 ஆண்டுகால காவல்துறை பணியில் நூறு இடங்களுக்கு மாற்றப்பட்டார்கள். இதனால்தான் ஆண்டுக்கொரு பள்ளிக்கூடம் எனத் தன் படிப்பை சிதைத்திட வேண்டியதிருந்தது என்பதை நெஞ்சை நெகிழும் வண்ணம் சொல்லிக் காட்டினார்கள்.

அடுத்து விடுதலை சிறுத்தைகள் கட்சியைச் சார்ந்த ஜனாப் முஹம்மத் யாசீன் அவர்கள் உரை நிகழ்த்தினார்கள். முடிவாக கூரியூர் ஷஹீத் - முஹம்மத் அலீ ஜின்னா அவர்களின் மகன் குதுப்புதீன் ஐபக் அவர்கள் உரை நிகழ்த்தினார்கள். உரையில் இஸ்லாம் இப்படி ஏற்றத்தாழ்வுகளை வேரோடும் வேரடி மண்ணோடும் கில்லி எறிகின்றது என்பதை எடுத்துச் சொன்னார்கள்.

நிகழ்ச்சி நிறைவுற்ற பின்னரும் விவாதங்கள் தனித்தனியாக நடைபெற்றன. நிகழ்ச்சிகளுக்கான அடிப்படை வேலைகளை சிக்கந்தர், நீடூர் அப்துல் ரவூஃப், மதுரை நிஜாம் ஆகியோர் செய்வனே செய்து முடித்தார்கள். கொட்டும் மழையிலும் நிகழ்ச்சி நன்றாக நடந்தது. அல்ஹம்து லில்லாஹ்.

# தமிழ் நாட்டில் மஜ்லிசே முஷாவரத் மீண்டும் துவங்கப்பட்டது.

நம் நாடெங்குமுள்ள இஸ்லாமிய ஆமைப்புகள் அரசியல் கட்சிகள் இவற்றின் கூட்டமைப்பு மஜ்லிசே முஷாவரத். இதன் கிளை ஒன்று சென்னையில் இயங்கிக் கொண்டிருந்தது. சென்னை கிளையை இயக்கிக் கொண்டிருந்த டாக்டர் அப்துல் சத்தார் அவர்களை அல்லாஹ் அழைத்துக் கொண்டபின் அஃது இயங்கிடவில்லை. இப்போது அது மீண்டும் உயிர் பெற்றுள்ளது. தமிழ் நாடு ஜமாத்துல் உலமா சார்பில் வழங்கபெற்ற கஷ்மீர் நிவாரண நிதியை பெற்றிட வந்த ஜஃபருல் இஸ்லாம் கான் அவர்கள்தாம் அகில இந்திய கூட்டமைப்பாகிய இந்த அமைப்பிற்கும் தலைவர்.28, அக்டோபர் - 2014 அன்று



நிதி ஏற்பு நிகழ்ச்சியோடு இந்த சென்னை கிளையை புதுப்பிக்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றது. நிகழ்ச்சியில் யுனானி டாக்டர் செய்யது M. அமீன் அவர்கள் தமிழகக் கிளையின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். நிகழ்ச்சியில் பல்வேறு அமைப்பைச் சார்ந்தவர்களும் கலந்துக் கொண்டு சிறப்பித்தனர். நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு பணியினை S.I.M. பாஷா அவர்களும், M.G.M அவர்களும் கவனித்தார்கள்.

**நா.நீ.**

**Owned and published by M.Gulam Mohamed from 52/1, Mannady Street, Manndady, Chennai - 600 001. Editor : M.Gulam Mohamed, Printed by M.Gulam Mohamed at Chennai Offset Printers, 19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.**

# படியுங்கள்! பரப்புங்கள்!




தபால் செலவு இலவசம்!

விலை 260/-

கிடைக்குமிடம்

## வேர்கள் பதிப்பகம்

52/1, Mannady St, 4th Floor, Room No.7, Mannady, Chennai 600 001.
Tel : 044 25224887 Mob: 81481 29887

Vaigarai Velicham Tamil Monthly, RNI : TNTAM/2008/25045 Postal Registraion No TN/CNIGPO/031/2014 - 16 R.DIS. NO. 1477/07 Posted at Egmore RMS patrika channai. Date of Publication : 30th of every month.


அல்லாஹ்வின் அழகியத் திருப்பெயரால்

# தைபா ஹஜ் சர்வீஸ்

**வாருங்கள் சென்று வருவோம்! சரித்திரச் சின்னங்களை கண்டு வருவோம்!**

# ஜியாரத், உம்ரா அழைப்பு



**அல்லாஹ் கூறுகிறான் :**
**அவர்கள் பூமியில் பிரயாணம் செய்து இவற்றைப் பார்க்கவில்லையா? அவ்வாறு பார்த்திருந்தால் அவர்களுக்கு விளங்கிக் கொள்ளக்கூடிய உள்ளங்களும் நல்லவற்றைச் செவியேற்கும் காதுகளும் உண்டாயிருக்கும்.**



இறைத்தூதர்கள் புனிதப் போராளிகள் நபித்தோழர்கள் ஆகியோர் வாழ்ந்த இடங்களையும் இஸ்லாமிய வரலாற்றில் தனித்துவம் பெற்றுத்திகழும் சரித்திரச் சின்னங்களையும் நேரில் காணும் வாய்ப்பை தைபா ஹஜ்

கொடுங்கோலன் ஃபிர் அவ்னின் உடல், பிரமிடுகள், தூர் சினாய் மலை, பைத்துல் முகத்தஸ், திருக் குர் ஆன் கூறும் குகை வாசிகள் வாழ்ந்த குகை, ஈராக், ஃபலஸ்த்தீன், எகிப்து, ஜோர்டான்

**தரமான தங்குமிடம், சுவையான உணவு, கனிவான உபசரிப்பு, இபாதத்திற்கு ஏற்ற சூழல்.**

*எமது ஹஜ் வழிகாட்டி*
*மௌலானா மௌலவி*
*K.M.இலியாஸ் ரியாஜி.*

இந்திய சவுதி அரசுகளின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம்.

## TAIBA HAJ SERVICE

6/8, Second floor, Rutland Gate 2nd Street, Thousand Lights, Chennai 600 006.
TelePhone : 044 2833 2770 / 2833 0771 / 99419 30786, Fax : 2833 2769,